The People of the Ark

Vol. 84, No. 3
July–September 2008

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

முன்னுரை

அடுத்து வரும் இரு காலாண்டுகளில் உலகளாவிய ஓய்வுநாள் பள்ளி மாணாக்கர்கள் உடன்படிக்கைப் பெட்டியின் மக்களைப் பற்றியும் அதனைத் தொடர்ந்து அடைக்கலப் பட்டணம் பற்றியும் பயிலப்போகிறார்கள். இவ்விரு காலாண்டுகளுக்குரிய ஓய்வுநாள் புத்தகங்களும் பழங்கால இஸ்ரவேலர்கள் தங்கள் காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குச் செல்ல ஆயத்தமடைகையில் கண்ட அனுபவங்களிலிருந்து உயரிய அருட்சிந்தனைகளை நமக்குக் கொண்டுவரும் வகையிலும் - நமது காலத்தில் சீக்கிரமே வரவிருக்கும் நித்திய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கான முக்கியமான உவமைகளை நமக்கு முன் வைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

"இஸ்ரவேலரின் வனாந்தர ஜீவியத்தின் சரித்திரம் முடிவுகாலம் வரையில் வாழும் தேவனுடைய இஸ்ரவேலரின் நன்மைக்காகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளது. பாலைவனத்தில் முன்னும் பின்னும் அலைந்து திரிந்தவர்களுடன் தேவன் செய்த கிரியைகள், அவர்களின் பசிதாகத்திலும், சோர்விலும், அவர்களை விடுவிக்க அவர் வெளிப்படுத்திய மாபெரும் வல்லமையின் வெளிப்பாடுகளும் எல்லாக் காலங்களிலுமுள்ள அவரது மக்களுக்கு எச்சரிக்கையும் நற்போதனையும் நிறைந்தவையாய் உள்ளது. எபிரேய மக்களின் பலதரப்பட்ட அனுபவம் கானானிலுள்ள அவர்களது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வீட்டுக்குப் போக ஆயத்தப்படுத்தும் பள்ளிக்கூடமாக இருந்தது. இன்றைய நாட்களிலும் தேவன் தம் மக்களை, முற்கால இஸ்ரவேலர்கள் கடந்து வந்த சோதனைகளைப் பணிவான இருதயத்தோடும் கற்றுக்கொள்ளும் ஆவியோடும், அவர்கள் பரலோகக் கானானுக்குத் தங்களை ஆயத்தப்படுகையில் நற்போதனைகளால் போதிக்கப்படும்படிக்கு மறுபடியும் திரும்பிப் பார்க்கச் செய்கிறார்." -Patriarchs and Prophets, P. 293.

இஸ்ரவேலரின் வனாந்தரப் பயணத்தில் அவர்களுடன் சென்ற ஒரு முக்கியமான பொருள் புனிதமான உடன்படிக்கைப் பெட்டி ஆகும். எல்லா மக்களைவிடவும் வித்தியாசமானவர்களாக இருக்க அழைக்கப்பட்ட இஸ்ரவேலர்கள், வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த - மெய்யான தேவனாகிய யேகோவா கர்த்தரையே தொழுது கொண்டதால்தான் உலகம் முழுவதிலும் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாக அங்கீகரிக்கப்படவிருந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டியானது அவர்களது விசுவாசத்திற்கு ஓர் அடையாளச் சின்னமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. கிருபாசனத்தின் கீழேயும் பெட்டியின் உள்ளேயும் இருந்தவை:

1. தேவன் பத்துக் கற்பனைகளை எழுதிய கற்பலகைகள்.
2. மன்னா வைத்திருந்த கலயம்.
3. ஆரோனின் தளிர்த்த தடி.

இந்தப் பொருள்கள் அவற்றின் அர்த்தத்திலும் உட்பொருளிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் பெட்டி பரலோகத்திலுள்ள உண்மையான உடன்படிக்கைப் பெட்டியின் மாதிரியாயிருந்தது" ("The Signs of the Times, June 24, 1880) என்பதை மனத்தில் இருத்தவேண்டியதும் முக்கியமானதாகும்.

உடன்படிக்கைப் பெட்டியின் மக்கள் என்னும் இந்தக் காலாண்டின் பாடநூலில் பெட்டியிலுள்ள முதல் இரண்டு பொருள்களைப்பற்றி அறிமுகப்படுத்துவோம் அடுத்த காலாண்டின் **அடைக்கலப் பட்டணம்** என்னும் பாடநூலில் மூன்றாவது பொருள் பற்றி மேற்கொண்டு பார்ப்போம். பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்காக உண்மையான வாஞ்சையுடன் நோக்கும் விசுவாசிகளாகிய நாம், அந்த உடன்படிக்கைப் பெட்டியின் உள்ளே இருப்பது என்னவென்றும், அது நமக்கு என்ன அர்த்தத்தைத் தருகிறது என்பதையும் நிச்சயமாகவே புரிந்துகொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்.

-ஜெனரல் கான்பரன்ஸ் ஓய்வுநாள் பள்ளி இலாகா

முதல் ஓய்வுநாள் காணிக்கை

ரஷ்யாவுக்கு

ரஷ்யாவைச் சேர்ந்த பிரதேசம் 17,075,400 சகிமீ பரப்பைக் கொண்டது. இதில் 85 பகுதிகள் (பிரதேசங்கள், மாநிலங்கள் நிலப்பகுதிகள் தன்னாட்சி பெற்ற மாவட்டங்கள்) அடங்கியுள்ளன. இவற்றில் 21 பிரதேசங்களில்தான் நிகழ்கால வேத சத்தியத்தை அறிந்த கிறிஸ்தவர்கள் உள்ளனர் என்பது பரிதாபகரமானது. பெரிய நிலப்பரப்பில் பெரும்பாலும் வெகு சில சபை உறுப்பினர்களே உள்ளனர்.

இந்நாடு 145 மில்லியன் (1 கோடியே 45 இலட்சம்) மக்களைக் கொண்டுள்ளது. இவர்கள் சுமார் 160 இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்; ரஷ்யர் 79.8%, தார்தாரியர் 3.8%, உக்ரெயினியர் 2%, பஷ்கீரியர் 1.2%, சூவாஷியர் 11%, செக்கன்கள் 0.9%, ஆர்மீனியர் 0.8%, இனங்காண இயலாதோர் 10.3% பேர்.

ரஷ்யன் ஆர்த்தோடக்ஸ் (பழமைவாத) கிறிஸ்தவர், இஸ்லாம், சீர்திருத்தவாத கிறிஸ்தவர் (லுத்தரன், பாப்டிஸ்ட், ஏழாம்-நாள் வருகையினர், பெந்தேகொஸ்தே, யெகோவா சாட்சிகள்), புத்த மதத்தினர் (பெரும்பாலும் துவா, புரியாத்தியா, கல்மிகியா போன்றவற்றில்) யூதர்கள், ரோமன் கத்தோலிக்கர். மக்களில் அறுபது சதவீதத்தினர் கடவுள் மறுப்பாளர்கள்.

இன்று மிஷனரி ஊழியத்திற்கு அற்புதமான வாய்ப்புகள் உள்ளன. இவ்வட்டார விசுவாசிகள் சிலரின் மற்றும் உலகளாவிய விசுவாசிகளின் காணிக்கைகளுக்கு நன்றி! இதனால் மிஷனரி ஊழியத் தேவை மிகுந்துள்ள பகுதியாகிய யூரல் பகுதியின் தலைநகரமாகிய யெகடெரின்பர்க்கில் ஓர் ஆலயத்தைக் கட்டியுள்ளோம். ஆனால் இந்த ரஷ்யப் பகுதியின் வெவ்வேறு பகுதிகளுக்குத் தூதைக் கொண்டு வருவதற்கும் மிஷனரிகளை அங்கு அனுப்புவதற்கும் இன்றைய காலகட்டத்தில் எங்களுக்கு அதிக உதவி தேவைப்படுகிறது. ஆண்டவரின் அருளால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நமக்கு இன்னும் கொஞ்ச காலம் உண்டு; நிகழ்கால சத்தியத்தை ஒருபோதும் கேட்டிராத ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக அதைச் செலவிட விரும்புகிறோம்.

இம்மிஷனரி திட்டத்தை நிறைவு செய்ய உங்கள் ஜெபத்தினாலும் பொருளுதவியாலும் உங்கள் உதவியை செய்யும்படி கேட்கிறோம்.

இந்த முக்கியமான மிஷனரி முயற்சிக்கு நன்கொடை அளிக்கத் தயாராக இருக்கிற ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!

-ரஷ்யப் பணிக்களத்திலிருந்து உங்கள் சகோதர சகோதரிகள்.

பூரணத்துவத்தை நோக்கிச் செல்லுதல்

"ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேசங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாக்கும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ...என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக." எபிரெயர் 6:1,2.

"நாம் இன்னும் பூரணராகவில்லை; ஆனால் சுயம் மற்றும் பாவம் ஆகியவற்றின் பிடிகளிலிருந்து துண்டித்துக்கொண்டு, பூரணத்துவத்தை நோக்கி முன்னேறுவது நம்முடைய பாக்கியமாக உள்ளது." -The Acts of the Apostles, p.565.

மேலும் படிக்க: The Acts of the Apostles, pp.529-538

ஞாயிறு *ஜூன் 29*

1. கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்

அ. தனிமனிதன் ஒருவன் எவ்வாறு ஒரு கிறிஸ்தவனாக ஆகிறான்? யோவான் 3:5; 1 பேதுரு 1:23.

"இருதயத்தில் ஏற்படும் மாற்றத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாவதைப் பற்றியே பிறப்பு ஆக வேதாகமத்தில் பேசப்படுகிறது." -Steps to Christ, p. 67.

"சத்தியமானது வாழ்வில் அடியொற்றி நடக்கிற அடிப்படையாக மாறும்போது, ஆத்துமா மறுபடியும் பிறக்கிறது'...புதுப் பிறப்பு என்பது கிறிஸ்துவை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்வதன் பலனாகும். பரிசுத்த ஆவியின் மூலம் தெய்வீக சத்தியங்கள் இருதயத்தில் பதியும்போது, புதிய கருத்துகள் விழித்தெழுப்பப்படும்; அதுவரை உறங்கிக் கிடந்த ஆற்றல்கள் தேவனுடன் ஒத்துழைக்க உசுப்பப்பெறுகின்றன." -The Acts of the Apostles, p. 520.

ஆ. எபேசு பட்டண விசுவாசிகள் தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பம் முதலே எப்படிப்பட்ட அனுபவத்தைப் பெற்று மகிழ்ந்தனர்? வெளிப்படுத்தல் 2:2,3; அப்போஸ்தலர் 4:35.

"பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது சீஷர்கள் சென்று உயிர்தெழுந்த இரட்சகரைக் குறித்து அறிவித்தார்கள்; அவர்களது வாஞ்சையெல்லாம், ஆத்துமாக்களின் இறட்சிப்பாக இருந்தது. பரிசுத்தவான்களின் கூட்டு வாழ்வின் இனிமையில் அவர்கள் களிகூர்ந்தார்கள். அவர்கள் கனிவானவர்களாகவும், பிறர்நலச் சிந்தையுடையவர்களாகவும், சுயத்தை மறுதலித்தவர்களாகவும் சத்தியத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய மனமுள்ளவர்களாகவும் இருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் அன்றாடம் கூடிவருதலில் அவர்கள் வெளிப்படுத்தும்படி கிறிஸ்து அவர்களுக்குக் கட்டளையிட்ட அந்த அன்பை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். சுயநலமற்ற வார்த்தைகளாலும் செயல்களாலும் மற்ற இருதயங்களிலும் இந்த அன்பைத் தூண்டிவிட முற்பட்டார்கள்." -Testimonies, vol.8, p.241.

2. வளர்ச்சியடைதல்

அ. குழந்தைகளுக்கு வயதாக ஆக, அவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோம்? 1 பேதுரு 2:2.

"ஆண்டவர் தம்முடைய வசனத்தைப் படித்து அறியும் பாக்கியத்தை நமக்குக் கொடுப்பதன் மூலம், ஒரு கொழுமையான விருந்தை நம் முன் படைக்கிறார். அவருடைய மாம்சமாகவும் இரத்தமாகவும், அவருடைய ஆவியாகவும் ஜீவனாகவும் அவரால் உருவகித்துக் காட்டப்படும் அவருடைய வசனத்தின் நல்விருந்திலிருந்து கிடைக்கும் நன்மைகள் அநேகம் உள்ளன. இந்த வசனத்தில் பங்கேற்பதன் மூலம் நமது ஆவிக்குரிய பலம் பெருகுகின்றது; நாம் கிருபையிலும் சத்தியத்தைப்பற்றிய அறிவிலும் வளர்ச்சியடைகிறோம். சுயக்கட்டுப்பாட்டின் பழக்கங்கள் உருவாகி பலமடைகின்றன. குழந்தைப்பருவத்தின் உறுதியின்மைகள் - கோபதாபம், பிடிவாதம், சுயநலம், மரியாதையற்ற வார்த்தைகள், ஆசைமிகுந்த செயல்கள் - மறைந்து அவற்றின் இடத்தில் கிறிஸ்தவ ஆண்மை மற்றும் பெண்மையின் அழகு நயங்கள் வளர்ச்சி பெறுகின்றன." -Counsels to Parents, Teachers and Students, p. 207

ஆ. ஆவிக்குரிய பிரகாரம் பேசும்போது, ஒரு குழந்தையின் வளர்ச்சியில் ஏற்ற நல்லுணவு உட்கொள்வது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது? 2 பேதுரு 3:18; எபேசியர் 4:14,15.

"பரிசுத்தமாக்குதலின் பணி வீட்டிலே தொடங்குகிறது. வீட்டிலே கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் சபையிலும், இவ்வுலகத்திலும் கிறிஸ்தவர்களாக இருப்பார்கள்." -My Life Today, p. 261.

"நீங்கள் வளர்ச்சியடையும்படிக்கு, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல் வேத வசனத்தின் மெய்யான பாலை வாஞ்சிப்பீர்களானால், தீய பேச்சு என்னும் ஆகாரத்தில் பங்கடைவதற்கான பசிதாகம் உங்களுக்கு வராது; மாறாக அப்படிப்பட்ட எல்லா ஆகாரமும் உடனுக்குடன் ஒதுக்கித் தள்ளப்படும்; ஏனெனில், கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்தவர்கள் மடத்தனமான, போலியான, பின்னால் நின்று கடிக்கிற ஆகாரத்தில் பங்கடையமாட்டார்கள். 'இந்த ஆகாரத்தை எடுத்துப் போடுங்கள் அப்படிப்பட்ட ஆகாரத்தை உண்ண நான் விரும்பவில்லை. அது வானத்திலிருந்து வந்த அப்பம் அல்ல. அது பிசாசின் ஆவியையே தின்பதும் குடிப்பதும் ஆகும்; ஏனெனில் சகோதரர்களை நிந்திப்பவனாக இருப்பது அவனுடைய வேலையே ஆகும்' - என்று அவர்கள் வெகு தீர்மானமாகச் சொல்வார்கள்." -Fundamentals of Christian Education, p. 458.

"[தேவனுடைய பசிதாகமுள்ள மக்கள் தேவ] வசனத்தின் மீது பசியாறுகையில், அது ஆவியாயும் ஜீவனாயும் இருப்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள். வசனம் இயற்கையான, பூமிக்குரிய தன்மையை அழித்து, கிறிஸ்து இயேசுவிற்குள் ஒரு புது வாழ்வைக் கொடுக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாவிற்குள்ளே ஒரு தேற்றரவாளனாக வருகிறார். அவரது மறுரூபமாக்கும் பணியினால், தேவனுடைய சாயல் சீஷனுக்குள் மறு உற்பத்தி செய்யப்படுகிறது; அவன் ஒரு புதுச்சிருஷ்டியாகிறான். வெறுப்பின் இடத்தை அன்பு எடுத்துக்கொள்கிறது. இருதயம் தெய்வீக சாயலைப் பெற்றுக்கொள்கிறது. 'தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வசனத்தினாலும்' பிழைப்பது என்பது இதுவே (மத்தேயு 4:4). இதுதான் வானத்திலிருந்து இறங்கி வருகிற அப்பத்தைத் தின்பது என்பது." -The Desire of Ages, p.391.

3. கணக்கு ஒப்புவிக்கும் நிலைகள்

அ. நிகழ்கால சத்தியத்தில் மட்டான அறிவுடையவர்களை தேவன் எவ்வாறு நடத்துகிறார்? அப்போஸ்தலர் 17:30; யாக்கோபு 4:17.

"தூதன் கூறினான்: 'வெளிச்சம் வருமேயானால், அந்த வெளிச்சம் ஒதுக்கப்பட்டால் அல்லது தள்ளப்பட்டால், பின்னால் கடிந்துகொள்ளுதலும் தேவகோபமும் வரும்; ஆனால் வெளிச்சம் வரும் முன்பு, பாவம் இல்லை; ஏனெனில் அவர்கள் தள்ளிவிட வெளிச்சம் இல்லையே?" -Testimonies, vol.1, p.116.

ஆ. சத்தியத்தைக் கேட்கவும் புரிந்துகொள்ளவுங்கூடிய பாக்கியத்தைப் பெற்ற வர்களிடம் என்ன எதிர்பார்க்கப்படும்? நீதிமொழிகள் 4:18; எபிரெயர் 6:1,2.

"தங்களைச் சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு ஜனம், சீர்திருத்த மற்று இருப்பது ஒரு வருதத்தக்க விஷயம் ஆகும்." -The Spirit of Prophecy, Vol.4, p.185.

"தேவன் தம் மக்களிடம், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சத்தியத்திற்கும் கிருபைக் கும் தக்கவாறு எதிர்பார்க்கிறார். அவரது நீதி வேண்டுவது அனைத்தும் முழுமையா கச் சந்திக்கப்படவேண்டும். கணக்குக் கொடுக்கவேண்டியவர்கள், தங்கள் மீது ஒளிரும் வெளிச்சத்திலே நடக்கவேண்டும். அவர்கள் இதை முழுவதுமாகச் செய்யத் தவறினார் களானால், அவர்களது ஒளி இருளாகிவிடும்; அவர்களது வெளிச்சம் எந்த அளவு அதிகமாக இருந்ததோ அதைப் போலவே அவர்களது அந்தகாரமும் (இருளும்) மிகப் பெரியதாக இருக்கிறது." -Testimonies, vol.2, p. 123.

"கர்த்தருடைய ஊழியக்காரர்களால் பேசப்பட்ட அவரது வசனம், பலரால் கேள்வி களோடும் பயங்களோடும் பெறப்படுகிறது. மேலும் பலர் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட எச்சரிப்பு மற்றும் கடிந்துகொள்ளுதல்களுக்குக் கீழ்ப்படிவதில் மந்தமாயிருக் கிறார்கள்; தங்கள் மனங்களிலிருந்து நிச்சயமின்மையின். ஒவ்வொரு நிழலும் அகற்றப்படும் வரை காத்திருக்கிறார்கள். முழுமையான அறிவை வேண்டுகின்ற அவிசுவாசி, தேவன் கொடுக்க விரும்புகிற எந்த ஆதாரத்தையும் ஒருபோதும் பெற்றுப் புரிந்துகொள்ளமாட்டான். தேவன் தங்களுக்கு அனுப்பும் ஒளியை ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவின் பின்னடியார்கள், தேவன் பேசும் குரலுக்கு - அதற்கு எதிராகக் கத்தும் மற்ற பல குரல்களுக்கு நடுவே - கீழ்ப்படியவேண்டும் தேவனுடைய குரலைப் பிரித் தறிய நல்ல பகுத்துணர்வு வேண்டும்.

"கர்த்தர் தங்களை அழைக்கும்போது கிரியை செய்யாமல், அதுபோன்று இன்னும் பல ஆதாரங்கள், இன்னும் பல சந்தர்ப்பங்கள் வரவேண்டுமென்று காத்திருப்பவர் கள், அந்தகாரத்தில்தான் நடப்பார்கள்; ஏனெனில், ஒளியானது எடுத்துக்கொள்ளப்படும். ஒருநாள் கொடுக்கப்படும் ஆதாரம் தள்ளப்பட்டுவிடுமானால், திரும்பவும் ஒருநாளும் தரப்படாது." Ibid., vol.3, p.258.

4. அறிவைத் தள்ளிவிடுதல்

அ. அறிவுக் குறைவினால் ஒரு மக்கள்மீது தண்டனையும் அழிவும் வருமா - அல்லது தேவன் நமக்குக் கொடுக்கும் அறிவைத் தள்ளிவிடுவதனால் வருமா? ஓசியா 4:6.

தேவனுடைய ஜனங்கள் இன்று அழிந்துபோகிறார்கள் என்றால், அது அறிவுக் குறைவினால் அல்ல. அவர்கள் வழியையும் சத்தியத்தையும் ஜீவனையும் அறியாததனால் கண்டனம் செய்யப்படமாட்டார்கள். சத்தியம் அவர்களது புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்ற முறையில் அவர்களைச் சென்றடைந்துள்ளது; வெளிச்சம் ஆத்துமாவின்மேல் ஒளி வீசியுள்ளது; ஆனால் அது கைவிடப்பட்டு அல்லது மறுக்கப்பட்டு உள்ளதால், அது அவர்களைக் கண்டனம் செய்யும். தள்ளிவிடுவதற்கு ஒளியே இல்லாதவர்கள் கண்டனத்தில் பங்கடையமாட்டார்கள். இதுவரை செய்யப்பட்டுள்ளதைவிட இன்னும் எவ்வளவு அதிகமாக தேவனுடைய திராட்சைத் தோட்டத்திற்கு செய்யப்பட முடியும்? ஒளி, அருமையான ஒளி, தேவ மக்கள் மீது பிரகாசிக்கிறது; ஆனால் அந்த ஒளியின் மூலம் இரட்சிக்கப்பட அவர்கள் சம்மதப்படவில்லையென்றால், அதற்கேற்ப முழுமையாக வாழவில்லையென்றால், அந்தகாரத்திலுள்ள மற்றவர்களுக்கு அதை எடுத்துச் செல்லவில்லையென்றால் அது அவர்களை இரட்சிக்காது.'' -Testimonies, vol.2, p.123.

ஆ. நாம் பெறுவதற்கு அரிய பாக்கியமான ஒளியைப் பெற்றும், அதைப் பின்பற்றாமல் கைநழுவ விடுவது எவ்வளவு அபாயகரமானது? கலாத்தியர் 3:1.

''சமய அறிவு குவிந்துள்ளது, இது அதற்கேற்ற நிபந்தனைகளையும் பெருக்கியுள்ளது. சபையின் மீது மிகப் பெரிய வெளிச்சம் பிரகாசித்துவந்துள்ளது; அவர்கள் அதிலே நடக்க மறுக்கின்றபடியால், அதனால் அவர்கள் கடிந்துகொள்ளப்படுகிறார்கள். அவர்கள் குருடராயிருந்திருந்தால், பாவமற்றவர்களாய் இருப்பார்கள். ஆனால் அவர்கள் ஒளியைக் கண்டிருந்தும் சத்தியத்தைக் கேட்டிருந்தும் ஞானமும் பரிசுத்தமும் இல்லாமல் இருக்கிறார்கள். பலர் பல்லாண்டுகளாக அறிவிலும் பரிசுத்தத்திலும் முன்னேற்றமே காட்டவில்லை. ஆவிக்குரிய குள்ளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பூரணத்துவத்தை நோக்கி முன்செல்வதற்குப் பதில், அந்தகாரத்தையும் எகிப்தின் அடிமைத் தனத்தையும் நோக்கிப் பின்னே செல்கிறார்கள். அவர்களது மனங்கள் தெய்வ பயத்திலும் மெய்யான பரிசுத்தத்திலும் நன்கு பயிற்சி பெறவில்லை.'' -Testimonies, vol.2, p.123, 124.

''தேவன் நம்மீது அருளியுள்ள கிருபையின்படியே நம்மிடம் கேட்கிறார்; அவர் உரிமை கோருவதைவிடக் குறைவானதை ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர் கேட்கும் சமய ஒழுங்கு அனைத்தும் முழுவதுமாக நிறைவேற்றப்படவேண்டும். நம்முடைய பொறுப்புகளிலிருந்து விடுபடவேண்டுமென்றால், நமக்கு ஆயத்தப்படுத்தப்பட்ட பரிசுத்த, புனித சத்தியத்தில் முன்னேற்றமும் ஒழுங்கும் உள்ள உயர்நிலத்தின்மேல் நிற்கவேண்டும்.'' -Ibid., vol.3, p.65.

"விசுவாசத்திலோ நடைமுறை வாழ்விலோ அறிந்து தவறு ஒன்றில் தொடர்ந்து நீடிக்கும் ஒவ்வொரு நபரும் பிசாசின் (சூனிய) வல்லமையின் கீழ் இருக்கிறான்; அவன் மற்றவர்கள் மீது சூனியம் செய்கிறான். மற்ற ஆத்துமாக்களைத் தவறாக வழிநடத்துமாறு சாத்தான் அவனுக்கு ஒத்தாசை செய்கிறான்." -The Signs of the Times, May 18, 1882.

வியாழன் ஜூலை 3

5. நிற்காத தளம்

அ. நாம் இயேசுவுடன் நடக்கும்போது, தொடர்ந்த வளர்ச்சியைக் கட்டிக்காப்பது எப்படி? எபிரெயர் 13:12; பிலிப்பியர் 3:15; 1 தெசலோனிக்கேயர் 4:4.

"கிறிஸ்துவின் வசனம், உயிர் வாழும் ஆத்துமா ஒவ்வொன்றுக்கும் அருளப்பட்ட ஜீவ அப்பமாக உள்ளது. இந்த அப்பத்தைத் தின்ன மறுப்பது மரணம் ஆகும். தேவ வசனத்தில் பங்கேற்பதைக் கைநழுவ விடுபவன் ஜீவனைக் கண்டடையமாட்டான். வசனத்தைப் பெறுவது என்பது, வசனத்தை விசுவாசிப்பது ஆகும்; இதுவே கிறிஸ்துவின் மாம்சத்தைத் தின்பதும் அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதும் ஆகும். கிறிஸ்துவில் ஐக்கியப்பட்டு வாழ்வது என்பது, அவருடைய வசனத்தில் ஐக்கியப்பட்டு வாழ்வது ஆகும்; இது இருதயத்தையும் பண்பையும் அவரது கட்டளைகளுக்கு இணங்கி நடக்கச் செய்கின்றது." -The Southern work p. 52.

ஆ. எதுவரை நமது வளர்ச்சி தொடரவேண்டும்? எபிரெயர் 6:1,2; மத்தேயு 5:48.

"நாம் வளர்ந்துசெல்லும் கிறிஸ்தவர்கலாக இருப்போம். நாம் அசைவின்றி நிற்பதற்காக இல்லை. நேற்று இருந்த நிலையிலிருந்து இன்று முன்னேறவேண்டியவர்களாக இருக்கிறோம்; மேன்மேலும் உண்மையுள்ளவர்களாகவும், மேன்மேலும் இயேசுவின் மீது முற்றிலும் சார்ந்து நிற்பவர்களாகவும் இருக்கிறோம். இவ்வாறாக நாம் வளரவேண்டியவர்கலாகவே இருக்கிறோம். நீங்கள் ஒரே மூச்சாக பூரணத்துவத்தை அடைந்துவிட முடியாது பரிசுத்தமாக்கப்படுதல் என்பது ஒரு வாழ்நாள் பணியாகும்." -Selected Messages, bk.3, p.193.

"உயிருள்ள கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் தெய்வீக ஜீவியத்தில் அன்றாடம் முன்னேறுவான். அவந் பூரணத்துவத்தை நோக்கி முன்னேறுகையில், ஒவ்வொருநாளும் தேவனிடமாக மாற்றம் அடையும் அனுபவத்தைப் பெறுகிறான்; இறுதியாக சாவாமையைத் தொட முழுமையாக ஆயத்தப்படும். கிறிஸ்தவப் பண்பின் பூரணத்துவத்தை அவன் அடையும் வரையில் இந்த மாற்றம் நிறைவடையாது." -Testimonies, vol.2, p.505.

"ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுக்கிறார்; ஒவ்வொரு நாளும் வித்தியாசமான சூழ்நிலைகளில் அவர்களுக்குத் தமது செயல் திட்டத்தைப் பற்றிய ஒரு சோதனைப் பயிற்சியைத் தருகிறார். அவரது திட்டத்தை செய்ய எடுக்கப்படும் ஒவ்வொரு மெய்யான, முழு மனதுடன்கூடிய முயற்சியிலும் அவர் தமது ஊழி

யக்காரர்களை, அவர்கள் பூரணராக உள்ளனர் என்பதால் அல்ல, தம்முடனான தொடர்பினால் அவர்கள் பூரணத்துவத்தை அடைவர் என்பதாலேயே அவர்களை அவர் தேர்ந்தெடுக்கிறார்." -Christ's Object Lessons, p.330.

இ. நாம் உண்மையிலேயே எப்படி உள்ளோம் என்பதை எப்படி நம்மால் காண இயலும்? ஏசாயா 6:1, 5; 2 கொரிந்தியர் 13:5.

"கிறிஸ்துவின் பின்னடியார் ஒவ்வொருவரும் தனது நடத்தையில் முழுமை அடைந்துவருகிறாரா என்று அன்றாடம் தன்னைத்தானே சோதித்து அறியவேண்டும்." -Testimonies, vol.2, p.511.

"நாம் எவ்வளவு அனுபவம் பெறுகிறோமோ அவ்வளவுக்கு பரலோகத்தின் தூய ஒளியினிடமாக கிட்டே இழுக்கப்படுகிறோம்; அந்த அளவுக்கு நமக்குள்ளேயுள்ள சீர்திருத்தத் தேவையைப் பிரித்தறிவோம்." -Ibid, vol.3, p.542.

வெள்ளி — ஜூலை 4

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. நாம் நமது இரட்சகருக்கு உண்மையாக அர்ப்பணித்துக்கொள்ளும் நிலையில் நம்முடைய விருப்பங்கள் எவ்வாறு மாறும்?

ஆ. சரியான ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் பங்கேற்கவேண்டிய உணவுவகை யாது?

இ. சீர்திருத்தக்காரர் என்ற பெயருடன் இருக்கும் நாம் - நான் – சீர்திருத்த நடைமுறையைத் தொடர்கிறோமா?

ஈ. அழிவிற்கான உண்மைக் காரணம் யாது?

உ. நமது கிறிஸ்தவப் பயணத்தில், எந்தக் கட்டத்தில் திருப்தியடையலாம்?

"நாம் தேவனுடைய ஆலோசனையை நாடி, கீழ்ப்படிதலுடனும் விசுவாசத்துடனும் பின் தொடரும்போது, நாமெல்லாம் மற்றவர்களை ஆசீர்வதிப்பதன் மூலம் நல்ல ஊழியம் செய்யலாம். நீதியின் பாதை பலத்தின்மேல் பலமும் கிருபையின் மேல் கிருபையும் மகிமையின்மேல் மகிமையுமாக முன்னேறிச் செல்வதாய் இருக்கிறது. தெய்வீக ஒளியானது அதிகமதிகமாகப் பெருகி, நமது முன்னேற்றத்தில் தொடர்புடையதாய், நம் முன்னுள்ள பொறுப்புகளையும் அவசரங்களையும் சந்திக்கத் தகுதியுள்ளவர்களாக நம்மை ஆக்குகின்றது.

"சோதனைகள் உங்களை நெருக்கும்போது, மனச்சோர்வும் அந்தகார அவநம்பிக்கையும் உங்கள் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தும்போது, உங்கள் செயல்களுக்குச் சுயநலம் உருக்கொடுக்கும்போது, உங்களுக்குத் தேவனும் அவரது சித்தத்தைப்பற்றிய ஆழமான, முழுமையான அறிவும் தேவையாக இருப்பதைக் காண்பதில்லை. நீங்கள் தேவசித்தத்தையும் அறிவதில்லை; நீங்கள் சுயத்திற்காக வாழும்போது, அதை அறியவும் முடியாது. உங்களது நல்ல நோக்கங்களையும் முடிவுகளையுமே நீங்கள் சார்ந்திருக்கிறீர்கள்; வாழ்வின் முதன்மைப்பகுதி மொத்தமும் செய்யப்படும் தீர்மானங்களாலும் முறிக்கப்படும் தீர்மானங்களாலுமே அடங்கியுள்ளது. உங்களுக்குத் தேவை

யானதெல்லாம் என்னவென்றால், சுயத்திற்கு மரிப்பதும், சுயத்தைச் சார்ந்து நிற்பதை நிறுத்துவதும், தேவனிடம் சரணடைவதுமே. என்னால் முடிந்தால் நான் உங்களைச் சந்தோஷமாகத் தேற்றுவேன். உங்கள் நல்ல பண்புகள், நல்ல நோக்கங்கள், நல்ல செயல்களுக்காக உங்களைச் சந்தோஷமாகப் போற்றுவேன்; ஆனால் இவற்றை எனக்குக் காட்ட தேவன் விரும்பவில்லை. நீங்கள் பெறவேண்டுமென்று அவர் வைத்துள்ள பரலோக இளைப்பாறுதலையும் அழியா மகிமையையும் ழக்காதபடிக்கு உங்களுக்குத் தேவைப்படும் உயரிய,மேம்பட்ட பரிசுத்த பண்பைப் பெற்றுக்கொள்ள ஏற்படும் இடையூறுகளை அவர் என் முன்னே எடுத்துவைத்தார். உங்களிடமிருந்து பார்வையை எடுத்து இயேசுவை நோக்குங்கள். அவர் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கிறார். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகர் ஒருவரின் இரத்தத்தின் புண்ணியங்கள் சிறிய, பெரிய பாவங்களிலிருந்து தூய்மை செய்யக் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. தேவனை ஒரு உண்மையுள்ள சிருஷ்டிகராக எண்ணி, திடநம்பிக்கையான விசுவாசத்துடன் உங்கள் ஆத்துமாக்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். தேவன் உங்களை விட்டுவிடுவார் என்ற அச்சத்திலும் அனுமானத்திலும் தொடர்ந்து இருக்காதீர்கள். நீங்கள் அவரிடமிருந்து விலகிச் சென்றாலன்றி, அவர் ஒருபோதும் உங்களைவிட்டு விலகமாட்டார். உங்களது இருதயக் கதவுகளைக் கிறிஸ்துவுக்குத் திறந்தீர்களானால், அவர் உள்ளே வந்து உங்களுடன் வசிப்பார். நீங்கள் சுயத்திற்கு மரித்து தேவனுக்காக ஜீவித்தால், உங்களுக்கும் பிதாவுக்கும் அவருடைய குமாரனுக்கும் இடையே பூரண ஐக்கியம் உண்டாகலாம்." -Testimonies, vol.3, pp.542, 543.

வனாந்தரத்திலிருந்து பாடங்கள்

"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." (ரோமர் 15:4).

"கர்த்தர் நம்மை நடத்திவரும் வழியையும் நமது கடந்த கால சரித்திரத்தில் அவரது போதனையையும் மறப்பது தவிர நமது எதிர்காலத்தில் எதைக்குறித்தும் பயப்படவேண்டியது இல்லை." -The General Conference Daily Bulletin, January 29, 1893,

மேலும் படிக்க: Testimonies, Vol.2, pp.124-133

ஞாயிறு ஜூலை 6

1. சரித்திரம்

அ. இயல்புக்கு மாறான சம்பவம் நிகழும்போது தேவ மக்களிடம் காணப்பட்ட மிகப் பழைய வழக்கம் யாது? ஏன்? 1 சாமுவேல் 7:12; யோசுவா 4:5-7; மல்கியா 3:16

"தேவன் கடந்த காலத்திலே தம் மக்களுக்கு வழங்கிய ஒவ்வொரு விடுதலையும், ஒவ்வொரு ஆசீர்வாதமும், அவர் இனி அருளப்போகிற உயரிய, பெருக்கமான ஆசீர்வாதங்களுக்கு ஓர் உறுதியான அச்சாரமாக இருக்கும்பொருட்டு நினைவாலயத்திலே எப்போதும் புதிதாக வைக்கப்படவேண்டும். ஆண்டவரது ஆசீர்வாதங்கள் அவரது மக்களின் தேவைகளுக்கு ஏற்றவையாக இருக்கின்றன." -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.4 p.1183.

ஆ. சரித்திர ஆராய்ச்சி மிக முக்கியமானதாக இருப்பது ஏன்? பிரசங்கி 1:9; ரோமர் 15:4.

"வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் தேவனுடைய அருளினாலே கொடுக்கப்பட்டுள்ளது; அது பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டைவிடவும் எவ்விதத்திலும் குறைவின்றி கவனத்தில் கொள்ளப்படவேண்டும். பழைய ஏற்பாட்டை நாம் ஆராயும்போது, கவனக்குறைவான வாசகன் பாலைவனம் போல் இருப்பதாக அறியுமிடத்திலே ஜீவ ஊற்றுகள் கொப்புளித்து எழுவதை நாம் காணலாம்." -Education, p.191.

"இப்பூமியிலே தேவனுடைய பணி காலங்கள்தோறும், ஒவ்வொரு பெரிய சீர்திருத்தத்தின் அல்லது சமய இயக்கத்தின்போதும் மாறாமல் ஒன்றுபோலவே இருந்து வருகிறது. தேவன் மனிதருடன் தொடர்புகொள்ளும் அடிப்படைகள் எப்போதும் ஒரே மாதிரிதான் இருந்துவருகின்றன." -The Great Controversy, p.343.

2. வனாந்தரத்தில் இஸ்ரவேலர்

அ. தேவனுடைய மக்கள் பூமியின் சரித்திரத்தின் இறுதி நாட்களை அணுகி வருகையில், அதை அடையாளப்படுத்தும் குறிப்பிட்ட வேத சரித்திரம் எது? 1 கொரிந்தியர் 10:6-15.

"இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களின் அனுபவங்கள் பழங்கால இஸ்ரவேலரின் பிரயாணங்களைப் போன்றதேயாகும். தயவு செய்து 1 கொரிந்தியர் 10, 6வது வசனத்திலிருந்து 15வது வசனம்வரை குறிப்பாக வாசியுங்கள்." -Testimonies vol.1, p.284.

ஆ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் நுழைவதினின்று இஸ்ரவேலரை எப்படியெல்லாம் சாத்தான் தடுத்துவந்தான்? அவனுடைய குறிக்கோள் என்ன? இது எவ்வாறு நமக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது? எபிரெயர் 3:9-12, 16,17.

'சாத்தான் கானான் நாட்டின் மீதுள்ள தனது பிடியை விடக்கூடாது என்று தீர்மானித்திருந்தான் அது இஸ்ரவேல் மக்களின் வாழிடமாக மாற்றப்பட்டு, தேவனுடைய பிரமாணம் அந்நாட்டில் பிரமாணமாக ஆக்கப்பட்டபோது, அவன் இஸ்ரவேலரைக் கொடூரமான தீய பகையாகப் பகைத்து, அவர்களது அழிவிற்கு சதி செய்தான். தீய ஆவிகலின் மூலமாக வேறு தெய்வங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன; மீறுதலின் காரணமாக, தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் இறுதியில் வாக்குத்தத்தத்தின் பூமியிலிருந்து சிதறடிக்கப்பட்டார்கள்." -Patriarchs and Prophets, pp.688, 689.

"இஸ்ரவேலின் அவிசுவாசமாகிய பாவத்தினால் தேவகுமாரனின் வைக்கும் அவர்களது நம்பிக்கை அழிந்து, மிகவும் தூரமாக வழிநடத்தப்பட்டுவிட்டார்கள். அவர்கள் தேவனைப் போற்றிய, கர்த்தருடைய நாமத்தைப் பெரிதுபடுத்திய, அவரது நன்மையைப்பற்றிப் பேசிய, அவரது வல்லமையைப்பற்றிச் சொல்லிய அதே நேரத்தில், அவிசுவாசத்திலும் நிறைய முறுமுறுத்துக்கொண்டும் குற்றஞ்சாட்டியபடியும் இருப்பதாகக் காணப்பட்டார்கள். அவர்களுடைய இருதயங்களில் மோசேக்கு எதிராகப் பொறாமையையும் வெறுப்பையும் உருவாக்கவும், தேவனுக்கு எதிராகக் கலகத்தை மூட்டிவிடவும் அவர்களிடையே சண்டை சச்சரவுகளை விதைக்க வஞ்சிக்கிறவன் தன்னால் இயன்ற அனைத்து வழிகளின் மூலமும் வகை தேடினான்." -The Signs of the Times, April 25, 1895.

"சிலர் எப்போதுமே தீமையையே எதிர்நோக்குகிறார்கள் அல்லது கஷ்ட நஷ்டங்களை உண்மையில் உள்ளதைக் காட்டிலும் பெரிதுபடுத்திப் பார்க்கிறார்கள்; இதனால் அவர்களது நன்றியுணர்வு வெளிப்படுத்தப்படவேண்டிய அநேக ஆசீர்வாதங்களைக் காணாக்கூடாமல் அவர்களது கண்கள் குருடாகிவிடுகின்றன. அவர்கள் எதிர்கொள்ளும் தடைக்கற்கள் பலத்தின் ஒரே மூலாதாரமான தேவனிடமிருந்து உதவி நாடும்படி அவர்களை வழிநடத்தாமல், அவர்களை அவரிடமிருந்து பிரித்துவிடுகின்றன; ஏனெனில், அவர்கள் அமைதியற்றவர்களாய், திருப்தியற்றவர்களாய் இருக்குமாறு தூண்டப்பட்டுவந்தனர்.

"இப்படிப்பட்ட அவிசுவாசத்தில் நாம் நன்றாக இருப்போமா? நாம் ஏன் நன்றியற்

றவர்களாய், நம்பிக்கையற்றவர்களாய் இருக்கவேண்டும்? இயேசு நமது நண்பர்; பரலோகம் மொத்தமும் நமது நன்மையில் அக்கறை கொண்டுள்ளது. நமது கவலையும் பயமும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. நமது சோதனைகளை தாங்குவதற்கு நமக்கு உதவி செய்யாமல், எரிச்சலூட்டி குறைவுபடுத்துகிறவைகளைக் குறித்து நாம் கவலையில் ஆழ்தல்கூடாது. நமது சந்தோஷம் இந்த பூலோக விஷயங்களில் அடங்கியிருந்தாலும், வாழ்வின் முதன் மைப் பணியாகிய எதிர்காலத் தேவைக்கு எதிராக ஆயத்தம் செய்யுமாறு நம்மை நடத்தும் தேவன் பேரிலான அவநம்பிக்கைக்கு நாம் இடம் கொடுக்கலாகாது.'' -Patriarchs and Prophets, pp.293, 294.

செவ்வாய் — ஜூலை 8

3. ஒரு தனிப்பட்ட ஜனம்

அ. தேவனுடைய அடிப்படைகள் உலகின் அடிப்படைகளிலிருந்து மாறுபட்ட தாக இருக்கிறபடியால், நம்மிடையே எதற்காக அவர் அழைப்பு விடுக்கிறார்? ஆமோஸ் 3:3; 2 கொரிந்தியர் 6:14-17; மாற்கு 14:38.

''நமது பரிசுத்த விசுவாசம் பிரிந்து போதலுக்காகச் சத்தமிடுகிறது.''-Testimonies, vol.1, p.240.

''கிறிஸ்துவின் பின்னடியார்கள் உலகத்தைவிட்டு வெளியே வருமாறும், தனித் திருக்குமாறும், அசுத்தத்தைத் தொடாமலிருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார் கள்; அவர்கள் உன்னதமானவரின் குமாரர்களும் குமாரத்திகளுமாக, ராஜ குடும்பத் தின் உறுப்பினர்களாக இருக்கும் வாக்குத்தத்தத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பங்கிற்குரிய நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லையானால், வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை உணரமாட்டார்கள், உணரவும் முடியாது.'' -Ibid., vol.2, p.441.

''[தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை மீறுதலுக்குள்ளாக்க வேறு தெய் வங்களை அறிமுகப்படுத்தும் தீய ஆவிகளின்] இந்தச் சரித்திரத்தை இன்றைய நமது நாளிலும் திரும்பவும் நிகழ்த்த சாத்தான் முயன்றுவருகிறான். தமது ஜனம் தமது பிர மாணத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்பதற்காக, தேவன் அவர்களை உலகின் அரு வெறுப்புகளிலிருந்து வெளியே நடத்திச்செல்கிறார்; இதனால்தான் குற்றம் சுமத்துவோ னின் கோபம் நமது சகோதரர் மேல் எல்லையற்றுப் பெருகுகின்றது... மெய்யான வாக் குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு நம்முன்னே வெகு அருகே உள்ளது; சாத்தான் தேவ மக்களை அழிக்கவும், அவர்களின் சுதந்திரத்திலிருந்து அவர்களைத் துண்டித்துவிட வும் தீர்மானித்துள்ளான்.'' -Patriarchs and Prophets, p.689.

ஆ. உளகத்தோடுதானாக ஐக்கியப்படுவதன் பலன் என்ன? யாக்கோபு 4:4.

''இப்படிப்பட்ட [அவபக்தியான] உறவுகளில் விரும்பியே நுழைபவன் எவனும் தன் கூட்டாளிகளின் பழக்கவழக்கங்களுக்கு ஓரளவுக்கு இணங்கிப்போவது அவசியம் என்று உணர்கிறான். இவ்வாறு செலவிடப்பட்ட நேரம் வீணடிக்கப்பட்டதைவிட மோச மானதாகும். கொள்கைப்பிடிப்புகளை முறிக்கவும் ஆத்துமாவின் அரணை பலவீனப்

படுத்தவும்கூடிய வகையில் சிந்தனைகள் வரவேற்கப்படுகின்றன, வார்த்தைகள் பேசப்படுகின்றன." -Patriarchs and Prophets, p.563.

"பெருநகரங்களில் வாழும் பெற்றோர்களுக்கு, உங்கள் பிள்ளைகளை உங்கள் வீடுகளிலேயே இருக்குமாறு கூட்டிச் சேருங்கள்; தீமையைப் போதித்து தீமையை நடப்பிக்கிறவர்களாகிய, தேவனுடைய கற்பனைகளை அவமதிக்கிறவர்களிடமிருந்து அவர்களைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் எச்சரிக்கைக் குரல் அனுப்புகிறார். முடிந்தவரை சீக்கிரமாக நகரங்களைவிட்டு வெளியேறுங்கள்." -Counsels on Diet and Foods, p.400.

இ. நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி யாது? 2 கொரிந்தியர் 13:5.

" 'நான் உலகத்திலிருந்து பிரிந்து நிற்கிறேனா?' என்று கேட்கவேண்டியது ஒவ்வொரு தேவபிள்ளையின் கடமை ஆகும். கொஞ்சம் வசதிக்குறைவைச் சகித்துக்கொள்வோம் பத்திரமான பக்கத்திலே இருப்போம்." -Testimonies, vol.1, p.278.

புதன் ஜூலை 9

4. நவீன காலச் செங்கடல்

அ. இஸ்ரவேலர்கள் 40 ஆண்டுகள் வனாந்தரத்திலே அலைந்து திரியவேண்டிய வந்தது ஏன்? எண்ணாகமம் 32:11-13.

"[பெரும்பான்மையான இஸ்ரவேலர்கள்] ஒன்றுமில்லாததற்கெல்லாம் குறை கூறினார்கள்; இப்பொழுது தேவன் அவர்களை அழும்படி செய்தார். அவர்களது பாவங்கள் அவர்கள் முன்னே உண்மையாகச் சுட்டிக்காட்டப்பட்டபோது, அவர்கள் பாவத்திற்காகத் துக்கித்திருந்தார்களானால் இந்த தண்டனை [நாற்பது ஆண்டுகளாக வனாந்தரத்தில் அலைந்து திரிதல்] அறிவிக்கப்பட்டிருக்காது." -Patriarchs and Prophets, p.392.

ஆ. இஸ்ரவேல் வனாந்தரத்தில் நுழைந்த சோதனைக் காலத்தைக் குறிப்பிட்டது எது, அதன் முடிவைக்குறிப்பிட்டது எது? யாத்திராகமம் 14:21,22, 29-30; யோசுவா 3:15-17; 4:18; இது அட்வெந்து விசுவாசிகளின் வரலாற்றில் எவ்வாறு இணைந்து போகிறது?

"பழங்கால இஸ்ரவேலின் சரித்திரம், அட்வெந்து மக்களின் கடந்தகால அனுபவத்தின் தெளிவான சித்திரிப்பாக இருக்கிறது. தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வழிநடத்தியதுபோலவே அட்வெந்து இயக்கத்திலுள்ள தம் மக்களை வழிநடத்தினார். எபிரேயர்களை செங்கடலண்டை பரீட்சித்ததுபோலவே மிகப் பெரிய ஏமாற்றத்தில் இவர்களது விசுவாசமும் பரீட்சிக்கப்பட்டது. அவர்களது கடந்தகால அனுபவத்தில் அவர்களோடிருந்து வழிநடத்திய கரத்தின் மீது அவர்கள் பின்னும் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார்கலானால், அவர்கள் தேவனுடைய இரட்சிப்பைக் கண்டிருப்பார்கள். 1844 இல் ஊழியத்தில் ஒன்றுபட்டு உழைத்த அனைவரும் மூன்றாம் தூதனுடைய தூதைப் பெற்று, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அதை அறிவித்திருந்தார்களானால், அவர்களது முயற்சியோடு இணைந்து கர்த்தர் மகத்தான செயலைச் செய்திருப்பார். உலகத்தின்மீது ஓர் ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டிருக்கும். பல்லாண்டுகளுக்கு முன்னரே இப்பூமியில் வசிப்போர் எச்சரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்குதலின் பணி முடிவடைந்திருக்கும்; கிறிஸ்து தம் மக்களை மீட்டுக்கொள்ள வந்திருப்பார்.

"இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகளாக வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. அவர் அவர்களை நேரடியாகக் கானான் தேசத்திற்குள் நடத்திச்சென்று அங்கே ஒரு பரிசுத்தமான, சந்தோஷமான மக்களாக அவர்களை ஸ்தாபிக்க விரும்பினார். ஆனால் அவர்களது அவிசுவாசத்தின் (எபிரெயர் 3:19) காரணமாக அவர்களால் உள்ளே நுழைய முடியாமற் போனது. அவர்களது பின்வாங்குதலினாலும் கலகத்தினாலும் அவர்கள் பாலைவனத்திலே அழிந்துபோனார்கள்; வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கு மற்றவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டார்கள். இதே போலத்தான், கிறிஸ்துவின் வருகை இவ்வளவு நீண்டகாலமாகத் தாமதிக்கவேண்டுமென்பதும் அவருடைய மக்கள் இந்தப் பாவமும் துயரமும் மிக்க உலகிலே இவ்வளவு பல ஆண்டுகளாக தரித்திருக்கவேண்டுமென்பதும் தேவனுடைய சித்தமல்ல. ஆனால் அவிசுவாசம் அவர்களைத் தேவனிடமிருந்து பிரித்துவிட்டது. அவர் அவர்களுக்கு நியமித்த காலத்திற்குள் வேலையை செய்து முடிக்க அவர்கள் மறுத்ததால், தூதை அறிவிக்க மற்றவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டனர். பாவிகள் எச்சரிப்பைக் கேட்க ஒரு வாய்ப்பு பெறவேண்டும், தேவ கோபாக்கினை ஊற்றப்படும் முன் ஒரு புகலிடத்தை அவரில் கண்டடையவேண்டும் என்ற உலகின் மீதுள்ள கருணையின் காரணமாக இயேசு தமது வருகையைத் தாமதிக்கிறார்." -The Great Controversy, pp.457, 458.

வியாழன் — ஜூலை 10

5. ஒரேமாதிரி சோதனைகள்

அ. இந்தக் கடைசி நாட்களில் தேவ மக்கள் என்ன மாதரியான விஷயங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது? எண்ணாகமம் 11:4; 1 கொரிந்தியர் 10:6.

____

____

"கிறிஸ்துவின் வருகை இவ்வாறு தாமதிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. தம் மக்களாகிய இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்திலே அலைந்து திரியவேண்டும் என்றும் தேவன் திட்டம் செய்யவில்லை. அவர்களை நேரடியாகக் கானான் தேசத்துக்குள் நடத்திச்சென்று, அவர்களை அங்கே ஒரு பரிசுத்தமான, ஆரோக்கியமான, சந்தோஷமான மக்களாக ஸ்தாபிக்க அவர் வாக்களித்திருந்தார். ஆனால் இது முதன்முதலில் யாருக்குப் பிரசங்கிக்கப்பட்டதோ அவர்களுக்கு 'அவிசுவாசத்தின் காரணமாக' ஏறவில்லை. அவர்களது இருதயங்கள் முறுமுறுப்பினாலும், கலகத்தினாலும் வெறுப்பினாலும் நிறைந்திருந்தன அவர்களுடனான உடன்படிக்கையை அவரால் நிறைவேற்ற முடியவில்லை.

"நாற்பது ஆண்டு காலமாக அவிசுவாசம், முறுமுறுப்பு, கலகம் போன்றவை பழங்கால இஸ்ரவேலை கானான் தேசத்திற்குள் போகாதபடிக்குத் தடுத்துவிட்டது. இதே பாவங்கள் நவீன இஸ்ரவேலையும் பரலோகக் கானானிற்குள் நுழைவதைத் தாமதப்படுத்தியுள்ளது. இவ்விரண்டில் எதிலுமே தேவனுடைய வாக்குறுதிகள் தவறாகிவிடவில்லை... அவிசுவாசம், உலகப் பிரகாரமான சிந்தை, அர்ப்பணிப்பின்மை, கர்த்தர் தெரிந்துகொண்ட மக்களிடையிலான சண்டை சச்சரவுகளே நம்மை இந்த பாவமும் துயரமும் நிறைந்த உலகினிலே இத்தனை பல ஆண்டுகளாக நிறுத்திவைத்துள்ளன." -Evangelism, p.696.

ஆ. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் எதிர்கொண்ட பிரச்சினை மாம்ச இச்சை ஆகும் (1 கொரிந்தியர் 10:6). இந்த விஷயத்தில், எந்த மாம்ச இச்சையை நமது காலத்தில் சந்திக்கிறோம்? பிலிப்பியர் 3:19; 1 சாமுவேல் 15:23.

"தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து வெளியே நடத்திவந்தபோது, அவர்களைக் கானான் தேசத்திலே தூய, மகிழ்ச்சியுள்ள, உடல்நலம்மிக்க மக்களாகக் குடியமர்த்தவேண்டும் என்பது அவருடைய நோக்கமாயிருந்தது. இதை அவர் எந்த வழியினால் நிறைவேற்றுவார் என்று நாம் பார்க்கவேண்டும். அவர்களை அவர் ஓர் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தினார். இது மனமகிழ்ச்சியுடன் பின்பற்றப்பட்டால், அவர்களுக்கும் அவர்களது பின்சந்ததிக்கும் இருவருக்குமே நன்மையாக முடிந்திருக்கும். அவர் அவர்களிடமிருந்து மாமிச உணவை வெகுவாக அகற்றியிருந்தார். அவர்களது கூக்குரலுக்கு பதிலளிக்கும் முகமாக, சீனாயை அடைவதற்குச் சற்று முன்னர் அவர்களுக்கு இறைச்சியை அனுமதித்தார்; ஆனால் ஒரே ஒரு நாளைக்குத்தான் கொடுக்கப்பட்டது. தேவன் மன்னாவைக் கொடுத்தபோதே இறைச்சியையும் கொடுத்திருக்க வேண்டும்; ஆனால் ஜனங்களின் நன்மைக்காக ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அவர்களில் அநேகர் எகிப்தில் உண்டு பழக்கப்பட்டுவிட்ட வெகுவாகத் தூண்டும் உணவுமுறைக்கு மாறாக, அவர்களது தேவைகளுக்கு ஏற்ற, மிகப் பொருத்தமான உணவை வழங்குவது அவருடைய நோக்கமாயிருந்தது. திசைதிருப்பப்பட்ட உணவு ஆசை இன்னும் ஆரோக்கியமான நிலைக்கு கொண்டுவரப்படவேண்டும்; தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏதேனில் தந்த உணவாகிய மனிதனுக்கு ஆதியில் வழங்கப்பட்ட உணவை - பூமியின் பழங்களை அவர்கள் உண்டு களிக்கவேண்டும்." -Counsels on Diet and Foods, pp.377, 378.

"நமக்கு முன்பாக உள்ள இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்துடன் ஒப்பிட்டு, அவிசுவாசம், கலகம் என்னும் அதே வழியில் தொடரும் அதே பாவங்களை செய்பவர்களாக நாம் காணப்படாதிருப்போமாக." -The Review and Herald April 18, 1893.

வெள்ளி — ஜூலை 11

சிந்தனையும் மீள்பார்வைக் கேள்விகளும்

அ. சரித்திர ஆராய்ச்சி நமக்குப் பெருமதிப்புள்ளதாக இருப்பது எப்படி?

ஆ. கடைசி நாட்களில் தேவ சபைக்கு அடையாளமாக இருக்கும் வேத சரித்திரம் எது?

இ. அவிசுவாசிகளுடன் விரும்பிச் சேர்வது விசுவாசிகளை எவ்வாறு பாதிக்கிறது?

ஈ. தற்கால இஸ்ரவேலின் சரித்திரத்தில் எந்த சம்பவம் செங்கடலைக் கடப்பதுடன் ஒப்பிடப்படுகிறது?

உ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தாமதப்படுத்தும் பாவங்கள் எவை?

"மோசேயை அவனுடைய விரோதிகளிடமிருந்து வெற்றிகொள்ள வைத்தது எகிப்திய கல்விக்கூடங்களின் போதனையல்ல; மாறாக எப்போதும் கீழ்ப்படிதலுள்ள, பின்வாங்காத விசுவாசம் மிகவும் சோதனையான சூழ்நிலைகளிலும் விழுந்துபோகாத

ஒரு விசுவாசமேயாகும். மோசே தன் காலடியை எடுத்துவைக்க, அவனுக்கு முன்னால் எதுவுமே இல்லாத நிலையிலும், தேவனுடைய கட்டளையின்பேரில் முன் சென்றான். ஒரு மில்லியன் (10 இலட்சம்) மக்களுக்கும் மேல் அவனைச் சார்ந்திருந்தார்கள்; அவன் அவர்களை நாளுக்கு நாள், அடிமேல் அடியாக முன்னே நடத்திச்சென்றான். தமது மக்கள் கடின வாழ்க்கையைச் சகித்து, அவர்கள் அழிவின் விளிம்பில் நிற்கும்போது தேவனில் மட்டுமே நிவாரணமும் இரட்சிப்பும் உண்டு என அறியும்படிக்கு ஓர் அனுபவத்தைப் பெறவேண்டும் என்றே வனாந்தரத்திலே இந்தத் தனிமையான பிரயாணங்களை தேவன் அனுமதித்தார். இவ்வாறாக, அவர்கள் தேவனை அறிய வேண்டும், அவரில் திடநம்பிக்கை வைக்கவேண்டும், ஒரு உயிருள்ள விசுவாசத்துடன் அவருக்கு ஊழியம் செய்யவேண்டும்." -Counsels on Parents, Teachers and Students, pp.408, 409.

"சோதனைகள் மிக மயக்குவேடம்புனைந்து நமக்கு வரும்; ஆனால் தேவனுடைய தெளிவான கட்டளையைவிட்டு மனிதனின் வற்புறுத்தல்களைப் பின்பற்றிச் செல்லத் திரும்புவது நமது கேட்டின் காரணமாகவே ஆகும். கர்த்தருடைய வசனத்தைப் பின் பற்றுவதும், சத்தியத்தைப் பற்றிக்கொள்வதும் சிலுவையைச் சுமப்பதுடனும் சுய-மறுப்புடனும் தொடர்புடையன; ஆனால் சிலுவையைச் சுமப்பது தவிர செய்வதற்கு வேறு பத்திரமான காரியம் எதுவும் அவர்களுக்கு இல்லை. நீங்கள் வெளிச்சத்தைக் காண்கயில் வெளிச்சத்தில் நடங்கள். ஒரு பக்திவிநயமான, தடைபடாத நோக்கம் உங்களில் இடம்பெறட்டும்; அது தேவனுடைய பலத்தாலும் கிருபையாலும் உறுதி கொள்ளட்டும்; இதுமுதல் நீங்கள் அவருக்காக வாழ்கிறீர்கள், தெய்வீக பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளைவிட்டு உங்களை விலகச் செய்யும் பூமிக்குரிய தீர்மானங்கள் எதுவும் இருக்கலாகாது; [அப்படி இருந்தால்] அது உங்கள் இரட்சகரையும் உங்கள் தேவனையும் உங்களைவிட்டு விலக்கிவிடும். உங்கள் தேவனுடைய ஆலோசனையை நாடுங்கள், அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதலின் பாதை 'நண்பகலைப்போல் மேன் மேலும் பிரகாசிக்கிற' (நீதிமொழிகள் 4:18) நீதியின் பாதை என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

"கீழ்ப்படிதலின் பாதையின் முதல் படி, நமது சித்தத்தை தேவனிடம் ஒப்படைத்தல் ஆகும். இது செய்வதற்குக் கடினமான ஒரு செயலாகத் தோன்றலாம்; ஏனெனில் சாத்தான் தன்னால் இயன்ற அனைத்து எதிர்ப்பையும் முன்வைத்து, தொல்லைகளை உருவாக்கி, மனத்திலே குழப்பங்களைப் பெரிதாக்கிக் காட்டுவான்; ஆனால் முதல் அடியை எடுத்துவையுங்கள், முன்னேற்ற ஏணியின் மீதான அடுத்த அடி எளிதாக இருக்கும். முன்னேற்ற ஏணியில் வட்ட வட்டமாகத்தான் ஏறவேண்டும்; ஆனால் ஏணிக்கு மேலே தேவன் இருக்கிறார், அவரது மகிமை முன்னே எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியின்மீதும் ஒளிரும். விசுவாசப் பாதையும் சுயமறுப்பின் பாதையும் மேலே ஏறிச் செல்லும் பாதை; இந்த வழி பரலோகத்தை நோக்கிச் செல்வது, நீங்கள் முன்னேறிச் செல்கையில், சந்தேகம் மற்றும் தீமையின் தவறாக வழிநடத்தும் மேகங்கள் பின்னே விடப்படும்." -The Review and Herald, October 9, 1894.

உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின்செல்லுதல்

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் அதைச் சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே, நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, அதற்குப் பின்செல்லுங்கள்" (யோசுவா 3:3).

"இஸ்ரவேலர்கள் கானானுக்குச் செல்ல செய்த பிரயாணங்களில் கண்ட அனுபவங்களை கவனமாக ஆராயவும். அவர்கள் யோர்தானைக் கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்ல செய்த ஆயத்தங்களைப்பற்றிய பதிவுகளை யோசுவா மூன்றாம், நான்காம் அதிகாரங்களில் படித்து ஆராய்க." -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.2, p.994.

மேலும் படிக்க: Patriarchs and Prophets, pp.348, 349, 481-486.

ஞாயிறு ஜூலை 13

1. வழிகாட்டலைப் பெறுதல்

அ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் கடந்து செல்லும் முன்பு இஸ்ரவேல் புத்திரர் எங்கே தங்கினார்கள்? யோசுவா 3:1

"இஸ்ரவேலர் கானானைக் கைப்பற்றுவதற்குத் தடையாய் இருந்த யோர்தானின் கிழக்குப் பகுதியிலேயே பின்னும் தங்கியிருந்தார்கள். 'இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்' (யோசுவா 1:2) என்பதே யோசுவாவுக்கு தேவன் தந்த முதல் செய்தியாக இருந்தது. அவர்கள் கடந்துசென்ற வழியில் அறிவுறுத்துதல் எதுவும் தரப்படவில்லை. என்றபோதிலும் தேவன் எங்கே கட்டளை தரவேண்டும் என்பதை யோசுவா அறிவான்; அவருடைய ஜனங்கள் நடப்பதற்கான வழி ஒன்றை அவர் உருவாக்குவார்; இந்த விசுவாசத்தில், துணிவுள்ள அந்தத் தலைவன் உடனடியாக முன் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினான்." -Patriarchs and Prophets, p.482.

ஆ. யோர்தானைக் கடக்கும் நீண்டநாள் கனவு மெய்ப்பட ஆயத்தங்களை செய்த நேரத்தில், முன்னேறிச் செல்வதற்கு சமிக்ஞையாக எந்த சம்பவத்திற்காக ஜனங்கள் காத்திருந்தார்கள்? யோசுவா 3:2,3.

"'உடன்படிக்கைப் பெட்டி' சேனையின் முன்னே தலைமை தாங்கிச் செல்லும். ஆசாரியர் சுமந்தபடி யேகோவாவின் பிரசன்னத்தின் அடையாளம் பாளயத்தின் நடுவிலிருந்து கிளம்பி ஆற்றை நோக்கிச் செல்வதை [இஸ்ரவேலர்] காணும்போது, அவர்களும் தங்கள் இடங்களைவிட்டுக் கிளம்பி 'அதனைப் பின்தொடர' வேண்டும்." -Patriarchs and Prophets, pp.483, 484.

2. தேவனுடைய பிரசன்னத்தின் அடையாளம்

அ. உடன்படிக்கைப் பெட்டிக்கும் சபையாருக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கவேண்டியிருந்தது ஏன்? அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு இருக்கவேண்டுமானால், அவர்கள் பின்பற்றவேண்டியிருந்தது என்ன? யோசுவா 3:4.

"குறிக்கப்பட்ட நேரத்தில் முன்செல்லுதல் தொடங்கியது; ஆசாரியரின் தோள்களில் சுமக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி முன்தண்டு ஜனங்களை வழிநடத்தியது. பெட்டிக்குப் பின்னே அரை மைலுக்கு மேல் வெற்று இடைவெளி இராதபடிக்கு பின்தொடர்ந்து வரும்படி ஜனங்கள் நடத்தப்பட்டார்கள். ஆசாரியர் யோர்தானின் கரையில் இறங்கி முன்சென்றதை எல்லோரும் வெகு ஆர்வமாகப் பார்த்தார்கள்." -Patriarchs and the Prophets, p.484.

ஆ. அவர்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தபோது, அவர்களுக்கு மறுபடியும் எதைக் காட்டவேண்டுமென்று தேவன் ஆயத்தம் செய்தார்? யோசுவா 3:5.

"சேனை பாளயத்தை விட்டு சீத்திமின் கருவேலமரத் தோப்புகளில், யோர்தானின் எல்லைக்குள் இறங்கியது. தெய்வீக உதவி இல்லாமல் யோர்தானைக் கடக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை என்று அனைவரும் அறிவார்கள். வருடத்தின் இந்த நேரத்தில் - வசந்தகாலம் - மலைகளில் உருகும் பனி யோர்தான் ஆறு கரைபுரண்டு ஓடும்படிச் செய்து, வழக்கமான ஆற்றைக் கடக்கும் துறைகள் உள்ள இடங்களில் கடப்பதை இயலாத செயலாக்கியது. இஸ்ரவேல் யோர்தானைக் கடப்பது அற்புதச் செயலாக இருக்கவேண்டுமென்று தேவன் சித்தங்கொண்டார். யோசுவா தெய்வீக அறிவுறுத்தலின்படி ஜனங்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டான்; அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுவிட்டு, வெளியரங்கமான அனைத்து அசுத்தங்களிலிருந்தும் தங்களை விடுவித்துக்கொள்ளவேண்டும்; 'நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்' என்று அவன் கூறினான்." -Patriarchs and Prophets, p.483.

இ. குறிப்பிடத்தக்க இந்தச் சம்பவத்தின்போது, யோசுவாவின் எந்தக் கட்டளை மக்களை ஒழுங்கான, பக்திவிநயமான முறையில் நடக்குமாறு ஆயத்தப் படுத்தியது? யோசுவா 3:6,7.

"பழங்கால இஸ்ரவேலர் பிரயாணம் செய்தபோது உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு முன்பாகச் சென்றது. பெட்டியின் மூடியாகிய கிருபாசனத்திற்கு அடியில், பிரமாணப் பலகைகள் இருந்தன. உடன்படிக்கைப் பெட்டி தேவ பிரசன்னத்தின் அடையாளம்; கர்த்தருடைய நீதியாகிய அவரது மகிமை ஜனங்களின் பின்புறமாக இருக்கும்." -The Review and Herald, February 20, 1894.

3. யோர்தான் அற்புதத்தின் நோக்கம்

அ. யோர்தானை அற்புதமாகக் கடந்தது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வெல்ல எடுக்கும் எதிர்கால முயற்சியில் மக்களுக்கு வெற்றியின் உறுதியை எவ்வாறு தரப்போகிறது? யோசுவா 3:8-10.

"இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர்களை தேவன் ஓரிடத்தில் நிறுத்திவைத்தார் என்ற செய்தி எமோரியர், கானானியர்களின் ராஜாக்களுக்குச் சென்றடைந்தபோது, அவர்களுடைய இருதயங்கள் பயத்தால் கரைந்துபோயிற்று. எபிரேயர்கள் ஏற்கெனவே மீதியானியரின் சக்தி வாய்ந்த சீகோன், எமோரியரின் ராஜா, பாசானின் ஒக் ஆகிய ராஜாக்களை முறியடித்திருந்தார்கள். இப்போது மிகுந்த நீரினால் விரைந்து ஓடும் யோர்தானைக் கடந்தது சுற்றியுள்ள நாடுகள் அனைத்தையும் பீதியால் நிறைந்தது. கானானியருக்கும் இஸ்ரவேலர் அனைவருக்கும் யோசுவாவுக்கும் கூட, பரலோகத்துக்கும் பூமிக்கும் ராஜாவாகிய ஜீவனுள்ள தேவன் தம் மக்களிடையே இருந்தார், அவர் அவர்களைத் தோல்வியடைய விடமாட்டார், அவர்களைத் தள்ளிவிடவும் மாட்டார் என்பதற்கு சந்தேகமற்ற ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ளது." -Patriarchs and Prophets, p.485.

ஆ. சுழன்றோடும் யோர்தான் நதியின் தண்ணீர்களில் கால் பதித்ததன் மூலம் விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதில் தலைமை ஏற்க ஒருசிலர் அழைக்கப்பட்ட விதத்திலிருந்து நாம் கற்றறியவேண்டியது என்ன? யோசுவா 3:14,15.

"ஆசாரியர் தங்கள் தலைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு ஜனங்களுக்கு முன்னே போனார்கள். எபிரேய சேனைகள் அணிவகுத்துச் சென்று, இந்த தெய்வீக பிரசன்னத்தின் அடையாளத்தைப் பின்பற்றினார்கள். இப்பெரிய மக்கள் கூட்டம் யோர்தானின் கரைகளில் தரித்து நின்றது; ஆசாரியரின் பாதங்கள் ஆற்றின் ஓரங்களில் இறங்கி மூழ்கியபோது, மேலேயிருந்து வரும் நீர் துண்டிக்கப்பட்டது, கீழே போன நீர் உருண்டோடி ஆற்றின் படுகையை உலர்ந்ததாக்கியது. ஆசாரியர்கள் தேவனுடைய பெட்டியைச் சுமந்துபடி கடந்தார்கள்; இஸ்ரவேலர் பின்னே தொடர்ந்தார்கள். யோர்தானில் பாதி வழி சென்ற பிறகு எபிரேய சேனைகள் முழுவதும் மேலே கடந்துசெல்லும் வரையிலும் ஆற்றின் நடுவிலே நிற்குமாறு ஆசாரியர்கள் கட்டளை பெற்றனர். யோர்தானின் தண்ணீர்களை நிறுத்திய வல்லமை, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர்களது தந்தையரை செங்கடலைக் கடக்குமாறு செய்த அதே வல்லமைதான் என்ற உண்மையை இது அவர்களது மனங்களில் இன்னும் பலமாகப் பதியச் செய்தது." -Testimonies, vol.4, p.157.

"வாழ்வின் லௌகீகக் கடமைகளில் ஒருபோதும் வெற்றி காணாத இளைஞர்கள் உன்னதமான கடமைகளில் ஈடுபடவும் அதேமாதிரி ஆயத்தமற்றவர்களாகவே இருப்பர். போராட்டத்தின் மூலமாய், ஏமாற்றத்தின் மூலமாய், கடுமையான சுயக்கட்டுப்பாட்டின் மூலமாய், உண்மை ஆர்வத்துடன்கூடிய உருக்கமான ஜெபத்தின் மூலமாய்த்தான் பக்தி அனுபவம் பெறப்படுகின்றது. பரலோகத்திற்கான அடிகளை ஒவ்வொன்றாகத்தான் எடுத்துவைக்கவேண்டும்; ஒவ்வொரு முன்னேற்ற அடியும் அடுத்த அடியை எடுத்துவைக்க பலத்தைத் தருகின்றது." -Counsels for Parents, Teachers and Students, p.100.

4. தேவனுடைய பாதுகாவலின் நினைவுச் சின்னங்கள்

அ. இஸ்ரவேலர் விசுவாசத்தினால் முன்சென்றபோது, அனைத்து ஜனங்களும் கானான் தேசத்திற்குக் கடந்துசெல்லவைத்த அற்புதம் எது? யோசுவா 3:11-17.

''பரிசுத்த பெட்டியுடன் சென்றவர்[ஆசாரியர்]கள் கால்கள் நீரில் அமிழும் வரையிலும், அந்தச் சீறிப் பிரவாகிக்கும் நீரோட்டத்தை நோக்கி உறுதியாகச் சென்றதை [சபை]கண்டது. பிறகு திடீரென்று மேலிருந்து வரும் நீரோட்டம் பின் சுருண்டது, அதே சமயம் கீழே ஓடிய நீரோட்டம் வடிந்தோடிவிட்டது. ஆற்றின் படுகை வெட்டாந்தரையாகியது.

''தெய்வீக கட்டளையினால், ஆசாரியர் முன்சென்று, ஆற்றங்காலின் நடுவே நின்றனர்; அப்போது சேனையனைத்தும் இறங்கி அடுத்த பக்கம் கடந்துசென்றது. இவ்வாறு, யோர்தானின் தண்ணீர்களை நிறுத்திய வல்லமை, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் பிதாக்களுக்குச் செங்கடலைத் திறந்த அதே வல்லமைதான் என்ற உண்மையை இஸ்ரவேலர் அனைவர் மனங்களிலும் பதியச்செய்தது. ஜனங்கள் யாவும் கடந்து சென்ற பின்பு, பெட்டியும் மேற்குக் கரைக்குத் தூக்கிச்செல்லப்பட்டது. அது ஒரு பத்திரமான இடத்தை அடைந்ததுமே, 'ஆசாரியரின் உள்ளங்கால்கள் தரையில் ஊன்றினபோது', சிறைபட்ட தண்ணீர்கள் விடுபட்டு, கீழே விரைந்தது; அமைதியற்ற வெள்ளம் வழக்கம்போல இயல்பாக ஆற்றில் ஓடியது.'' -Patriarchs and Prophets, p.484.

ஆ. ஒருகாலத்தில் ஜனங்கள் ஆற்றைக் கடந்தபோது தேவன் கேட்டது என்ன? யோசுவா 4:1-5. தேவனுடைய அற்புதங்களுக்குக் காணத்தக்க நினைவூட்டங்கள் (ஞாபகச் சாட்சிகள்) நமக்குத் தேவையாய் இருப்பது ஏன்? வெளிப்படுத்தின விசேஷம் 12:11.

''அனைவரும் கர்த்தருக்காகச் சொல்வதற்கு எதையாவது வைத்திருக்கவேண்டும்; ஏனெனில், அவ்வாறு செய்வதனால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தாங்கள் கூடிவருதலை மறுதலியாமல், அடிக்கடி ஒருவரோடொருவர் பேசுபவர்களைப் பற்றிய ஞாபகப் புஸ்தகம் ஒன்று எழுதப்பட்டுவருகிறது. மீதியானவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வார்த்தையினாலும் ஜெயங்கொள்ள வேண்டும். சிலர் தங்களது சொந்த விசேஷித்த முயற்சி எதுவும் இல்லாமல், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் மட்டுமே வெற்றி பெறுவதற்கு எதிர்பார்க்கிறார்கள். தேவன் நமக்குப் பேச்சின் வல்லமையைக் கொடுத்து கிருபை பொருந்தியவராய் இருப்பதை நான் கண்டேன். அவர் நமக்கு ஒரு நாவைக் கொடுத்துள்ளார்; அதன் உபயோகத்தைக் குறித்து நாம் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் சத்தியத்தைக் கனப்படுத்தியும், அவரது மட்டற்ற கிருபையைப்பற்றியும் பேசி நமது வாயால் தேவனை மகிமைப்படுத்தவேண்டும்; ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின் மூலம் நம்முடைய சாட்சியின் வார்த்தையினால் வெற்றிகொள்ள வேண்டும்.'' -Early Writings, p.114.

''ஆட்டுக்குட்டியானவரது இரத்தத்தினாலும் நம்முடைய சாட்சியின் வசனிப்பினாலும், மற்றவர்கள் ஜெயங்கொள்ள உதவுவதன் மூலம் ஜெயங்கொள்பவர்களாகிறோம்.'' -SDA Bible COmmentary [E.G.White Comments], vol.7, p.974.

5. ஓர் ஒன்றுகூடுதலின் இடம்

அ. யோர்தான் ஆற்றின் உலர்ந்த படுகையில் எடுக்கப்பட வேண்டியிருந்த பன்னிரண்டு கற்களுக்குரிய நோக்கம் என்னவாக இருந்தது? யோசுவா 4:6-10, 20-24.

"மாபெரும் அற்புதமாகிய [யோர்தானைக் கடத்தல்] இதற்கு ஒரு சாட்சி வருங் கால சந்ததியசினருக்கு இல்லாமல் போகக்கூடாது. பெட்டியைச் சுமக்கும் ஆசாரியர் இன்னமும் யோர்தானின் நடுவில் தரித்திருக்கும்போதே, ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் முன்பே தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு பேர்கள், ஆசாரியர் நின்றிருந்த இடத்திலிருந்து ஆளுக்கு ஒரு கல்லை எடுத்து, அதை மேற்குப் பக்கத்திற்குக் கொண்டு சென்றனர். இந்தக் கற்கள் ஆற்றுக்கப்பால் முதலில் தங்குகிற இடத்தில் ஒரு ஞாபகார்த்தமாக நிறுத்தப்படவிருந்தன." -Patriarchs and Prophets, p.484.

ஆ. ஆற்றில் முதலாவதாக இறங்கியது எது, கடைசியாக வெளிவந்தது எது? யோசுவா 3:15, 4:18. தேவனுடைய பெட்டியின் மீது நம் கண்களை ஏறெடுக்க வேண்டியது ஏன்? எண்ணாகமம் 10:33.

"இஸ்ரவேலின் எல்லாப் பிரயாணங்களிலும், 'கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத் தேடிக் காட்டும்படிக்கு அவர்கள் முன் சென்றது' (எண்ணாகமம் 10:33). கோகாத்தின் புத்திரரால் சுமந்து செல்லப்பட்ட தேவனுடைய பரிசுத்த பிரமாணங்களை உள்ளடக்கிய அப் புனிதப் பேழை, அம்மக்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றது. முன்னர் அது மோசேயோடும் ஆரோனோடும் சென்றது; வெள்ளி எக்காளங்களைத் தூக்கிவந்த ஆசாரியர் அருகே நிறுத்தப்பட்டனர். இந்த ஆசாரியர் செயல் முறைகளை மோசேயிடமிருந்து பெற்றனர்; இதை அவர்கள் எக்காள சத்தத்தின் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தினர். எக்காளத்தொனி குறிப்பிட்டபடியே, செய்யவேண்டிய நடைபயணங்கள் அனைத்திலும் உரிய சரியான வழிகாட்டுதல்களைத் தரவேண்டியது ஒவ்வொரு குழுவின் தலைவர்களுடைய கடமையாகும். கொடுக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி நடப்பதைக் கைவிட்ட எவரும் மரண தண்டனையால் தண்டிக்கப்பட்டனர்.

"தேவன் ஓர் ஒழுங்கின் தேவன். பரலோகத்துடன் தொடர்புடைய அனைத்தும் பூரண ஒழுங்கின்படி உள்ளன; கீழ்ப்படிதலும் முழுமையான ஒழுங்குமுறையும் தூத சேனைகளின் செயல்பாடுகளைக் குறிக்கின்றன. ஒழுங்கும் கட்டுப்பாடுமான செயலுக்கே வெற்றி கிட்டும். தேவன் தமது பணியிலே இஸ்ரவேலரின் நாட்களைவிடக் கொஞ்சமும் குறையாத ஒழுங்கையும் சரியான அமைப்பு முறையையும் கேட்கின்றார். அவருக்காக ஊழியம் செய்யும் அனைவரும் அறிவுக்கூர்மையுடன் உழைக்கவேண்டும்; அக்கறையற்ற, முன்னுக்குப் பின் முரணான விதத்தில் உழைக்கக்கூடாது. அவர் தம்முடைய அங்கீகாரத்தை ஊழியத்தின்மீது முத்திரையிடும் வகையில், அவ்வூழியம் விசுவாசத்துடனும் சரியாகவும் அவ்வேலையை செய்ய வைப்பார்." -Patriarchs and Prophets, pp.375, 376.

இ. பழங்கால தேவமக்களிடையே அவருடனான தொடர்பு மையம் எங்கே காணப்பட்டது? யாத்திராகமம் 25:21,22, இன்று அப்படிப்பட்ட ஒரு மையத்துடன் எதன் மூலம் தொடர்புகொள்கிறோம்? 1 தெசலோ 5:17. எபிரெயர் 4:16.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. இஸ்ரவேலர் தங்களது பிரயாணங்களில், ஒவ்வொரு சோதனையான சூழ்நிலையிலும் விசுவாசத்துடன் காணப்பட, தங்கள் கண்களை எதன் மீது வைக்கவேண்டியதிருந்தது?

ஆ. உடன்படிக்கைப் பெட்டியை மிக முக்கியமானதாகச் செய்த எது அதனுடன் இணைந்திருந்தது?

இ. ஓர் அற்புதத்தின் மூலம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைகையில் புதிய தலைமுறையினராகிய அவர்களுக்கு தேவன் வடிவமைத்திருந்த அனுபவம் யாது?

ஈ. நமது வாழ்வின் விசேஷ சம்பவங்களைப்பற்றிய நினைவுச்சின்னங்களை அல்லது ஞாபகார்த்தங்களை உருவாக்குவதன் நோக்கம் என்ன?

உ. நாம் பாதுகாப்புடன் இருக்க விரும்பினால், நாம் எதை நோக்கிப் பார்க்க வேண்டும்?

"கர்த்தர் தமது பழங்கால மக்களுக்குக் கற்பித்த பாடங்களின் நினைவுகளைப் புதுப்பித்தலின் மூலம் நமது இருதயத்தையும் மனத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்துவர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவரது வசனத்தின் போதனைகள் அவர்களுக்கு எப்படி வடிவமைக்கப்பட்டதோ அப்படியே இப்போது நமக்கும் என்றும் ஆர்வ மூட்டுவதாகவும் நெஞ்சத்தை ஆட்கொள்ளுவதாகவும் இருந்துவரும்." -The SDA Bible Commentary, [E.G.White Comments], vol.2, p.994.

"தேவன் கடந்த காலத்தில் தம் மக்களுக்கு அளித்த ஒவ்வொரு விடுதலையும், ஒவ்வொரு ஆசீர்வாதமும் நினைவாலயத்திலே மேலும் அதிகமதிகமான, பெருக்கமான ஆசீர்வாதங்களை அவர் அருளும் வகையில் ஓர் உறுதியான உடன்படிக்கையாக புத்தம் புதிதாக வைத்துக் காக்கப்படவேண்டும். ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் அவரது மக்களின் தேவைகளுக்கு ஏற்றவையாக உள்ளன." -Ibid., vol.4, p.1183.

"பெட்டியினுள்ளே வைக்கப்பட்டிருந்த கற்பனைகளை அவர்கள் [இஸ்ரவேலர்] பரிசுத்த குலைச்சலாக்கியபோது, தேவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாக இருந்த உடன்படிக்கைப் பெட்டியை நம்புவது எவ்வளவு வீண் என்று இஸ்ரவேலருக்குச் காட்டவே ஏலியின் நாட்களில் [இஸ்ரவேலின்] விரோதிகளாகிய பிலிஸ்தியர்களால் தமது பெட்டி எடுத்துச் செல்லப்பட தேவன் அனுமதித்தார். அவர்களது கர்வங்கொள்ள வைக்கும் பலத்திற்கும் சுயநம்பிக்கைக்கும் காரணமாயிருந்த அந்தப் பரிசுத்த பெட்டியை அவர்களிடமிருந்து அகற்றியதன் மூலம் தேவன் அவர்களைத் தாழ்த்தினார்." -The Spirit of Prophecy, vol.1, p.404.

"இஸ்ரவேலர் தேவனுடைய பெட்டியில் நம்பிக்கை வைத்தார்கள்; பெட்டியானது குறிப்பிட்ட தேவனை வழிபடுவதற்கு பதிலாக, அதையே வணங்கினார்கள். தேவனுடைய வல்லமையையும் அவரது பிரசன்னத்தையும் இஸ்ரவேலருக்கு உறுதிப்படுத்திய, அவரது பிரசன்னத்தின் அடையாளத்தை கர்த்தர் தம் மக்களிடமிருந்து விலக்கினார். அதன் பின்னர் யூத ஜனம் மேற்கொண்டு அதிக காலத்திற்கு ஒரு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும் ராஜரீக ஆசாரியத்துவமுடையதாகவும் நிலைக்க வில்லை. அவர்கள் தங்கள் தேவனை மறந்து உலகின் எல்லாப் பாகங்களிலும்

சிதறுண்டு போனார்கள். அவரது கற்பனைகளுக்கு உண்மை விசுவாசமாகவும் உறுதியாகவும் உண்மைக் கீழ்ப்படிதலுடனும் இருந்தவர்களுக்கு தேவன் தயை செய்தார். சிறையிருப்பின் தேசங்களிலும் கர்த்தராகிய தேவன் வெளிப்படுத்தினார். ஏனெனில், விசுவாசமுள்ள அனைவரும், அவர்கள் யாராயிருந்தாலும், ஜெபத்தின் மூலமும், வேண்டுதல் விண்ணப்பங்களின் மூலமும் பரலோக ஐக்கியத்தின் மூலமும் தேவனிடம் அணுகுவதற்கான வழி திறந்தே இருக்கிறது." -Manuscript Releases, vol.5, p.210.

"தாங்கள் விக்கிரகங்களோடு வாழ்ந்து, பாவங்களில் வீழ்ந்து கிடப்பதை நன்கு உணர்ந்தவர்கள் எவ்வளவு அற்பமான தொகையினராக உள்ளனர்! உங்களைக் குருடாக்கத்தக்கதான பாவங்களை தேவன் காண்கிறார்; அவர் நுனி நறுக்கும் கத்தியைக் கொண்டு ஆழமாக நறுக்கி, இந்த மனத்தைவிட்டு அகலாது குடிகொண்ட உங்களது பாவங்களைப் பிரித்து அகற்றுகிறார். பரிசுத்தமாக்கும் நடவடிக்கையைத் தேர்ந்தெடுப்பதே நீங்கள் உங்களுக்காக செய்யவேண்டு(விரும்பு)வது." -Testimonies, vol.3, p.543.

சட்டங்களும் தீர்ப்புகளும்

"ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப் பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்" (மல்கியா 4:4).

"அவை வெகு அற்பமானவையாக இருந்தாலும், சத்தியத் முன்னேற்றத்தை தடை செய்கிற, அகற்றப்படவேண்டிய இடறுதலுக்கான கற்களாக இருந்தாலும், ஒவ்வொருவரின் இருதயங்களையும் படிக்கிற தேவன், அந்த காரத்திற்குரிய இந்த மறைவான காரியங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவார்; தேவனுடைய கட்டளைகளையும் நியாயங்களையும் அறிவிக்கிற ஒரு சுத்தமான, பரிசுத்த ஜனம் அவருக்கு உண்டு." - Testimonies, vol.1, p.333.

மேலும் படிக்க: The Desire of Ages pp.307-310, 824.

ஞாயிறு ஜூலை 20

1. நம்முடைய வாழ்வில் தேவனுடைய பிரமாணம்

அ. உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள எந்தப் பொருள் நமது சிருஷ்டிகரின் பண்பை வெளிப்படுத்துகிறது? மத்தேயு 22:36-40; 1 யோவான் 4:7,8; 5:3.

"தேவனுடைய பிரமாணம் தேவனைப் போலவே பரிசுத்தமானது. அது அவருடைய சித்தத்தின் வெளிப்பாடு, அவரது பண்பின் மறுபதிப்பு, தெய்வீக அன்பின், ஞானத்தின் வெளிப்படுத்தல்." -Patriarchs and prophets, p.52.

"தேவன், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் - என்று, நித்திய ஜீவனுக்கென்று தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் தமது வசனத்திலே நிபந்தனைகள் விதித்துள்ளார். தேவன் தம்முடைய பிரமாணத்துடன் ஒன்றுபட்ட ஒரு பண்பை தேர்ந்தெடுத்துள்ளார்; அவரது தர அளவீட்டை எட்டும் எவரும் மகிமையின் ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு ஒன்றைப் பெறுவார்கள்." -Ibid., p.207

ஆ. நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், சத்தியத்தைப்பற்றி தெளிவான புரிந்துகொள்ளுதலும் நம்பிக்கையும் இருப்பதோடு, வேறு எதுவும் நமக்கு இருக்கவேண்டும்? மத்தேயு 5:20; 19:17-19; யாக்கோபு 2:10; கலாத்தியர் 5:6.

"நீங்கள் சத்தியம் அனைத்தையும் நம்பலாம்; இருந்தாலும் உங்கள் வாழ்வில் அதன் அடிப்படைகள் நடைமுறையில் பின்பற்றப்படாவிட்டால், உங்கள் தொழில் சிறப்பு உங்களை இரட்சிக்காது." -Testimonies, vol.2, p.161.

"கிறிஸ்து கற்பித்த நீதியானது, வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு இருதயமும் ஜீவியமும் ஸ்திரப்படுவதே ஆகும்." -The Desire of Ages, p.310.

2. பத்து கட்டளைகளை வகைப்படுத்துதல்

அ. தேவன், தமது பிரமாணத்தைப் புரிந்துகொள்ளும் தன்மையை இழந்து விட்டவர்கள்மீது வைத்த பேரன்பினால் எப்படிப்பட்ட வகைப்படுத்தலை அவர் மேலும் அனுப்பினார்? யாத்திராகமம் 4:1,2.

"கற்பனைகளிலுள்ள பத்து கட்டளைகளை மட்டும் தந்துவிட்டு விட்டுவிடாமல் [தேவன்] தம் மக்களிடம் இன்னும் நெருங்கி வந்தார். அவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டவைகளைக் குறித்த நுட்பமான வழிகாட்டுதல்களைக் கொடுத்து, தீர்ப்புகளையும் சட்டங்களையும் மோசேக்கு தாம் அறிவுறுத்திய பிரகாரம் எழுதிவைக்கக் கட்டளையிட்டார், அதன்மூலம், தாமே கற்பலகைகளின் மீது கடாவிய பத்து கட்டளைகளுக்கு அரண் சேர்த்தார். இந்த விசேஷித்த வழிகாட்டுதல்களும் நிபந்தனைகளும், தவறு செய்கிற மனிதனை, மீறுதலுக்குள்ளாகிற நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியுமாறு பற்றி இழுக்கும்பொருட்டு கொடுக்கப்பட்டன.

"ஆதாமின் விழுகைக்குப் பின்னர் அவனுக்குக் கொடுக்கப்பட்டபடியே, நோவாவால் பேழையில் பாதுகாத்தபடியே, ஆபிரகாமால் ஆசரிக்கப்படியே மனிதன் தேவனுடைய பிரமாணத்தைக் கைக் கொண்டிருந்தால், விருத்தசேதனச் சடங்குக்குத் தேவை எதுவும் இருந்திருக்காது. விருத்தசேதனம் ஓர் அடையாளமாக அல்லது வாக்குறுதியாக இருக்கிற உடன்படிக்கையை ஆபிரகாமின் சந்ததியார் கைக்கொண்டிருந்தால், அவர்கள் ஒருபோதும் விக்கிரக வணக்கத்தில் விழுந்திருக்கமாட்டார்கள், எகிப்துக்குப் போய் உபத்திரவப்பட்டும் இருக்கமாட்டார்கள்; தேவன் சீனாயிலிருந்து தம் பிரமாணத்தை அறிவிக்கவேண்டிய தேவையும் இருந்திருக்காது; அதைக் கற்பலகைகளில் கடாவி, மோசேக்குக் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்புகள், சட்டங்களில் குறிப்பிட்ட வழிமுறைகலால் பாதுகாக்கவேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

"மோசே தேவனுடன் மலையில் இருந்தபோது, அவருடைய வாய்மொழியாகக் கேட்டு இந்த நியாயங்களையும் விதிமுறைகளையும் எழுதிவைத்தான். தேவனுடைய மக்கள் பத்து கற்பனைகளின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார்கலானால், மோசே தேவனுக்கும் உடன் மனிதர் ஒருவருக்கொருவருக்கும் ஆற்றவேண்டிய கடமையாக ஒரு புஸ்தகத்திலே எழுதிவைத்த விசேஷித்த வழிமுறைகள் கொடுக்கப்படவும் தேவை இருந்திருக்காது. தேவ மக்கள் ஒருவருக்கொருவருக்கும் புதியவர்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமை குறித்து கர்த்தர் மோசேக்குக் கொடுத்த குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் பத்துக்கற்பனைகளின் அடிப்படைகள் எளிமையாக்கப்பட்ட வடிவமாகும்; அவர்கள் தவறு இழைக்கக்கூடாது என்றே அவை ஒரு குறிப்பிட்ட முறையில் கொடுக்கப்பட்டுள்ளன." -The Spirit of Prophecy, vol.1, pp.264, 265.

ஆ. நியாயப்பிரமாண விதிமுறைகள் தேவனுடைய பிரமாணத்தை எளிதாக விளக்குபவை என்றால், அவை மோசேயின் எழுத்துகளை விடவும் அதிகமானவற்றைக் கொண்டவையா? ஏசாயா 8:20; 2 இராஜாக்கள் 17:13; லூக்கா 24:44, 45. பிரமாணத்தை முறித்த நிலையில், அதை நிலைநிறுத்தவதை அவை குறிக்குமா? ஏசாயா 58:12.

"தேவனுடைய பிரமாணம் நமது நடத்தையை ஒழுங்கு செய்யக் கொடுக்கப்பட்டது. அது அதனுடைய அடிப்படைகளை எங்கெங்கும் எட்டிப்பிடிப்பது. பிரமாணத்தால் கண்டிக்கப்படாமல் தப்பிக்கக்கூடிய பாவமோ, அநீதியான செயலோ இல்லை. சத்தியம், சத்தியம் ஒன்றே மாபெரும் சட்ட புத்தகம் ஆகும்." -Selected Messages, bk.1, p.316.

செவ்வாய் ஜூலை 22

3. நன்மையற்ற விதிமுறைகள்

அ. மனுக்குலத்தின் நன்மைக்காக வடிவமைக்கப்படாத சட்டதிட்டங்களை தேவன் எப்போதாவது கொடுத்தாரா? அப்படியானால், ஏன்? எசேக்கியேல் 20:19-26; சங்கீதம் 81:11,12. இறைச்சி உணவுகளை பயன்படுத்துவது குறித்து அப்படிப்பட்ட எடுத்துக்காட்டு ஒன்றைக் குறிப்பிடுக. யாத்திராகமம் 12:20,21.

"இந்த சம்பவத்தில் [இஸ்ரவேலரின் பாளயத்தில் காடைகள் வந்து விழுந்தபோது] கர்த்தர் ஜனங்களுக்கு, அவர்களது சிறந்த நன்மையல்லாததைக் கொடுத்தார்; ஏனெனில் அதை அவர்கள் அடையவேண்டியதே. அவர்களது நன்மைக்கானது என்று நிரூபிக்கப்பட்ட காரியங்களை மட்டும் கர்த்தரிடமிருந்து பெறுவதற்காகக் கீழ்ப்படிய மாட்டார்கள்." -Counsels on Diet and Foods, p.377.

"[இஸ்ரவேலர்] செத்த விலங்குகளின் இறைச்சிக்காக மிகத் தீர்மானமாக இருந்தபடியால், அவர்கள் விரும்பிய, [தேவன்] அவர்களிடமிருந்து விலக்கிய உணவை அவர்களுக்குக் கொடுத்தார்." -Medical Missionary, p.277.

ஆ. தேவன் தமது பண்பிற்கும் அடிப்படைக் கொள்கைகளுக்கும் முரணான சில சட்டங்களைக் கொடுப்பது ஏன்? எசேக்கியேல் 14:1-5; மாற்கு 10:5.

"நியாயப் பிரமாணத்தின் மீறுதலே பாவம்; மேலும், இன்று இரட்சிக்க வல்லமையுள்ள அதே கரம், தெய்வீகப் பொறுமையின் எல்லை வரையறைகளைக் கடந்து செல்லும் மீறுதலாளரைத் தண்டிக்கவும் உறுதியானதாக இருக்கும். சத்தியமாவது என்னவென்று அறிய வேதவசனங்களைத் தேடாதவனாகிய, ஜீவனைத் தேடமறுப்பவன், மனக்குருடனாக இருக்கும்படியும், சாத்தானின் வஞ்சகங்களிலும் விட்டுவிடப்படுவான். பாவத்திற்கு மனம் வருந்திறவர்களும் கீழ்ப்படிகிறவர்களும் தேவ அன்பினால் பாதுகாக்கப்படுகிற அதே அளவில், பாவத்திற்கு மனம் வருந்தாதவர்களும் கீழ்ப்படியாதவர்களும் தங்களது அறியாமையின், இருதயக் கடினத்தின் பலனைக் காணும்படி விடப்படுவார்கள்; ஏனெனில், அவர்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், பெறவேண்டிய சத்தியத்தின் அன்பைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள்." -Selected Messages, bk.1, p.313.

தேவன் மனிதர்களுக்கு மரியாதை தருபவர் அல்ல; ஆனால் ஒவ்வொரு சந்ததியிலும் கர்த்தருக்குப் பயந்து, நீதியைச் செய்கிறவர்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்; அதே சமயம், முறுமுறுக்கிற, அவிசுவாசமுள்ள கலகக்காரர்கள், சத்தியத்தை நேசித்து அதில் நடக்கிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட அவருடைய தயவையும் ஆசீர்

வாதங்களையும் பெறமாட்டார்கள். ஒளியைப் பெற்றிருந்தும் அதனைப் பின்பற்றாமல், தேவன் கேட்பவைகளை அலட்சியப்படுத்திவிடுகிறவர்கள் தங்கள் ஆசீர்வாதங்கள் எல்லாம் சாபங்களாக மாறிவிடும் என்றும், அவர்கள் பெற்றிருந்த தயவுகள் எல்லாம் நியாயத்தீர்ப்புகளாக மாறிவிடும் என்றும் காண்பார்கள். தேவன் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட, விசேஷித்த – ஆனால் தங்கள் சொந்த வழிகளைப் பின்பற்றியதால், தங்கள் அழிவைத் தேடிக்கொண்ட ஜனமான பண்டைய இஸ்ரவேலரின் சரித்திரத்தை நாம் படிக்கையில், தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்று நமக்கு காட்டுகிறார் எனலாம்." -Counsels in Diet and Foods, p.379.

புதன் ஜூலை 23

4. நல்ல சட்டதிட்டங்களின் எடுத்துக்காட்டுகள்

அ. உணவுமுறை சீர்திருத்தத்திற்கு சில நல்ல விதிமுறைகள் பயனுள்ளவை என்பதால், அவற்றிற்குக் கீழ்ப்படிதலின் பலன் என்ன? ஆதியாகமம் 1:29; யாத்திராகமம் 15:25,26.

"ஆரோக்கியத்தின் மீதான அக்கறை கொள்வதன் முக்கியத்துவம் பற்றி வேதம் கேட்கும் நெறிமுறைகளின்படியே கற்பிக்கப்படவேண்டும். தேவனுடைய கட்டளைகளுக்குப் பூரணமாகக் கீழ்ப்படிதல் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும்படி அழைக்கின்றது." -Counsels to Parents and Teachers and Students, p.295.

"[கர்த்தர் தம் மக்களுடன்] ஓர் உடன்படிக்கையைச் செய்தார், அவர்கள் எல்லா காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிவார்களானால், அவர் அவர்களை நோய் நொடிகளிலிருந்து பாதுகாப்பார்." -Selected Messages, bk.2, p.412.

ஆ. ஆரேக்கிய விதிகள் உடல், ஆத்துமா இரண்டையும் பாதிக்கின்றன என்று புதிய ஏற்பாடு எவ்வாறு காட்டுகின்றது? 3 யோவான் 2; 1 கொரிந்தியர் 6:19,20.

"ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துவதில், ஆரோக்கியக் கொள்கைகளை எடுத்துரைப்பதன் மூலம் மிகப்பெரிய பணியைச் செய்து முடிக்கவேண்டியுள்ளது. உடலின் தேவைகள், வேத வசனங்களில் கற்பிக்கப்பட்டுள்ளபடி ஆரோக்கிய வாழ்வின் மதிப்பு, தேவன் படைத்த உடல்களை ஓர் ஜீவபலியாக அவருக்கே செலுத்தலாம், அவரது ஊழியத்தில் ஈடுபடுத்தத் தகுதியானதாக அவர் ஏற்றுக்கொள்ள அர்ப்பணிக்கலாம் என்பவை யாவும் மக்களுக்குப் போதிக்கப்படவேண்டும். துன்பப்படும் மனுக்குலத்தை தேவன் அளித்துள்ள இயற்கை நிவாரணிகளின் உபயோகத்தால் அவர்களின் துன்பம் களைவதில், உணவு விருப்பங்களையும் ஆசைகளையும் ஒழுங்குபடுத்துவதனால் உடல்நலக்கேட்டை எப்படித் தடுக்கலாம் என்று அவர்களுக்குக் கற்பிப்பதில் மாபெரும் பணி செய்து முடிக்கப்படவேண்டியுள்ளது. இயற்கைப் பிரமாணங்களை மீறுதல் தேவனுடைய பிரமாணங்களை மீறுவதாக இருக்கிறது என்று மக்களுக்குப் போதிக்கப்படவேண்டும்." -Testimonies, vol.6, pp.224, 225.

"கல்வி எனும் அறிவியல் உடலியலியலைப்பற்றிய அறிவையும் முழுமையாகப்

பெறுவதை உள்ளடக்கியுள்ளது. தன்னை தேவனுடைய சொத்தாகக் கருதி தனக்குத் தான் செய்யவேண்டிய கடமைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டாலன்றி, தேவனுக்குச் செய்யவேண்டிய தனது கடமைகளை எவனும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. உயிர் வாழ்க்கை, உடல்நலம் ஆகியவற்றிற்கான சட்டங்களை அறியாத பாவ அஞ்ஞானத்தில் தொடர்ந்து இருப்பவன் அல்லது மனமறிந்து இச்சட்டங்களை மீறுகிறவன் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்கிறான்." -Counsels to Parents, Teachers and Students, p.295.

"சுகாதார சீர்திருத்தத்தின் மாபெரும் நோக்கம், மனம், ஆத்துமா, உடல் ஆகியவற்றின் சிறந்த, உயர்ந்த மேம்பாட்டை அடைவதேயாகும் என்பதை எப்போதும் மனத்தில் இருத்திவைக்கவேண்டும். இயற்கைப் பிரமாணங்(சட்டங்)கள் யாவும் - தேவனுடைய பிரமாணங்களாக இருப்பவை - நம்முடைய நன்மைக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளன அவற்றிற்குக் கீழ்ப்படிவது இந்த வாழ்வில் நம் மகிழ்ச்சியை மிகுவிப்பதோடு, இனிவரப்போகிற வாழ்விற்கான ஆயத்தத்தில் நமக்குத் துணையாகவும் நிற்கும்." -Christian Temperance and Bible Hygiene, p.120.

வியாழன் — ஜூலை 24

5. நித்திய கட்டளைகள்

அ. இந்தக் கடைசி நாட்களில் பிரமாணங்களைக் குறித்தும், அவற்றிற்கு தேவ மக்கள் கீழ்ப்படிவதனால் தொடரும் பலன்களைக் குறித்தும் சொல்லப்பட்டிருப்பது என்ன? மல்கியா 4:2,4.

"தொடர்ச்சியான மீறுதலின் விளைவாக நியாயப்பிரமாணம் சீனாயிலே பயமூட்டும் மகிமையிலே திரும்பவும் கொடுக்கப்பட்டது. அன்றாட வாழ்வைக் கட்டியாளும் சமயசம்பந்தமான கட்டளைகளை கிறிஸ்துவானவர் மோசேக்குக் கொடுத்தார். இக்கட்டளைகள் பத்துக் கற்பனைகளை அரண் செய்யும்பொருட்டு விளக்கமாகக் கொடுக்கப்பட்டன. அவை கிறிஸ்துவின் மரணத்துடன் கடந்துபோகிற நிழலாட்டமான மாதிரிகள் அல்ல. அவை கால முடிவு வரையில் எல்லாக் காலங்களிலும் மனிதரைக் கட்டுப்படுத்த வேண்டியவை. இந்தக் கட்டளைகள் நியாயப் பிரமாண்ததின் அதிகாரத்தினால் அமல்படுத்தப்படவேண்டியவை; மேலும், அவை அந்தப் பிரமாணத்தைத் தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் விளக்கின." -The SDA Bible Commentary, [E.G.White Comments], vol.1, p.1104.

"ஆடவரும் பெண்டிரும் சிறுபிள்ளைகளும் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்கையில், கர்த்தர் தம் கட்டளைகளைக் காணும்படி குருடர்களின் கண்களைத் திறந்து, தமது பிரமாணத்திற்கு உண்மை விசுவாசமுள்ளவர்களின் இருதயங்களில் எழுதுவார். தேவனுடைய உயிர்ப்பூட்டும் ஆவி மானுடப் பிரதிநிதிகளின் மூலமாகக் கிரியை செய்து, விசுவாசிகளை ஒரே மனமும் ஒரே ஆத்துமாவுமாய் தேவனை நேசிப்பதில் ஐக்கியப்பட்டிருக்கவும், அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளவும் - அதன் மூலம் மறுரூபப்பட ஆயத்தமாகவும் விசுவாசிகளை வழிநடத்துகின்றது." -Ibid., vol.7, p.984.

ஆ. இந்தக் கட்டளைகள், இந்தக் கடைசி நாட்களிலுள்ள எலியா மக்களால் மீண்டும் பழைய நிலைக்குக் கொணர்ந்து நிலைநிறுத்தப்படவேண்டியிருப்பது ஏன்? மல்கியா 4:5,6; மத்தேயு 11:14.

"கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறவர்கள் விசுவாசமுள்ள எலியாவினால் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்; கிறிஸ்துவின் முதல் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணின யோவான், எலியாவின் ஆவியில் வந்தது போல... சீர்திருத்தம் என்னும் மாபெரும் பாடப்பொருள் கிளர்ந்தெழச் செய்யப்பட வேண்டும், மக்களின் மனம் எழுச்சியடையச் செய்யப்படவேண்டும். தேவமக்களை அவர்களது விக்கிரக ஆராதனையிலிருந்தும், அவர்களது மிதப்பிலிருந்தும், உடை உடுத்துதலிலும் பிறவற்றிலும் அவர்களது ஆடம்பரங்களிலிருந்தும் பின்திரும்பச் செய்ய, எல்லா விஷயத்திலும் இச்சையடக்கமானது சுவிசேஷத் தூதுடன் இணைக்கப்படவேண்டும்." -Testimonies, vol.3, p.62.

"அநேகர் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை; என்றாலும் கீழ்ப்படிவதுபோல் நடிக்கிறார்கள். அவர்கள் தேவகட்டளைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதில் உண்மையுள்ளவர்களாக இருப்பார்களானால், அவிசுவாசமுள்ள இருதயங்களை உணரச் செய்கிற ஒரு வல்லமையை அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்." -Ibid., vol.2, pp.446, 447.

"பண்டைய இஸ்ரவேலரின் வணங்காக் கழுத்துள்ள தன்மைக்காக மோசேக்குக் கொடுக்கப்பட்ட போதனைகள் இன்றைய தேவ மக்களால் ஆராய்ந்து அறியப்படவும், கீழ்ப்படியப்படவும் வேண்டும்." -The SDA Bible Commentary, [E.G.White Comments] vol.1, p.1103.

"எபிரேயர்கள் செய்ததைப் போலவே நாமும் நம் சொந்த வழியைத் தெரிந்துகொண்டு, நமது சொந்தக் கண்களின் காட்சியைப் பின்பற்றிக்கொண்டு, தேவனைவிட்டு மேலும் மேலும் விலகியபடி எவ்வாறு நாம் அலட்சியமாகக் கடந்து செல்லமுடியும்? தம் மக்களின் இருதய கடினம், பாவம் நிறைந்த அவிசுவாசத்தினிமித்தம் தேவனால் மாபெரும் செயல்களை செய்ய இயலாது." -Counsels on Diet and Foods, p.379.

வெள்ளி — ஜூலை 25

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. சத்தியத்திற்கு வெறும் மன ஒப்புதலைவிட அதிகமானதை தேவன் எதிர்பார்ப்பது ஏன்?

ஆ. தேவன் தமது மக்களைத் தமது பிரமாணத்தின் அடிப்படைகளுடன் எவ்வாறு மறுபடியும் பரிச்சயப்படுத்தினார்?

இ. வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு எதிரான கலகத்தின் காரணமாக, அவரது மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது எது? அதன் பலன்கள் எவை?

ஈ. நல்ல கட்டளைகளுக்குச் சில சிறப்பு எடுத்துக்காட்டுகள் எவை?

உ. கிறிஸ்து திரும்ப வருவதற்கு முன்னர், பழையனவற்றைப் புதுப்பித்து நிலை நிறுத்தும் செயலில் சேர்க்கப்படுவது எது?

"ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை, வாக்களிக்கப்பட்டுள்ள நித்திய ஜீவனுக்கான நிபந்தனைகளை தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. பரலோகத்தில் பிரவேசிக்கிறவர்கள் கறையோ திரையோ, அது போன்ற வேறு எதுவுமோ அற்றவர்களாய் இருக்கவேண்டுமென்று தேவன் கேட்கிறார். என்னுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு ஜீவியுங்கள் என்பது தேவனுடைய வேண்டுகோளாய் இருக்கிறது. ஆனால்

'கற்பனைகளைக் கைக்கொள்ளாமலிருப்பதில் என் மனச்சாட்சி என்னைக் கடிந்து கொள்வதில்லை' என்று ஒருவன் கூறலாம். ஆனால் நல்ல மனச்சாட்சிகளும் கெட்ட மனச்சாட்சிகளும் உள்ளன என்று தேவ வசனத்தில் படிக்கிறோம்; தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளாததற்காக உங்களது மனச்சாட்சி உங்களைக் கடிந்து கொள்ளவில்லையென்றால், தேவனுடைய பார்வையில் நீங்கள் கண்டிக்கப்படாதவர் என்று நிரூபணமாகிவிடாது. உங்கள் மனச்சாட்சியை தேவ வசனத்திடம் எடுத்துச் செல்லுங்கள், உங்கள் ஜீவியமும் பண்பும், அதிலே (வசனத்திலே) தேவன் வெளிப் படுத்தியுள்ள நீதியின் தர அளவீடுகளுக்கு ஏற்றபடி உள்ளதா என்று பாருங்கள். அதன் பின்னர் உங்களுக்கு ஒரு மனபூர்வமான விசுவாசம் உள்ளதா இல்லையா என்றும், உங்களது மனச்சாட்சி எப்படிப்பட்டது என்றும் நீங்கள் தீர்மானம் செய்யலாம் மனிதனுடைய மனச்சாட்சி தெய்வீகக் கிருபையின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலன்றி, அதனை உறுதியாய் நம்பமுடியாது. இறையருளால் ஒளியூட்டப்படாத ஒரு மனச் சாட்சியைச் சாத்தான் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொள்ளுகிறான்; அதன்மூலம் மனிதரை எல்லாவிதமான மாய்மாலங்களிலும் வழிநடத்துகிறான்; ஏனெனில், அவர் கள் தேவ வசனத்தைத் தங்கள் ஆலோசகராக ஆக்கிக்கொள்ளவில்லை.'' -The Review and Herald, September 3, 1901.

''திருமணம், வாரிசுரிமை, ஒருவரோடொருவர் நட்புறவில் சரியான நீதி போன்றவை விசேஷித்தவை, மற்ற இனத்தவர்களின் வழக்கங்கள், வழிமுறைகளிலிருந்து மாறுபட் டவை; மற்ற நாட்டவர்களிடமிருந்து தம் மக்களைப் பிரித்து தனிப்படுத்திவைக்க தேவன் வடிவமைத்தவை இவை. தேவ மக்களை தேவ அன்போ தேவ பயமோ அற்ற மற்ற இனத்தவர்களைப் போல் மாறாதவாறு காக்க அத்தியாவசியமாகிய இது, தேவ பிரமாணத்தின் மீறுதல் எங்கும் காணப்படுகிற, விக்கிரக ஆராதனை அச்சம் தருமள வுக்கு நிலவுகற இந்த அசுத்தமான காலகட்டத்திலும் அப்படியே இருக்கிறது. பழங் கால இஸ்ரவேலருக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு தேவைப்பட்டது எனில், தேவனு டைய பிரமாணத்தை மீறுகிறவர்களுடன் முற்றிலும் நாசமடைவதினின்று நம்மைக் காத் துக்கொள்ள நமக்கு இன்னும் அதிகமாகத் தேவை. கட்டுப்பாடும் ஒழுக்கமும் தேவை என்பதால், மனிதரின் இருதயங்கள் தேவனிடமிருந்து விலகிச் செல்லக்கூடியவையாக உள்ளன.'' -Ibid., May6, 1875.

''பழங்கால இஸ்ரவேலரின் எடுத்துக்காட்டு நமக்கு உள்ளது; அவர்கள் செய்தது போல் செய்யக்கூடாது என்ற எச்சரிப்பும் நமக்கு உள்ளது. அவர்களது அவிசுவாச, கலக சரித்திரம், தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு முறுமுறுக்கும் அவர்களது எடுத் துக்காட்டை நாம் பின்பற்றக்கூடாது என்ற ஒரு விசேஷ எச்சரிப்பாக பதிவு செய்து விட்டுச்செல்லப்பட்டுள்ளது.'' -Testimonies, vol.3, p.172.

முதல் ஓய்வுநாள் காணிக்கை

உலகமெங்கும் உள்ள மிஷனரிப் பள்ளிகளுக்கு

பயிற்சி அளிப்பதற்கான தேவை எவ்வளவு பெரியதாய் இருக்கிறது! இந்தக் கடைசி நாட்களில் இளம் ஆடவர்களும் பெண்டிரும் அடங்கிய ஒரு சேனையை - அவர்கள் உறுதியான, சமச்சீரான கிறிஸ்தவர்களாகவும், வேதவசனங்களைப் புரிந்து கொண்டு விளக்கக்கூடியவர்களாகவும் இருக்கும் விதத்தில் கற்பிக்கவும் பயிற்றுவிக்கவும் வேண்டும் என்று தேவன் நமக்கு விதித்துள்ளார். நமக்கு முன்னுள்ள உலகுக்கு ஒளியேற்றும் மாபெரும் பணியுடன், சத்தியம் என்பது என்னவென்று நாம் அறியும்படிக்கும் அதை மதிநுட்பத்துடன் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கத் தகுதியானவர்களாய் இருக்கும்படிக்கும் பரிசுத்த வசனத்தை மெய்யான ஆர்வத்துடன் தேடுவதும் நமது கடமையாக உள்ளது.

"ஒவ்வொரு நாட்டிலும் நமது ஊழியர்களிடையே கல்வியின் தேவையானது துன்பம் தரும் வகையில் தெளிவானதாக உள்ளது. கல்வியானது இல்லற வாழ்வின் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதற்கு மட்டும் அத்தியாவசியமானதாக இராமல், பயன்தரும் எல்லாப் பிரிவுகளிலும் வெற்றிபெறவும் இன்றியமையாத தேவையாக உள்ளது.

"தேவனுடைய வேலைக்கும், வாழ்வின் பல்வேறு பொறுப்புகளின் வெற்றிகரமான நிறைவேறுதலுக்கும் கல்வி தேவை என்ற நோக்கில், இக்காலத்துக்குரிய சத்தியத்தில் உண்மையான நம்பிக்கையுடையவர்களின் வழிகாட்டுதலின் கீழ் -------- என்ற இடத்தில் ஒரு பள்ளி திறக்கப்படவிருக்கிறது என்பது குறித்து நாம் எவ்வளவாய் நன்றியறிதலுடையவர்களாக இருக்க வேண்டும்... இந்தப் புதிய நிறுவனத்தின் வெற்றிக்காகவும், அது உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் கொண்டுவரும் நன்மைக்காகவும், நம் சகோதர சகோதரிகள் அனைவரும் ஊழியச் சுமையைச் சுமக்க வந்துள்ளவர்களுடன் சேர்ந்து உழைக்க இப்பொழுது முழு இருதயத்தோடும் தாங்குவோம்."
-Fundamentals of Christian Education, p.202.

"சகோதரர்களே, சகோதரிகளே, தேவன் தமது கிருபையினால், தமது திராட்சத் தோட்டத்தில் உழைக்க இளைஞர்களை ஆயத்தப்படுத்துவதற்காக ஒரு சில மிஷனரி பள்ளிகளை நிறுவ வழிதிறந்துள்ளார். சீர்திருத்தத் தூது கிட்டத்தட்ட உலகின் வெவ்வேறு மூலைகளையும் அடைந்தாயிற்று என்பதால், அதிகம் பயிற்சி பெற்ற ஊழியர்களின் தேவை நமக்கு அதிகம் உள்ளது ஆகையால், உலகம் முழுவதும் அதிகமான மிஷனரி பள்ளிகள் தேவைப்படுகின்றன.

ஆகஸ்ட் 2, 2008-இல், இந்த முக்கியமான தேவை நிறைவு செய்யப்படும்பொருட்டு இந்த முக்கிய நோக்கத்தை உங்களது உதவியுடன் கனிவுடன் நினைவுகூருங்கள். ஆண்டவர் உங்களைப் பெருக்கமாக ஆசீர்வதிப்பாராக.

M. நடராஜன் GC கல்வித்துறை செயலாளர்

இரு பிரமாணங்கள்

"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" (கலாத்தியர் 3:24).

"[கலாத்தியர் 3:24 மேற்கோள்]... பரிசுத்த ஆவியானவர் [பவுல்] அப்போஸ்தலர் மூலமாகப் பேசுவது குறிப்பாக நியாயப் பிரமாணத்தைப்பற்றியே. பிரமாணம் பாவத்தை நமக்குப் புலப்படுத்துகிறது, நமக்குக் கிறிஸ்துவின் தேவையை உணர்த்து கிறது, தேவனிடம் மனந்திரும்பவும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கவும் செய்வதன்மூலம் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள அவரிடம் ஒடவும் செய்கிறது." -Selected Messages, bk,1, p.234.

மேலும் படிக்க: Patriarachs and Prophets, pp.363-373.

ஞாயிறு — ஜூலை 27

1. நித்தியமான நியாயப்பிரமானம்

அ. இயேசு இவ்வுலகிற்கு வந்த நோக்கங்களில் ஒன்று எது? அவர் நம்மை எதிலி ருந்து இறட்சிக்கிறார்? மத்தேயு 1:24; நமது வாழ்வில் பாவத்தை எவ்வாறு அறிய முடியும்? ரோமர் 3:20; 7:7,12; சங்கீதம் 19:7.

"பிரமாணம் மாற்றமில்லாதது என்பதாலும் மனிதன் அதன் விதிகளுக்குக் கீழ்ப்படி தலின் மூலமாக மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்பதாலும் இயேசு சிலுவையின் மீது தூக்கபபட்டார்." -The Desire of Ages, p.763.

"[கிறிஸ்துவின்] பூரணமான கீழ்ப்படிதலினால், ஒவ்வொரு மனிதரும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியக்கூடியவர்களாகுமாறு அவர் செய்தார்." -Christ's Object Lessons, p.312.

"பிரமாணம் இல்லையேல், மனிதர் தேவனுடைய தூய்மையையும் பரிசுத்தத்தை யும் அல்லது தங்களது சொந்தக் குற்றங்களையும் அசுத்தத்தையும் கற்பனையாகக்கூட அறிய முடியாது. அவர்களுக்கு பாவத்தைப்பற்றிய மெய்யான குற்றவுணர்வோ பாவ மன்னிப்பிற்கான தேவையைப்பற்றிய உணர்வோ இருப்பதில்லை." -The Great Controversy, p.468.

ஆ. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை எவ்வாறு கருதினார்? ஏசாயா 42:21; மத்தேயு 5:17-20, 27, 28; லூக்கா 16:17, 18. நியாயப் பிரமாணத்தைப்பற்றிப் பவுல் எழுதியது என்ன? ரோமர் 2:12,13,17, 21-27; 3:31; 8:7.

"கிறிஸ்து பத்துக் கற்பனைகளைச் சிலுவையில் அறைந்துவிட்டார் என அறிவிக்கு மாறு சாத்தான் தன்னுடைய ஏவலரைத் தூண்டிவிட்டு, கற்பனைகளின் அதிகாரத்தை அழிக்க வழி தேடுகிறான். சிலுவையானது தேவனுடைய பிரமாணத்தின் மாறாத தன் மையைப்பற்றிய மாறாத பொருள் சுருக்கமாக உள்ளது முறிந்துபோன பிரமாணம் கேட்கும் தேவைகளை நிறைவு செய்வதன்மூலம் பாவியை மீட்க ஒரு வழி காணப் படவேண்டும் என்பதற்காக கிறிஸ்து மரித்தார்." -The Signs of the Times, March 12, 1896.

2. எது எது?

அ. "ஒரு உபாத்தி" என்று அழைக்கப்பட்டது எது? ஏன்? கலாத்தியர் 3:24.

"மனமானது கல்வாரிச் சிலுவையினிடமாக ஈர்க்கப்படும்போது,கிறிஸ்து அந்த அவமானத்திற்குரிய சிலுவையிலே பூரணமற்ற பார்வையினால் அறியப்படுகிறார். அவர் ஏன் மரித்தார்? பாவத்தின் விளைவால். பாவம் என்பது என்ன? நியாயபிரமாணத்தை மீறுவது. அப்படியானால் பாவத்தின் தன்மையைக் காண கண்கள் திறக்கப்படுகின்றன. பிரமாணம் முறிக்கப்பட்டுள்ளது, ஆனால் மீறுதல் செய்தவனை மன்னிக்க இயலாது. அது தண்டனைக்குக் கடிந்துரைக்கும் உபாத்தி [பள்ளி ஆசிரியர்]யாய் இருக்கிறது. நிவாரணம் எங்கே? விழுந்துபோன பாவ மனிதனுக்குத் தம் நீதியைக் கொடுக்க வல்லமையுள்ளவராக இருக்க சிலுவையிலே தூக்கப்பட்ட கிறிஸ்துவிடம் பிரமாணமானது நம்மை விரட்டுகின்றது." -Selected Messages, bk.1, p.341.

"நம்மைக் கிறிஸ்துவிடம் கொண்டுவரும் பள்ளிக்கூட உபாத்தியாயராய் இருக்கும் பிரமாணம் எது? நான் பதிலளிக்கிறேன்: சடங்காச்சார பிரமாணமும், நியாயப்பிரமாணத் தொகுப்பான பத்துக் கற்பனைகள் - இரண்டுமேயாகும்.

"யூத சடங்காச்சார முறை முழுவதற்கும் அடித்தளமாக இருந்தவர் கிறிஸ்துவே. கிறிஸ்துவைக் குறிக்கும் பலி காணிக்கைகளால் அடையாளப்படுத்தப்பட்ட, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்படவேண்டும் என்று கீழ்ப்படிதலின் பள்ளியிலே தேவனுடைய திட்டத்தை காயீன் ஏற்க மறுத்ததன் விளைவுதான் ஆபேலின் மரணம் ஆகும். கிறிஸ்துவின் இரத்தம் உலகத்திற்காகச் சிந்தப்படவேண்டுமென்று அடையாளப்படுத்திய இரத்தம் சிந்துதலைக் காயீன் மறுதலித்தான். தேவனாலும் கிறிஸ்துவாலும் தயாரிக்கப்பட்ட இந்த முழுச் சடங்குமுறையும், அந்த முழு முறைமையின் அடித்தளமாக மாறியது. யூத சடங்காச்சார முறைமை முழுவதற்கும் அடிக்கல்லாயிருக்கிற கிறிஸ்துவின் இரக்கத்திற்குப் பாவ மானுடப் பிறவிகளைக் கொண்டு செல்லும் பள்ளி ஆசிரியராகச் செய்யவிருக்கும் பணியின் தொடக்கமாக இது இருக்கிறது.

"கிறிஸ்து மனுக்குலத்திற்காக செய்யவிருந்ததைக் குறிக்கும் விதமாகவே ஆசரிப்புக்கூடார ஆசரிப்பு முறைமைகளை செய்த அனைவரும் தொடர்ச்சியாகக் கற்பிக்கப்பட்டுவந்தனர். இந்த ஆசரிப்பு முறைமை, தேவ ராஜ்யத்தின் சட்டமாக உள்ள அவரது பிரமாணத்தின்மீது ஒவ்வொரு உள்ளத்திலும் அன்பை உருவாக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. துயரப்படுகிற, சாவின் பிடியில் அகப்பட்ட, மனிதன் குற்றவாளியாக இருந்த பாவத்தைத் தம்மேல் ஏற்ற, நமக்காகப் பாவமாக்கப்பட்ட குற்றமற்றவராகிய கிறிஸ்துவில் தேவன் வெளிப்படுத்திய அன்பிற்கு இந்தப் பலி காணிக்கை ஒரு பொருள் பாடமாக இருக்கவேண்டியிருந்தது." -Ibid., p.233.

ஆ. சடங்காச்சாரப் பிரமாணம் குறித்து வேதாகமம் கூறுவது என்ன? எபேசியர் 2:15; கொலோசெயர் 2:14; எப்ரெயர் 10:1.

"மனுக்குல இரட்சிப்பிற்காக கிறிஸ்துவின் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பதிலளிப்பதாக சடங்காச்சார பிரமாணம் இருந்தது. அடையாளபூர்வமான முறைமையான பலிகளும் காணிக்கைகளும், இந்த ஆசரிப்பு முறைகளினால் பாவியானவன் மாபெரும் காணிக்கையாகிய கிறிஸ்துவை நன்கு புரிந்துகொள்வான் என்பதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டன." -The Faith I Live By, p.106.

3. வருங்காரியங்களுக்கு நிழல்கள்

அ. சடங்காச்சார பிரமாணம் - வருங்காரியங்களின் நிழலாட்டம் - ஒரு முடிவுக்கு வந்தது ஏன்? கொலோசெயர் 2:16,17,20; எபிரெயர் 10:4; 9:11,12,15

"சடங்காச்சார பிரமாணத்தைப்பற்றிப் பேசும் வசனங்களை பயன்படுததி நியாய பிரமாணம் [பத்துக் கற்பனைகள்] ஒழிக்கப்பட்டுவிட்டன என்று நிரூபிக்க, இந்த இரு [சட்ட] முறைமைகளையும் இணைத்துப் போட்டுக் குழப்ப முயல்பவர்கள் பலர் உள்ள னர்; ஆனால் இது வேதவசனங்களை முன்னுக்குப் பின் முரணாக இணைப்பது (திரித் துக்கூறுவது) ஆகும். இந்த இரு முறைமைகளின் இடையிலான வேறுபாடு பரந்ததும் தெளிவானதுமாக இருக்கின்றது. சடங்காரச்சார முறைமை, கிறிஸ்துவையும் அவரது தியாகபலியையும் அவரது ஆசாரியத்துவத்தையும் சுட்டிக்காட்டும் அடையாளங்களால் ஆனது. இந்தச் சடங்கு சம்பந்தமான பிரமாணம், பலிமுறைகள் ஆராதணை முறை களுடன், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து வின் மரணத்தில் நிஜமானது தனது நிழலைச் சந்திக்கும்வரை எபிரேயர்களால் நடை முறையில் கைக்கொள்ளவேண்டியதாயிருந்தது. பின்னர் பலி காணிக்கைகள் அனைத் தும் முடிவுக்கு வந்தன. இந்தப் பிரமாணத்தைத்தான் கிறிஸ்து 'எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்(த)து...' (கொலோசெயர் 2:14)". -**Patriarchs and Prophets, p.365.**

"தேவன் தம்முடைய விசேஷித்த பொக்கிஷமாக அழைக்கின்ற தேவமக்கள் ஓர் இருபடித்தான பிரமாண முறையை பாக்கியமாகப் பெற்றுள்ளனர்; நியாயபிரமாணம், சடங்காச்சார பிரமாணம் என்பவையே அவை. முதலாவது, உலகத்தைப் படைத்த ஜீவ னுள்ள தேவனை நினைவுகூரும்பொருட்டு, சிருஷ்டிப்பு வரை பின்னே சுட்டிக்காட்டு கின்றது; அவர் உரிமை கோருபவை ஒவ்வொரு கோட்பாட்டிலும் உள்ள எல்லா மனி தரையும் கட்டுப்படுத்துபவையாகும்; இது எல்லா காலங்களிலும் நித்தியத்திலும் நிலைத்திருக்கும். அடுத்தது நியாயப்பிரமாணத்தை மனிதர்கள் மீறியதினிமித்தம் கொடுக்கப்பட்டது; இதற்கு கீழ்ப்படிவதானது, எதிர்கால மீட்பைச் சுட்டிக்காட்டும் பலி கள் காணிக்கைகளை உள்ளடக்கியது. ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து வெகு தெளி வாக, மாறுபட்டுக் காணப்படுகிறது." -**The SDA Bible Commentary [E.G.White Comments], vol.6, p.1094.**

ஆ. விலங்கு (மிருக) பலியைக் கொடுத்தவர்களில் முதல் ஆள் யார்? இது குறிப் பிடுவது யாது? எபிரெயர் 11:4; யோவான் 1:29; எபிரெயர் 9:28.

"நிழலான ஆராதனைமுறையும் அத்துடன் இணைந்த சடங்காச்சாரங்களும் சிலு வையில் ஒழிக்கப்பட்டன. மாபெரும் நிஜமான தேவ ஆட்டுக்குட்டி மனிதனின் குற் றத்திற்குக் காணிக்கையாக மாறி, நிழலானது அதற்குரிய பொருளில் முடிவடைந்தது." -**The SDA Bible Commentary [E.G.White Comments], vol.6, p.1061.**

"நமது இரட்சகர் தமது வாழ்விலும் சாவிலும் தம்மைச் சுட்டிக்காட்டிய எல்லாத் தீர்க்க தரிசனங்களையும் நிறைவேற்றி எல்லா அடையாளங்களும் நிழல்களும் குறிப்பிட்ட மெய்ப்பொருளாக இருந்தார்." -**Selected Messages, bk.1, p.231.**

4. அடையாளங்களில் கிறிஸ்துவின் இரத்தம்

அ. விலங்கு பலிகள் கேட்கப்பட்டது ஏன்? எபிரெயர் 9:22; 10:10-14.

"இரட்சிப்பின் திட்டத்தில் இரத்தம் சிந்துதல் கண்டிப்பாக இருக்கவேண்டும்; ஏனெனில், மனிதனின் பாவத்தின் விளைவாக மரணம் வந்தே தீரவேண்டும். பலிகாணிக்கைகளுக்கான மிருகங்கள் கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்களாக இருந்தன. அடிக்கப்படும் பலியில், 'நீ சாகவே சாவாய்' என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறுவதற்கான காலத்தை மனிதன் பார்க்கவேண்டியவனாக இருந்தான். பலியிலிருந்து வழிந்தோடும் இரத்தமும்கூட ஒரு பிராயசித்தத்தை முன்னிறுத்துகிறது." -**The Review and Herald, March 3, 1874.**

"தியாக பலி காணிக்கைகள், மனிதனுக்கு ஒரு நிலையான ஞாபகர்த்தமாகவும் தன் பாவத்தைக் குறித்த பணிவான ஒப்புதலாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மீட்பரில் வைத்துள்ள தன் விசுவாசத்தை அறிக்கையிடவும் தேவனால் நியமனம் செய்யப்பட்டுள்ளன. அவை பாவம்தான் மரணத்தை விளைவித்தது என்ற பக்திவிநயமான சத்தியத்தை விழுந்துபோன மனுக்குலத்தினமீது ஆழ்ந்து பதிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தன." -**Patriarchs and Prophets, p.68.**

ஆ. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திய அடிமைத்தனத்தில் உபத்திரவப்பட்ட பின், இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் எந்த விசேஷித்த ஆசரிப்பு அதிக விசேஷித்ததாக இருக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டது? லேவியராகமம் 23:5; 1 கொரிந்தியர் 5:7,8.

"கிறிஸ்துவின் சீஷர்கள் அதுவரையில் அத்தியாவசியமானது என்று ஆசரித்துவந்ததும், சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட பின் மேற்கொண்டு எவ்விதத்திலும் நீடிக்க வேண்டியிராததுமான சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து அவர்களை விடுவிக்கிறதுமான - அவர்களது உண்மையான தேவையை அவர்களுக்குச் செய்துமுடிக்கும் ஓர் ஆராதனை முறைமையை தம் சீஷர்களிடையே விட்டுச் செல்ல வேண்டுமென்பது கிறிஸ்துவின் வாஞ்சையாய் இருந்தது. இந்தச் சடங்குகள் தொடர்வது யோகோவாவுக்கு ஓர் அவமதிப்பாக இருக்கும்." -**The SDA Bible Commentary [E.G.White Comments], vol.5, pp.1139, 1140.**

"[கிறிஸ்து] நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு, அதுகோரும் உரிமைகளுக்கு மனிதனின் பிரதிநிதியாக இருந்து பதிலளித்ததன் மூலம் அதனை உயர்த்தினார். இஸ்ரவேலரில் கர்த்தரிடம் திரும்பி அடையாளபூர்வமான பலிகளாகக் காட்டப்பட்ட நிழல்களின் நிஜமாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், ஒழிக்கப்படவேண்டியவைகளின் முடிவைப் பிரித்தறிந்தனர்." -**Selected Messages, bk.1, p.231.**

இ. விலங்குகளின் இரத்தம் செய்யமுடியாமலிருந்தது எது? எபிரெயர் 7:19; 10:4; முழுமையான பரிசுத்தமாக்கப்படுதல் எவ்வாறு மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது? அப்போஸ்தலர் 4:12; 9:42; யோவான் 1:17,18.

---

5. செய்து முடித்தல்

அ. யூத மக்களின் சரித்திரத்திலே பல சமயங்களில் அவர்கள் புரிந்துகொள்ள மிகக் கடினமாக இருந்தது எது? ஏசாயா 1:11-15. ஏன்? ஏசாயா 1:6. ஆகையால் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்டது என்ன?

"யூதர்கள் தங்களது தெய்வீக நியமனமான ஆராதனைகள் குறித்து தற்பெருமை கொண்டிருந்தார்கள்; தேவன் ஒருமுறை எபிரேய வழிபாட்டு முறைமையை விசேஷப் படுத்தியிருக்கும்போது, தாம் தெரிந்துகொண்ட எதிலும் ஒரு மாற்றம் செய்ய அவர் அனுமதிப்பது இயலாது என்று அவர்களாகவே முடிவுகட்டிக்கொண்டார்கள். கிறிஸ்தவம் யூதப் பிரமாணங்களோடும், சடங்குகளோடும் தன்னை இணைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். கிறிஸ்துவின் மரணத்தால் ஒழிக்கப்பட்டுவிட்டன என்ற முடிவை அறியவும், அவர்களது பலி காணிக்கைகளெல்லாம் தேவ குமாரனுடைய மரணத்தின் முன்னடையாளங்களேயன்றி வேறல்ல என்பதை மனத்தில் ஏற்கவும் மந்தமானவர்களாக இருந்தனர். இதிலே நிழலானது தனது நிஜத்தைச் சந்தித்து, தெய்வீக நியமனமான சடங்குகளையும் யூத மத பலிமுறைகளையும் மதிப்பிழக்கச் செய்துவிட்டது." -Sketches from the Life of Paul, pp.61, 65.

"அடையாளபூர்வமான சடங்காச்சாரங்ள் சீக்கிரமே முழுவதும் நின்றுபோகும், அவை நிழலாட்டமாகக் காட்டியவை நிஜமாக நடைபெற்றுள்ளபடியால், சுவிசேஷ ஒளியானது தன் மகிமையை யூத மதத்தின்மீது ஒளிரச் செய்து, அதன் பழஞ் சடங்குகளுக்கு ஒரு புதிய முக்கியத்துவம் தருகிறது என்பதை [பவுல்] அறிந்திருந்தார்." Ibid., p.65.

"[அப்போஸ்தலர் 15:13-29இல்]... சடங்காச்சார பிரமாணம், குறிப்பாக விருத்த சேதனம் செய்தல் புறஜாதியார் மீது எந்தவிதத்திலும் திணிக்கப்படாது, பரிந்துரைக்கவும் படாது என்று (யாக்கோபு அப்போஸ்தலர்) கூறியது உள்ளது." -Ibid., p.69.

ஆ. யூதர்கள் பலிமுறையை பாவம் செய்வதற்கு அனுமதியாக பயன்படுத்தி வந்தபோது, எந்த வகை பலிகளை தேவன் உண்மையில் நாடினார்? சங்கீதம் 51:17-19; ஏசாயா 1:16-18.

"பவுல் தன்னையோ தன்னால் மனம் மாறியவர்களையோ யூதர்களின் சடங்காச்சாரங்களாலும் வழக்கங்களாலும், அவற்றின் பல்வேறு வகைகள், வடிவங்கள் பலிகள் முதலியவற்றால் கட்டிப்போடவில்லை; ஏனெனில் பூரணமான இறுதியான காணிக்கை தேவகுமாரனுடைய மரணத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிந்துணர்ந்திருந்தார். தெளிவான ஒளியின், அறிவின் காலம் இப்போது வந்துள்ளது. பவுலின் ஆரம்பகால கல்வி இந்த ஒளிக்கு அவரது கண்களைக் குருடாக்கிப்போட்டு, தேவனுடைய ஊழியத்திற்கு எதிராக மிகக் கசப்பாக எதிர்ப்பு தெரிவிக்கச் செய்திருந்தபோதிலும், தமஸ்குவுக்குச் செல்லும் வழியிலே அவருக்குக் கிடைத்த கிறிஸ்துவின் தரிசனம் அவரது வாழ்வின் சுழலோட்டத்தை முற்றிலும் மாற்றியிருந்தது. அவரது பண்பும் பணிகளும் அவரது தெய்வீக ஆண்டவருடையதற்கு குறிப்பிடத்தகுந்த எடுத்துக்கட்டுச் சித்திரமாக இப்போது மாறியிருந்தது. அவரது போதனைகள், விசுவாசியை வெற்றுச் சடங்குகளுக்கு மேலாகக் கொண்டு சென்ற அதிக ஆக்கபூர்வமான ஆவிக்குரிய வாழ்விற்கு மனத்தை நடத்திச் சென்றது...

"அவர் கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிப் போதித்தார்." -Sketches from the Life of Paul, p.105.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. பத்துக்கற்பனைகளின் அடிப்படைகளைக் குறித்து ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதலை நாம் பெற்றிருக்கவேண்டியதன் அவசியம் என்ன?

ஆ. கிறிஸ்துவின் மரணம், சடங்காச்சார பிரமாணம் முழுவதையும் உடனடியாக மதிப்பிழக்கச் செய்ததேன்?

இ. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பிறகு, சடங்காச்சார பிரமாணத்தை - பஸ்கா ஆசரிப்பு உட்பட - தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் நாம் உண்மையில் செய்வது என்ன?

ஈ. பாவத்திலிருந்து உண்மையிலேயே தூய்மையடைவதற்கு யாருடைய இரத்தம் நமக்குத் தேவை?

உ. சடங்காச்சார பிரமாணத்துடனும் நியாயபிரமாணத்துடனும் நேரடித் தொடர்புடைய கட்டளைகள் இருக்கின்றபடியால், எவற்றை ஆராய்ந்து அறிந்து இன்று நடைமுறைப்படுத்தவேண்டும்?

"யூதர்கள் இரத்த பலியுடன் நன்கு பழக்கப்பட்டு விட்டு, மிருகங்களின் இத்தகைய இரத்தஞ்சிந்துதல் யாவையும் கட்டாயமாக்கியது பாவமே என்ற உண்மையைப் பற்றிய பார்வையை கிட்டத்தட்ட இழந்துபோனார்கள். உலகத்தின் ஜீவனுக்காக சிந்தப்படவேண்டியிருந்த தேவனுடைய அன்புக்குமாரனின் இரத்தத்தை இது முன்னடையாளமாகக் காட்டியதை அவர்கள் அறிந்துணரவில்லை." -The Desire of Ages, pp.589, 590.

"நல்லொழுக்க(நியாய) பிரமாணம் ஒருபோதும் ஓர் அடையாளமாகவோ நிழலாகவோ இருந்ததில்லை. அது மனிதனின் சிருஷ்டிப்புக்கு முன்பிருந்தே இருந்துள்ளது; மேலும் தேவனுடைய சிங்காசனம் இருக்கும்வரை அதுவும் நிலைத்திருக்கும். மனிதனை மீட்கும்பொருட்டு தேவன் தமது பிரமாணத்தின் எந்தவொரு கட்டளையையும் மாற்றவோ தடைசெய்யவோ முடியாது; ஏனெனில் அவரது அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது பிரமாணமேயாகும். அது மாற்றப்பட முடியாதது. தடை செய்யப்பட இயலாதது, முடிவற்றது, நித்தியமானது. மனிதன் இரட்சிக்கப்படவேண்டும், பிரமாணத்தின் மேன்மை கட்டிக்காக்கப்படவேண்டும் என்பதால், தேவகுமாரன் தம்மையே பாவத்திற்கான தியாகபலியாக அளிக்கவேண்டியது அவசியமாயிற்று. பாவம் அறியாத அவர் நமக்காகப் பாவமானார். அவர் நமக்காகக் கல்வாரியில் மரித்தார். அவரது மரணம், மனிதன்மீது தேவன் கொண்ட அற்புதமான அன்பையும், பிரமாணத்தின் மாறாத தன்மையையும் காட்டுகின்றது." -Selected Messages, bk.1., pp.239, 240.

"ஓய்வுநாள் கற்பனை சிலுவையில் அறையப்படவில்லை. அப்படி இருந்தால் மற்ற ஒன்பது கற்பனைகளுங்கூடத்தான் [சிலுவையில் அறையப்பட்டிருக்கும்]; அவையெல்லாவற்றையும் முறிக்க நாம் சுதந்திரம் உடையவர்களாயிருப்போம், நான்காம் கற்பனையை முறிக்கவும்தான். தேவன் ஓய்வுநாளை மாற்றவில்லை என்று நான் கண்டேன், ஏனெனில் அவர் ஒருபோதும் மாறாதவர்." -Early Writings, p.33.

"கிறிஸ்து ஒரு பாவ பலியாகச் சிலுவையில் அறையப்பட்ட பின்னர், சடங்காச்சார பிரமாணத்திற்கு அதிகாரமில்லை; இருப்பினும் அது நல்லொழுக்க(நியாய) பிரமாணத்

துடன் இணைக்கப்பட்டு மகிமை பொருந்தியதாய் இருக்கிறது. அவை முழுவதுமே தெய்வீக முத்திரையைத் தாங்கி, தேவனுடைய பரிசுத்தம், நீதி, நியாயங்களை வெளிப் படுததின. ஒரு மதக் கோட்பாடாக செய்யப்பட்டதே மகிமை பொருந்தியதா யிருந்ததானால், விசுவாசிக்கும் அனைவருக்கும் கிறிஸ்து தமது ஜீவனளிக்கும், பரிசுத்தமாக்கும் ஆவியைக் கொடுத்து வெளிப்படுத்தியபோது உண்மையானது எவ்வளவு அதிகமதிகமான மகிமையுடையதாக இருந்திருக்கவேண்டும்?" -Lift Him Up. p.147.

மன்னா வைக்கப்பட்ட பாத்திரம்

"ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்து விளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தல மென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. இதிலே பொன்னாற் செய்த தூபகலசமும், முழுவதும் பொற் றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன" (எபிரெயர் (9:2-4)

"மகாபரிசுத்த ஸ்தலத்திலே நான் ஒரு பெட்டியைக் கண்டேன்; அதன் மேலும் பக்கங்களிலும் சுத்த பொன் இருந்தது... பெட்டியிலே மன்னா இருந்த பொற் பாத்திர மும் ஆரோனின் தளிர்த்த கோலும், ஒரு புஸ்தகத்தைப்போல் ஒன்றாக மடிக்கப்பட்ட கற்பலகைகளும் இருந்தன." -Early writings, p.32

மேலும் படிக்க: Patriarchs and Prophets pp.291-297. Early Writings, pp.32, 33.

ஞாயிறு ஆகஸ்ட் 3

1. விடுவிக்கப்படுதல்

அ. இஸ்ரவேலர் சரித்திரத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று எது? அது ஒவ்வோர் ஆண்டும் எவ்வாறு நினைவுகூரப்பட்டது? யாத்திராகமம் 12:11.

"இஸ்ரவேலர் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதன் நினைவு கூருதலாக பஸ்கா ஆசரிப்பு நியமிக்கப்பட்டது. ஆண்டுதோறும் பிள்ளைகள் இந்த ஆசரிப்பின் அர்த்தத்தைக் கேட்பார்களானால், சரித்திரம் எடுத்துச் சொல்லப்படவேண் டும் என்று தேவன் வழிகாட்டியிருந்தார். இவ்வாறாக, அந்த அற்புதமான விடுதலை அனைவர் மனங்களிலும் புத்தம் புதிதாக வைக்கப்படவேண்டியிருந்தது." -The Desire of Ages, p.652.

ஆ. எகிப்திலிருந்து சீன் வனாந்தரத்துக்குப் போக (இது சீனாய்க்கும் ஏலிமுக்கும் இடையிலுள்ளது) எவ்வளவு காலம் ஆயிற்று? யாத்திராகமம் 15:27; 16:1.

"சீன் வனாந்தரத்தில் நுழையுமுன்பு [ஏலிமிலே மக்கள்] பலநாட்கள் தரித்திருந்தார் கள். எகிப்திலிருந்து புறப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு வனாந்தரத்திலே தங்கள் முதல் முகாமைப் போட்டார்கள்." -Patriarches and Prophets, p.292.

2. முறுமுறுத்தல்

அ. அவர்களின் அடுத்த பெரிய தங்குமிடத்திற்குச் சென்றடைகையில், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் முழுமையான பாதுகாப்பின்மையின் உணர்வைக் காட்டி செய்யத் தொடங்கிய முதல் காரியம் என்ன? யாத்திராகமம் 16:2.

"இப்போது [இஸ்ரவேலரின்] உணவுப் பொருள்களின் கையிருப்பு குறையத் தொடங்கியது. வானாந்தரத்தில் உணவுக்கு ஆகும் பயிர் வகைகள் அற்ப அளவிலேயே இருந்தன; அவர்களுடைய கால்நடை மந்தைகளும் குறைந்து சென்றன. அந்த மிகப் பெரிய கூட்டமாகிய ஜனங்களுக்கு உணவு எப்படி வழங்கப்பட முடியும்? அவர்களது இருதயங்களில் சந்தேகம் நிறைந்தது, அவர்கள் மீண்டும் முறுமுறுத்தனர். ஜனங்களின் அதிகாரிகளும் மூப்பர்களுங்கூட தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களுக்கு எதிரான குறை கூறுதலில் சேர்ந்துகொண்டார்கள்...

"அவர்கள் இன்னும் பட்டினியால் துன்பப்படவில்லை; அவர்களது அப்போதைய தேவைகள் வழங்கப்பட்டன, ஆனால் அவர்கள் எதிர்காலத்தைக் குறித்து பயந்தார்கள். இவ்வளவு பெரிய கூட்டம் தங்கள் வனாந்தரப் பயணத்தில் உயிர் வாழ்வது எப்படி என்று அவர்களுக்குப் புரியவில்லை, மேலும் தங்கள் பிள்ளைகள் பட்டினி கிடந்து சாகவேண்டிவரும் என்று கற்பனை செய்துகொண்டார்கள். அவர்களைச் சுற்றித் துன்பங்கள் நெருங்கவும், உணவு கிடைப்பது குறையவும் கர்த்தர் அனுமதித்தார்; அவர்களை விடுவிப்பவராகிய அவரிடம் அவர்களது இருதயங்கள் திரும்பவேண்டும் என்று இவ்வாறு செய்தார். அவர்களது தேவையின்போது அவர்கள் அவரை நோக்கிக் கூப்பிட்டிருப்பார்களானால், அவரது அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தும் விதமாக பின்னும் அவர் வழங்கியிருப்பார். அவர்கள் அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நோய் எதுவும் அவர்களுக்கு வராது என்று வாக்களித்திருந்தார்; அவர்களது பாவ அவிசுவாசமே அவர்களோ அவர்களின் பிள்ளைகளோ பட்டினி கிடந்து சாகவேண்டிவருமோ என்று எதிர்பார்க்கச் செய்தது." -Patriarchs and Prophets, p.292.

ஆ. வனாந்தரத்தில் அலைந்து திரிகையில் கிளம்பிய முறுமுறுப்புகளை நாம் பார்க்கும்போது, இப்படிப்பட்ட மனக்குறைகளுக்கு உண்மை இலக்காக இருந்தது யார்? இன்று நாம் முறுமுறுப்போமானால், நமது குறைகூறல்களுக்கு உண்மையான இலக்காக இருப்பவர் யார்? யாத்திராகமம் 16:6-10.

"தூதின் ஆரம்பகாலத்திலிருந்தே அதிகம் சகித்தவர்களும், அவர்களுக்காக பயங்கரப் போர்களங்களில் போரிட்டவர்களுமாகியவர்களுக்கு எதிராகச் சிலர் ஊழியம் கடினமாக ஆகியபோது முறுமுறுக்க விரும்பியது தேவனுக்கு அதிருப்தியைத் தந்தது. அனுபவம் வாய்ந்த உழைப்பாளிகளை - தங்கள் சுமையைத் தாங்கி உதவி செய்ய வெகு சிலரே இருந்த நிலையிலும் நெருக்கடியின் மத்தியிலும் கடும் சுமைகளின் கீழும் உழைத்தவர்களை - தேவன் பாராட்டுகிறார்; மேலும் உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்களுக்காக அவர் தாளாத அக்கறையுள்ளவராக இருக்கிறார். நிகழ்கால சத்தியத்தின் பொருட்டு உழைத்து பழுத்து நரைத்த அனுபவம் உள்ள தேவனுடைய ஊழியக்காரர்களிடம் குற்றங்கண்டுபிடிக்கவும் அவர்களை நிந்திக்கவும் தயாராக இருந்தவர்கள்மீது அவர் அதிருப்தியுற்றிருக்கிறார். இளைஞர்களே, உங்களது நிந்தனைகளும் முறுமுறுப்புகளும் தேவனுடைய நாளில் நிச்சயமாக உங்களுக்கு எதிராக நிற்கும்." -Gospel workers, p.318.

3. ஒருநாள் காடைகள்

அ. இஸ்ரவேலர் பயணப்பட்ட ஒரே ஒரு மாதத்திற்குப் பின் எவற்றிற்காக இச்சை பட்டது, நம்முடைய தீய ஆசைகள் எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கக்கூடும் என்று காட்டுகின்றது? யாத்திராகமம் 16:3.

"எகிப்திலே [இஸ்ரவேலரின்] ருசி கெட்டுப்போயிருந்தது. ஏதேனிலே ஆதாம் ஏவாளுக்குக் கொடுக்கப்பட்ட எளிய பழங்களை அவர்கள் உண்டு மகிழவேண்டுமென்று தேவன் அவர்களது பசிதாகத்தை தூயதாகவும் உடல்நலத்துக்கு ஏற்றதாகவும் இருக்குமாறு வடிவமைத்திருந்தார். அவர் அவர்களுக்காகக் கொடுக்கப்போகிற கனிகளையும் தானியங்களையும் உண்டு மகிழக்கூடிய ஒரு நல்ல தேசமாகிய இரண்டாம் ஏதேனிலே அவர்களைக் கொண்டுபோய்க் குடியமர்த்தவிருந்தார். அவர்கள் எகிப்திலே உண்டு உயிர்வாழ்ந்துவந்த மோசமான உணவுமுறையை அகற்றும் நோக்கத்தில் அவர் இருந்தார்; ஏனெனில், அவர்கள் அந்த நல்ல தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் பூரண ஆரோக்கியத்துடனும் உடல் பலத்துடனும் இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார்." -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.1, p.1102.

ஆ. அவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் எதைக்கொண்டு தேவன் நிறைவு செய்தார்? யாத்திராகமம் 16:11-15. அவரது படிப்படியான வழிநடத்தும் முறையிலிருந்து நாம் எதைக் கற்கவேண்டும்?

"நமது மக்கள் பல ஆண்டுகளாக கற்றறிந்துவருவதை உலகப்பிரகாரமானவர்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நாம் எதிர்நோக்க இயலாது. இப்போதுங்கூட ஆரோக்கிய சீர்திருத்தத்தைப் பின்பற்றாத நமது ஊழியர்கள் அநேகர், தாம் பெற்ற ஒளியில் நிலைத்து நிற்கவில்லை. உணவுமுறையில் இச்சையடக்கத்துடன் இருக்கவேண்டும் என்பதை உணராதவர்களை, இந்த விஷயத்தில் நடைமுறை அனுபவம் இல்லாதவர்களை உடனடியாக ஆரோக்கிய சீர்திருத்தத்தின் கட்டுப்பாடான உணவுமுறைக்கும் உண்பதில் தன்னடக்கமற்ற தன்மைக்கும் இடையே அகன்ற காலடி எடுத்துவைக்கவேண்டும் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது." -Counsels on Diet and Foods, p.288.

இ. எவ்வளவு காலத்திற்கு காடைகள் வந்து இறங்கின? அந்த சமயத்தில் இறைச்சி உணவு உண்டதன் எதிர்மாறான பலன்களைப்பற்றிய பதிவு ஏதேனும் உண்டா? யாத்திராகமம் 16:12.

"இஸ்ரவேலர் சீனாயை அடைவதற்குச் சற்று முன்னர் மன்னா கொடுக்கப்பட்டபோது, அவர்களுடைய கூக்குரல்களுக்குப் பதிலாக கர்த்தர் மாம்சத்தை அவர்களுக்கு அனுமதித்தார்; ஆனால் அது அவர்களுக்கு ஒரே ஒருநாள் மட்டும் தரப்பட்டது." -Patriarch and Prophets, p.378.

"செங்கடலிலிருந்து சீனாய் வரையிலான பிரயாணத்தின்போது, முறுமுறுப்பதும் அமளிகளும் அடிக்கடி நிகழ்ந்தன; ஆனால் அவர்களது அறியாமை, குருடு ஆகியவற்றினிமித்தம் தேவன் அந்த சமயத்தில் பாவத்தை நியாயத்தீர்ப்பினால் விசாரிக்கவில்லை." -Ibid., p.379.

4. மன்னாவிலிருந்து படிப்பினைகள்

அ. மன்னா எதைப்போல இருந்தது, எவ்வளவு காலத்துக்கு அதை பயன்படுத்த வேண்டியிருந்தது? ஏன்? எண்ணாகமம் 11:7-9; யாத்திராகமம் 16:35; யோசுவா 5:10-12.

"[இஸ்ரவேல் புத்திரர்] தேவனுடைய தவறாத அக்கறையையும் கனிந்த அன்பையும் காட்டும் இந்த அற்புதமான அருட்பாதுகாவலின் மூலம் நாற்பது ஆண்டுகளாக அன்றாடம் நினைப்பூட்டப்பட்டு வந்தனர்." -Patriarchs and Prophets, p.297.

ஆ. இந்த அற்புதமான அருட்காவலின் பிரதான நோக்கம் என்ன? யாத்திராகமம் 16:4 (கடைசிப்பகுதி); சங்கீதம் 105:45; யாக்கோபு 1:2-4, 12.

"தேவனுடைய பிள்ளைகள் எப்போதுமே உபத்திரவம் என்னும் உலையிலே சோதிக்கப்படுகிறார்கள். அவர்கள் முதல் சோதனையைச் சகித்துக்கொள்வார்களானால், இரண்டாம் தரம் அதுபோன்ற துன்பத்தின் வழியே கடந்து போகவேண்டுமென்ற அவசியம் இருக்காது; ஆனால் அவர்கள் தோல்வியுற்றால், சோதனை அவர்களுக்கு மீண்டும் மீண்டும் தரப்படும், ஒவ்வொரு தரமும் இன்னும் அதிகச் சோதனையாகவும் கடுமையாகவும் இருக்கும்...

"துயரமும் சோதனையும் எல்லோருக்கும் வரவேண்டியதே; கர்த்தருக்காக ஊழியம் செய்யக்கூடிய ஒரு பொருத்தமுள்ள கருவியாக ஆத்துமாவை மெருகேற்றவும், பரிசுத்தப்படுத்தவும், பட்டைத் தீட்டவும் கிரியை செய்தால் மட்டுமே அது அழகானது." -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.4, p1146.

இ. ஏழாம்நாள் ஓய்வுநாளின்மீது இது ஒரு சோதனையாக எவ்வாறு இருந்தது? யாத்திராகமம் 16:5, 16-20, 22-26.

"சீனாயின் மேல் பிரமாணம் கொடுக்கப்படும் முன்னரேகூட ஓய்வுநாளை கனப்படுத்தும் விதமாக ஒரு முப்படித்தான அற்புதம் செய்யப்பட்டது. ஆறாம்நாளில் இருமடங்கு மன்னா பெய்தது, ஓய்வுநாளில் ஒன்றும் இல்லை; மேலும் ஓய்வுநாளுக்குத் தேவையான பகுதி இனிப்பாகவும் தூய்மையாகவும் பாதுகாக்கப்பட்டது; அதே சமயம், வேறு எந்த நேரத்தில் எடுத்து வைக்கப்பட்டிருந்ததும் உண்பதற்கு இயலாததாகி விட்டது. ஓய்வுநாள் சிருஷ்டிப்பின்போதே நியமனம் செய்யப்பெற்றது என்பதற்கு முற்றான ஆதாரம் இங்கே உள்ளது." -The Signs of the Times, February 28, 1884.

ஈ. இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையை அடையும் முன்னரே பிரமாணத்தைப் புரிந்துகொண்டிருந்தார்கள் என்பதை இந்த அனுபவம் எவ்வாறு காட்டுகின்றது? யாத்திராகமம் 16:27-30.

---

5. நினைவுகூருதலாக பாதுகாக்கப்பட்ட கலசம்

அ. வறண்ட பாலைவனத்தில் தேவனுடைய நினைவில் நீங்காத அற்புதத்தின் காரணமாக, தமது ற்புதமான பாதுகாவலின் தொடர் நினைவுகூருதலுக்காக அவர் கொடுத்தது என்ன? யாத்திராகமம் 16:32,33.

ஆ. மன்னா வைத்திருந்த இந்தக் கலசம் எங்கே வைக்கப்பட்டிருந்தது? அப்படி யிருக்கும்போது நாம் உடல்நலத்திற்கேற்ற உணவுமுறையை கற்பனையுடன் எப்படி சம்பந்தப்படுத்திப் பார்க்கவேண்டும்? யாத்திராகமம் 16:34; எபிரெயர் 9:3,4.

"மகா பரிசுத்த ஸ்தலத்தில் நான் ஒரு பெட்டியைக் கண்டேன்; அதன் மேலும் பக்கங்களிலும் தூய பொன்னாக இருந்தது... உடன்படிக்கைப் பெட்டியில் மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரம் இருந்தது. ஆரோனின் தளிர்த்த கோலும், ஒரு புத்தகத்தைப் போல ஒன்றாக மடிக்கப்பட்ட கற்பலகைகளும் இருந்தன. ""-Early Writings, p.32.

"உடன்படிக்கைப் பெட்டியில், தூதர்களின் விரிந்த செட்டைகளின் அடியில் மஞ்சள் வார்ப்படத்தால் ஆகிய மன்னா அடங்கிய தங்கக் கலசம் இருந்தது; ஆரோனின் கோல் என்று இயேசு சொல்லிய கோல் ஒன்றை நான் கண்டேன் அது தளிர்த்துப் பூத்துக் கனிதாங்கியிருந்தது." -A Word to the Little Flock, p.16.

இ. பாதுகாக்கப்பட்ட இந்த மன்னா, ஓய்வுநாள் தொடர்பான அறிவுறுத்தலைக் குறித்து நாம் மேற்கொள்ளவேண்டிய நமது கடமையைப் பற்றியும்கூட நமக்குக் கூறுவது என்ன? யாத்திராகமம் 16:23.

"கர்த்தர் முன்பு இஸ்ரவேல் புத்திரருக்கு வழிகாட்டுதல்களைத் தந்தபோது, தம் ஓய்வுநாளைக் குறித்துக் காட்டிய அக்கறையைவிட இன்று சற்றும் குறைந்த அக்கறை உடையவரல்ல. ஓய்வுநாளின் ஓய்வுக்கு ஆயத்தப்படும் நாளாகிய ஆறாம் நாளிலே, அவர்களிடம், சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவிக்கவேண்டும் என அவர் கேட்டார். ஆறாம் நாளிலே ஓய்வுநாளுக்கு ஆயத்தப்படுவதைக் கைநழுவ விடுபவர்களும், ஓய்வுநாளிலே உணவு சமைக்கிறவர்களும் நான்காம் கற்பனையை மீறி, தேவனுடைய பிரமாணத்தை மீறியவர்களாகிறார்கள். கற்பனையின்படியே ஓய்வுநாளை ஆசரிக்க உண்மையிலேயே வாஞ்சையுள்ள அனைவரும் ஓய்வுநாளில் எந்த உணவையும் சமைக்கமாட்டார்கள். அவர்கள் சீனாயில் தமது பிரமாணத்தைக் கொடுத்த தேவனுக்கு பயப்படுகிற பயத்தில் தங்களை மறுதலித்து, ஆறாம்நாளில் செய்த உணவை, அது சுவையனதாக இல்லாதபோதிலும் உண்பார்கள். ஓய்வுநாளில் இஸ்ரவேல் புத்திரர் சுடுவதையும் வேவிப்பதையும் தேவன் தடை செய்துள்ளார். இந்தத் தடையானது ஒவ்வொரு ஓய்வுநாள் ஆசரிப்பாளராலும், யேகோவாவிடமிருந்து அவர்களுக்கு வரும் பக்தி விநயமான தடை உத்தரவாகவே கருதப்படவேண்டும். புனித தியானத்திற்காகவும் தொழுகைக்காகவும் நியமித்த ஓய்வுநாளில் தம் மக்கள் பெருந்திண்டியில் மூழ்கிக் கிடப்பதிலிருந்து கர்த்தர் காப்பார்." -The Spirit of Prophecy, vol.1, pp.225, 226.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. எதிர்காலத்தைக் குறித்த பாதுகாப்பின்மை நம்மில் பயத்தைக் கிளப்பிவிடுவது ஏன்? தேவனுக்கும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட தலைவருக்கும் எதிராக முறுமுறுக்கச் செய்வது ஏன்?

ஆ. மன்னாவுடன் ஒப்பிடுகையில் எவ்வளவுகாலம் இறைச்சி கொடுக்கப்பட்டது?

இ. சீர்திருத்தத்தின் முன்னேற்றப் படிகளில் தேவன் தம் மக்களை எவ்வாறு நடத்துகிறார்.

ஈ. மன்னாவின் அனுபவம் ஓய்வுநாள் ஆசரிப்புகுறித்து நமக்குக் கற்பிப்பது என்ன?

உ. மன்னா உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட உண்மையிலிருந்து நாம் கற்கவேண்டியது என்ன?

"அநேகர் இஸ்ரவேலரைத் திரும்பிப் பார்த்து, அவர்களது அவிசுவாசத்தையும் முறுமுறுப்பையுங் குறித்து ஆச்சரியப்படுகின்றனர்; மேலும், தாங்களாக இருந்தால் அவ்வாறு மிக நன்றிக்கெட்டவர்களாக இருந்திருக்கமாட்டோம் என்றும் எண்ணுவதுண்டு; ஆனால், அவர்களது விசுவாசம் பரீட்சிக்கப்படும்போது, சிறிய சோதனைகளாலுங்கூட அவர்கள் மேலே பண்டைய இஸ்ரவேலர் காட்டிய அளவுகூட விசுவாசத்தைக் காட்டவோ பொறுமையை வெளிப்படுத்தவோ மாட்டார்கள்... அவர்களது நிகழ்காலத் தேவைகள் வழங்கப்பட்டபோதிலும், அநேகர் எதிர்காலத்தைக் குறித்து தேவனிடம் திடநம்பிக்கை கொள்ள மனமற்றிருககிறார்கள்; மேலும் வறுமை தங்களை வாட்டி வதைக்குமோ தங்கள் பிள்ளைகள் துன்பமடைவார்களோ என இடைவிடாமல் கவலைபட்டுவருகிறார்கள். சிலர் எப்போதும் தீமையையே எதிர்பார்க்கிறார்கள் அல்லது நன்றி கூறவேண்டிய பல ஆசீர்வாதங்களுக்குத் தங்கள் கண்களைக் குருடாக்கிக்கொள்ளும் வகையில், உள்ளபடியே உள்ள கஷ்டங்களை மிகவும் பெரிதாக்குகின்றனர்." -Patriarchs and Prophets, p.293.

தேவன தம் மக்களை ஒவ்வொரு அடியாக நடத்திச்செல்கிறார். இருதயத்தில் என்ன உள்ளது என்பதை வெளிப்படுத்த, வெவ்வேறு விஷயங்களைக் கணக்கில் கொள்ளுமாறு அவர்களைக் கொண்டுசெல்கிறார். சிலர் ஒரு விஷயத்தில் கசித்துக்கொண்டாலும் அடுத்ததில் விழுந்துவிடுகிறார்கள். முன்னேயுள்ள ஒவ்வொரு விஷயத்திலும் இருதயம் சோதிக்கப்பட்டு, இன்னும் கொஞ்சம் புடமிடப்படுகிறது. தேவனுடைய நன்கு பயிற்சி பெற்ற மக்கள் தங்கள் இருதயங்கள் இந்த நேரடிப் பணிக்கு எதிராக இருப்பதைக் கண்டால், அவர்கள் ஆண்டவருடைய வாயிலிருந்து வெளியே துப்பப்படுவதில்லையென்றால், அவர்கள் வெற்றி பெறுவதற்காகச் செய்யவேண்டிய வேலை ஒன்று உண்டு என்று உணர்ந்துகொள்ளவேண்டும். 'தேவன் ஒவ்வொருவருக்கும் சோதித்து நிரூபித்துக்காட்ட தம் பணியை இன்னமும் நெருக்கமாக, மிக நெருக்கமாகக் கொண்டுவருவார்' என்று தூதன் சொன்னான். சிலர் ஒரு விஷயத்தைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறார்கள்; ஆனால் தேவன் அவர்களுக்கு இன்னொரு சோதனைக் களத்தைக் கொணரும்போது, அவர்கள் அதிலிருந்து சுருக்கிக்கொண்டு, பின்னே நிற்கிறார்கள்; ஏனென்றால், அது ஏதேனும் சில மனவிக்கிரகத்தை நேரடியாகத் தாக்குவதாகக் காண்கிறார்கள். இங்கே அவர்கள், இயேசுவை வெளியே தள்ளி தங்கள் இருதயங்களைப்

பூட்டுவது எதுவென்று கண்டுகொள்ள ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள். அவர்கள் சத்தியத்தைக்காட்டிலும் வேறு எதையோ உயர்த்திப் பார்க்கிறார்கள்; அவர்களுடைய இருதயங்கள் இயேசுவை வரவேற்க ஆயத்தமாக இல்லை. தனிநபர்கள் தங்களது விக்கிரகங்களை விட்டுவிட்டு, மெய்யான சாட்சியின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பார்களோவென்று காண, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பரீட்சிக்கப்பட்டு விசுவாசத்தை நிரூபிக்கும்படி கேட்கப்படுகிறார்கள். சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம், தங்கள் சுயநலம், தற்பெருமை, தீய ஆசாபாசங்களை மேற்கொள்வதன் மூலம் சுத்திகரிக்கப்பட இயலாத எவரும், 'தங்கள் விக்கிரகங்களோடு ஐக்கியப்பட்டுவிட்டவர்கள்; அவர்களைத் தனியே விட்டுவிடவேண்டும்' என்று தேவனுடைய தூதர்கள் உத்தரவிட்டனர்; மேலும் அவர்கள் தங்கள் பணிகளுக்காகக் கடந்துசென்றனர்; அவர்களது இந்த கீழ்ப்படுத்தப்படாத பாவக் குணங்களைத் தீய தூதர்களின் கட்டுப்பாட்டுக்குள் விட்டுவிட்டனர். ஒவ்வொரு களத்திற்கும் வந்து நின்று, ஒவ்வொரு பரீட்சையிலும் நிலைத்து நின்று வெற்றிபெற்றவர்கள், என்ன விலை கொடுக்கவேண்டி நேர்ந்தபோதிலும், மெய்யான சாட்சியின் ஆலோசனையை நாடினர்; அவர்கள் பின்மாரியைப் பெற்று, மறுரூபமடைதலுக்குத் தகுதியுடையவர்களாவார்கள்." -Testimonies, vol.1, p.187.

இறைச்சி உணவின்மீது இச்சை கொள்ளுதல்

"ஆதலால் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்கோபு 4:17).

"உடல் ஆரோக்கியத்தைக் குறித்து சிலர் பேசும்போது, 'நாம் செய்வதைக்காட்டிலும் இன்னும் ஏராளமான அளவு அறிகிறோம்' என்று அடிக்கடி கூறுகிறார்கள். அவர்களது உடல்நலத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஒளிக்கதிருக்கும் அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும், அவர்களது ஒவ்வொரு பழக்கமும் தேவனுடைய ஆய்வுக்குத் திறந்தே கிடக்கிறது என்பதையும் அவர்கள் உணர்வதில்லை." -Counsels on Diet and foods, p.19.

மேலும் படிக்க: Testimonies, vol.6, pp.369-379

ஞாயிறு — ஆகஸ்ட் 10

1. தேவனுக்கு ஒரு திட்டம் இருந்தது

அ. மகா பெரிய கல்வி மையமான வனாந்தரத்திற்கு இஸ்ரவேலர் எப்போதும் சென்றடைந்தனர்? அவர்கள் எப்படி மாறவேண்டுமென்று தேவன் எதிர்பார்த்தார்? யாத்திராகமம் 19:1-6; உபாகமம் 7:6; 1 பேதுரு 2:9.

"சீனாயிலே பாளயமிறங்கிய பின் சீக்கிரமாகவே, மோசே தேவனைச் சந்திக்கும்படி மலைக்கு அழைக்கப்பட்டான். அவன் தனியொருவனாக செங்குத்தான, கரடுமுரடான பாதையில் ஏறினான்; யேகோவாவின் பிரசன்னத்தின் இடத்தைக் குறித்த மேகத்தினண்டையில் இழுக்கப்பட்டான். இஸ்ரவேலர் இப்போது தேவனுடைய அரசாட்சியின்கீழ் ஒரு சபையாகவும் ஒரு தேசமாகவும் ஒருங்கிணைய - உன்னதமானவருடைய விசேஷித்த நல்லுறவிற்குள் நெருக்கமாகக் கொண்டுவரப்பட்டார்கள்." -Patriarchs and Prophets, p.303.

"[இஸ்ரவேலர்] தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது, உலகின் தேசங்களுக்கு முன்பாக அவர்களை உயர்த்தி வளப்படுத்திச் செழிப்பாக்கும் அவர்களுக்கு எல்லா நுட்ப வேலையிலும் ஞானத்தையும் திறமையையும் கொடுக்கக்கூடியவர், தொடர்ந்து அவர்களது ஆசிரியராக இருந்து, அவரது பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலின் மூலம் அவர்களை மேன்மைப்படுத்தி உயர்த்துவார். கீழ்ப்படிந்தார்களானால், மற்ற சேதத்தவர்களை பாதித்த நோய்களிலிருந்து காக்கப்பட்டு, அறிவுக்கூர்மையின் வல்லமையினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தேவனுடைய மகிமை, அவரது உன்னதம், வல்லமை யாவும் அவர்களது அனைத்துச் செழிப்பிலும் வெளிப்படுத்தப்படவேண்டும். அவர்கள் பிரபுக்களும் ஆசாரியர்களுமான ஒரு ராஜ்யமாக மாறவேண்டும். இந்தப் பூமியிலே மிகப் பெரிய இனமாக மாறுவதற்கான அனைத்து வாய்ப்பு வசதியையும் தேவன் அவர்களுக்கு அளித்திருந்தார்." -Christ's Object Lessons, p.288.

2. சீனாயில் இருந்த "பள்ளிக்கூடம்"

அ. இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையண்டை பாளயமிறங்கியபோது, கற்க வேண்டியிருந்த அடிப்படைகள் என்ன? யாத்திராகமம் 19:10, 11; 20:1-17.

"தேவனுடைய ஆராதனையுடன் தொடர்புடைய யாவும் மிகுந்த பயபக்தியுடன் கருதப்படவேண்டுமென்று ஜனங்கள் உணர்த்தப்பட்டார்கள்... அவர்களது உடலும் உடைகளும் அசுத்தத்தினின்று விடுபட்டிருக்கவேண்டும். மோசே அவர்களது பாவங்களைச் சுட்டிக்காட்டுகிறபடியால், அவர்களது இருதயங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படவேண்டுமென்றால், அவர்கள் தங்களைத் தாழ்மையாலும் உபவாசத்தாலும் ஜெப விண்ணப்பங்களாலும் அர்ப்பணித்துக்கொள்ளவேண்டியவர்களாக இருந்தார்கள். -Patriarchs and Prophets pp.303, 304.

ஆ. ஆரோக்கிய விஷயங்களில் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய வழி பார்க்கும்போது இஸ்ரவேலரிடமிருந்து எதைக் கற்றுக்கொள்ளலாம்? சங்கீதம் 78:24.

"எல்லா விஷயத்திலும் மனச்சாட்சியை வளப்படுத்துங்கள், மன விருப்பத்தை ஒழுங்கு செய்யுங்கள், நல்ல ஊட்டம்மிக்க உணவுகளை வழங்குங்கள்; அப்போது மாற்றம் தானாக நடைபெறும், மாமிசம் தின்னும் ஆசை சீக்கிரமே நின்றுபோகும்." -The Ministry of Healing, p.317.

இ. இஸ்ரவேலர் சீனாயை விட்டுக் கிளம்பியதுமே, பிற்பாடு எதற்காக மீண்டும் ஆசைப்பட்டார்கள்? எண்ணாகமம் 11:4-6; இது எவ்வாறு நமக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கின்றது?

"தேவன் வானத்திலிருந்து பெய்த அப்பத்தினால் எபிரேய சேனைக்குத் தொடர்ந்து உணவளித்துவந்தார்; ஆனால் அவர்களோ திருப்தியடையவில்லை. அவர்களது தவறான உணவு ஆசைகள், தேவன் தமது அநாதி ஞானத்தினால் அவர்களிடமிருந்து பெருமளவில் எடுத்துப்போட்ட இறைச்சிக்காகக் குறுகுறுத்தது... நோயையும் துன்பத்தையும் இயற்றியோனாகிய சாத்தான், தனது மாபெரும் வெற்றியை அடையக்கூடிய இடமான தேவனுடைய மக்களை அணுகுவான். அவன் ஏவாளை தடுக்கப்பட்ட கனியைப் புசிக்குமாறு நடத்தியதில், அவளுடன் தனது வெற்றிகரமான பரிசோதனையின் காலத்திலிருந்து உணவு ஆர்வத்தை பெரும் அளவில் தன் கைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான். அவன் முதலில் விசுவாசத்தில் இணைந்த எகிப்தியர்களாகிய கலவை ஜனங்களிடம் தனது சோதனைகளுடன் வந்து, எதிர்த்துப் பேசி முறுமுறுக்குமாறு அவர்களைக் கலக்கினான். தேவன் அவர்களுக்குக் கொடுத்த ஆரோக்கிய உணவுடன் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். அவர்களது மோசமான உணவு ஆசை, விதவிதமான - குறிப்பாக மாமிச உணவுகளுக்காகப் பரபரத்தது.

"இம்முறுமுறுப்பு சீக்கிரமே கிட்டத்தட்ட மொத்த ஜனத்தையும் தொற்றியது. முதலில் தேவன் அவர்களுடைய வெறிகொண்ட உணவு ஆசையை திருப்திப்படுத்தவில்லை; ஆனால் அவரது நியாயத்தீர்ப்புகள் அவர்கள் மீது வரச்செய்து, வானத்திலிருந்து மின்னல்களை வரவைத்து அதிக குற்றம் புரிந்தவர்களை எரிந்துபோகச் செய்தார். இருந்தாலும் இது அவர்களைத் தாழ்த்துவதற்கு மாறாக, அவர்களது முறுமுறுப்பை அதிகப்படுத்துவதாகவே தோன்றியது." -Counsels on Diet and Foods, pp.375, 376.

3. மீண்டும் இறைச்சி உணவுக்கு இச்சித்தல்

அ. எப்படிப்பட்ட மாமிசத்தை இஸ்ரவேலர் இச்சித்தார்கள்? எண்ணாகமம் 11:5, 1 கொரிந்தியர் 15:39. இன்றைய நமது நாட்களில் மீன் உணவும் மாசடைந்து பாதிக்கப்பட்டுள்ளதா?

"கர்த்தருடைய சாபம் பூமியின் மேல், மனிதன் மேல், மிருகங்கள் மேல், கடலிலுள்ள மீன்கள் மேல் உள்ளது; மீறுதல் கிட்டத்தட்ட உலகமெங்கும் நிறைந்துள்ளதாக மாறுகிறபடியால், மீறுதலின் ஆழ, அகல அளவுக்கு மாறுமாறு சாபம் அனுமதிக்கப்படும். இறைச்சி உணவால் நோய் தொற்றுகின்றது." -Counsels on Diet and Foods, p.411.

ஆ. மற்ற உணவுகளும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், மக்கள் உண்மையில் எதன் மீது வெறிகொண்டிருந்தார்கள்? எண்ணாகமம் 11:10-13, 21-23, 31, 32.

இ. முந்தின தரத்துடன் ஒப்பிடுகையில், இந்த தரம் அவர்கள் எவ்வளவு நாள் இறைச்சி சாப்பிட்டார்கள்? யாத்திராகமம் 16:12; எண்ணாகமம் 11:18-20.

"முன்பு ஒருமுறை, [இஸ்ரவேலர்] சீனாயை அடையும் முன் மன்னாவைப் பெற்றபோது, இறைச்சி உணவுக்காக அவர்கள் எழுப்பிய கூக்குரலுக்கு பதிலளித்தார். அவர்கள் அதை ஒரே ஒருநாள்தான் சாப்பிட்டார்கள், என்றாலும் அதன் பிறகு அது தடுக்கப்பட்டது ஏனெனில், அது அவர்களுக்கு உணவுக்கு ஏற்ற சிறந்த பொருளல்ல இப்போது அவர்களது முறுமுறுப்புகள் தேவனுடைய ஞானத்தின்மீது பிரதிபலிக்கப்பட்டது; வனாந்தரத்தில் பிரயாணம் செய்கையில் அவர்களுக்கு என்ன தேவை என்று அவர் அறியவில்லை என்பதுபோல் இது இருந்தது. எதிரியானவன் அவர்களது கற்பனை ஓட்டத்தை தாறுமாறாக்கியிருந்தான்." -The Signs of the Times, August 12, 1880.

"இறைச்சி உண்பது மனித உடலின்மீது என்ன வகையான ஆதிக்கம் செலுத்தும் என்பதைக் கர்த்தர் புரிந்துவைத்திருந்தார். தாங்கள் நீண்ட பிரயாணம் செய்தபோதிலும் தங்கள் உடல் தோற்றத்திலே தெய்வீக நற்சான்றுகளை உடையவர்களான மக்கள் அவருக்கு இருப்பார்கள்...

"காய்கறிகள் விலங்குமயமாக்கப்பட வேண்டுமா, நாம் அவற்றைப் பெறும் முன், அவை விலங்குகளின் உடலில் அடக்கமாக்கப்பட்டிருக்க வேண்டுமா? செத்த உயிரினங்களின் இறைச்சியை உண்பதன் மூலம் நமது உணவில் காய்கறிகளை நாம் பெற வேண்டுமா? தேவன் நமது முதல் பெற்றோருக்காகப் பழத்தை அதன் இயற்கை வடிவில் அளித்தார். அவர் ஆதாமுக்குத் தோட்டத்தை பண்படுத்திக் கவனிக்கும் பொறுப்பைக் கொடுத்து, 'அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது' (ஆதியாகமம் 1:29) என்று சொன்னார். ஒரு மிருகம் உணவுக்காக இன்னொரு மிருகத்தை அழிக்கக்கூடாது என்று இருந்தது. விழுகைக்குப் பின்னர் நீண்டநாள் வாழ்ந்த இனத்தின் உயிர்வாழும் கால அளவைக் குறைக்க வேண்டி இறைச்சி உண்பது சுமத்தப்பட்டது. மனிதரின் இருதயக் கடினத்தினிமித்தம் அது அனுமதிக்கப்பட்டது." -Spalding and Magan collection, p.46.

4. துன்ப பின்விளைவுகள்

அ. இஸ்ரவேலர் மாபெரும் ஒளியைப் பெற்றிருந்தபடியால், அவர்கள் முழு மனத்துடன் தேவனுடைய திட்டத்தைவிட்டு விலகிச் செல்வதன் பயனாக எப்படிப்பட்ட துன்பம் சகிக்கவேண்டியிருந்தது? எண்ணாகமம் 11:33,34; சங்கீதம் 78:30,31; 1 கொரிந்தியர் 10:5,6, 9-11.

"[இஸ்ரவேலர்] மோசேக்கு எதிராகவும் கர்த்தருக்கு எதிராகவும் மாய்மாலமாக முறுமுறுக்கத் தங்களைக் கொடுத்துவிட்டார்கள்; ஏனெனில், அவர்களுக்கு பாதிப்பை உண்டாக்கும் எனப்படுகிற காரியங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களது தவறான உணவு ஆசை அவர்களைக் கட்டுப்படுத்தியது, அதனால் தேவன் அவர்கள் இச்சித்தபடியே இறைச்சி உணவுகளைக் கொடுத்து, தங்கள் இச்சைமிக்க உமவு, ஆசைகளைத் தீர்த்துக்கொள்வதன் பலன்களை அனுபவிக்குமாறு விட்டுவிட்டார். தங்கள் முறுமுறுப்புகளில் மிகுந்த குற்றவாளிகளாக இருந்தவர்கள், தாங்கள் இச்சித்த அந்த இறைச்சியை ருசிபார்த்ததுமே அடிக்கப்பட்டார்கள். தங்களது உணவைத் தேர்ந்தெடுக்குமாறு கர்த்தருக்கு அவர்கள் கீழ்ப்படிந்து இருந்திருந்தால், எந்தத் தொல்லையுமில்லாமல் சுதந்திரமாகத் தங்களால் சாப்பிட முடிந்த உணவுடன் திருப்தியடைந்து, நன்றியறிதலுடையவர்களாக இருந்திருந்தார்களானால், அவர்கள் தேவனுடைய தயவை இழந்திருக்கமாட்டார்கள்; தங்கள கலகக்குணமுடைய முறுமுறுப்புகளுக்காகப் பெரும் எண்ணிக்கையில் மடிகின்ற வகையில் தண்டிக்கப்பட்டும் இருக்கமாட்டார்கள்." -The Spirit of Prophecy, vol.1, pp.284, 285.

"சுயத்தை மறுதலிப்பது உண்மையில் துன்படுவதுதான் என்று சிலர் கருதுகின்றனர். தவறான உணவு ஆசைகளில் நாட்டம் ஏற்பட்டுவிடுகிறது. எளிய உணவுமுறையின் பின்விளைவு - உண்மையில் பட்டினி கிடப்பதே என்பதாக, அநேக பண்பட்ட கிறிஸ்தவர்களேகூட இப்போது பின்வாங்கும்படி நடத்தப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரரைப் போலவே அவர்களும் இறைச்சிச் சட்டிகளை விட்டு விலகுவதற்கு மாறாக, அடிமைத்தனத்தையும், நோய்கொண்ட உடல்களையும், மரணத்தையும்கூட தெரிந்துகொள்வார்கள். உபத்திரவக் காலத்திலே மீதியானவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதெல்லாம் ரொட்டியும் தண்ணீருமே." -The Spirit of Prophecy, vol.1, p.224.

ஆ. சீனாய்க்குப் பிறகு தேவன் இஸ்ரவேலரை அறியாமையுள்ளவர்களாகக் கருதினாரா? அப்போஸ்தலர் 17:30, யாக்கோபு 4:17; யோவான் 9:41.

"செங்கடல் முதல் சீனாய் வகைரயிலான பிரயாணத்தில் முறுமுறுப்பும் கலகங்களும் அடிக்கடி நேரிட்டன, ஆனால் அவர்களது அறியாமை, குருட்டுத்தனம் ஆகியவற்றின் மேலுள்ள இரக்கத்தினால் தேவன் அப்போது அவர்களது பாவத்தை நியாயத்தீர்ப்புகளால் விசாரிக்கவில்லை. ஆனால் அது முதல் தம்மை அவர்களுக்கு ஒரேபிலே அவர் வெளிப்படுத்தியிருந்தார். தேவனுடைய உன்னதம், வல்லமை, கிருபை ஆகியவற்றிற்குச் சாட்சிகளாக இருக்கும் அளவுக்கு மாபெரும் ஒளியை அவர்கள் பெற்றிருந்தார்கள்; அவர்களது அவிசுவாசமும் மனநிறைவின்மையும் அவர்கள் மீது பெருங்

குற்றத்தைச் சுமத்தியது. மேலும், யேகோவாவைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ளவும் அவரது அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவும் அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள். அவர்களது முறுமுறுப்புகள் இப்பொழுது கலகம்; மேலும் அப்படிப்பட்ட ஒன்று உறுதியான அடையாளபூர்வமான தண்டனையைப் பெற்றுத் தீரவேண்டும் - இஸ்ரவேல் கொடுங்கோலாட்சியிலிருந்தும் அழிவிலிருந்துக் காக்கப்படவேண்டுமென்றால்..." -Patriarchs and Prophets, p.379.

வியாழன் — ஆகஸ்ட் 14

5. கணக்கு ஒப்புவித்தல்: மாமிசம் உண்பது ஒரு பாவமாகியது

அ. இறைச்சி உணவுகளுடன் வனாந்தரத்திலே எபிரேயர்களின் இரு அனுபவங்களை சங்கீதக்காரன் எவ்வாறு சுருக்கியுரைக்கிறார்? சங்கீதம் 78:18-29.

"[சாத்தான்] ஏவாளை விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும்படி நடத்தியதில், அவளுடனான தனது வெற்றிகரமான பரிசோதனையின் காலம் முதலே உணவு ஆசையைப் பெரும் அளவில் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளான். அவன் முதலில் விசுவாசத்தில் இணைந்த எகிப்தியர்களாகிய கலவை ஜனங்களிடம் தனது சோதனைகளுடன் வந்து, எதிர்த்துப் பேசி முறுமுறுக்குமாறு அவர்களைக் கலக்கினான். தேவன் அவர்களுக்குக் கொடுத்த ஆரோக்கிய உணவுடன் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். அவர்களது மோசமான உணவு ஆசை விதவிதமான – குறிப்பாக மாமிச உணவுகளுக்காகப் பரபரத்தது." -Counsels on Diet and Foods, pp.375, 376.

"இயற்கைப் பிரமாணங்களின் எந்தவொரு மீறுதலும் தேவனுடைய பிரமாணத்தின் மீறுதலாகவே இருக்கிறது." -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.1, p.1105.

"தேவன் நமக்குக் கொடுத்த ஆரோக்கியத்தை தவறாக உபயோகிப்பது கொடிய பாவமாயிருக்கிறது; ஏனெனில், ஆரோக்கியத்தின் ஒவ்வொரு தவறான பயன்பாடும் வாழ்வில் நம்மை பலவீனப்படுத்தி, கஷ்டப்பட்டவர்களாக்குகிறது." -Testimonies, vol. 3, p.150.

ஆ. இஸ்ரவேலரின் முறுமுறுப்பைப்பற்றிய விசேஷப் பதிவு அருள்வாக்கில் எவ்வாறு சுருக்கி விவரிக்கப்பட்டுள்ளது? சங்கீதம் 78:17,32. எந்த எச்சரிப்பை நாம் கவனிக்கவேண்டும்? 1 கொரிந்தியர் 10:5,6; ஏசாயா 22:12-14 (பார்க்க: ஏசாயா 22:20-22; வெலிப்படுத்தல் 3:7).

"உடலை மிக நல்ல ஆரோக்கியத்துடன் பாதுகாத்துக்கொள்வது எப்படி என்று அறியவேண்டியது ஒரு கடமையாகும்; அத்துடன், தேவன் கிருபையாகக் கொடுத்துள்ள ஒளியின்படி வாழவேண்டியதும் ஒரு புனிதக் கடமையாக உள்ளது. நாம் விட்டுவிட மனமற்ற நமது தவறுகளைக் காணவேண்டியது வருமே என்று பயந்து வெளிச்சத்துக்கு நம் கண்களை மூடிக்கொண்டால், நமது பாவங்கள் குறைவதில்லை, மாறாகப் பெருகிவிடுகிறது. ஒருவர் விஷயத்தில் வெளிச்சம் வேறுபக்கம் திருப்பப்பட்டால், இன்னொருவர் விஷயத்தில் அலட்சியப்படுத்தப்படும். நமது உயிர்வாழ்வின் சட்டதிட்டங்களை மீறுவது பத்துக் கற்பனைகளில் ஒன்றை முறிப்பது போன்ற பாவமானதாகும்; ஏனெ

னில், தேவனுடைய பிரமாணத்தை முறிக்காமல் நம்மால் இவை இரண்டையும் செய்யமுடியாது. நமது உணவு ஆசைகளை, நமது ருசிகளை கர்த்தர் மீதான நமது அன்பைக் காட்டிலும் பெரும் அளவில் நேசிப்போமானால், நாம் கர்த்தரை நம் முழு இருதயத்தோடும், மனத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் நேசிக்க முடியாது. தேவன் நமது முழுபலத்தையும், நமது முழு மனத்தையும் கேட்கும்போது, அவரை மகிமைப்படுத்த நமது பலத்தை அன்றாடம் குறைத்துக்கொண்டே செல்கிறோம்.'' -Testimonies, vol2, p.70.

''நாற்பது ஆண்டு காலமாக அவிசுவாசமும் முறுமுறுப்பும் கலகமும் பண்டைய இஸ்ரவேலரைக் கானான் தேசத்திற்குள் போகாதபடி தடுத்துவிட்டன. இதே பாவங்கள்தான் தற்கால இஸ்ரவேலரையும் பரலோகக் கானானுக்குள் நுழையாதபடி தாமதப் படுத்தியுள்ளன. இரண்டில் எவர் விஷயத்திலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் தவறு ஏற்படவில்லை. கர்த்தருடைய மக்களிடம் காணப்பட்ட அவிசுவாசம், உலக ஆசை, பரிசுத்தமின்மை, கவலை போன்றவையே பாவமும் துயரமும் நிறைந்த இவ்வுலகத்தில் நம்மை அநேக ஆண்டுகளாகக் கட்டிப்போட்டு வைத்துள்ளன.'' -Selected Messages, bk.1, p.69.

வெள்ளி ஆகஸ்ட் 15

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. தேவன் இஸ்ரவேலரை கிட்டத்தட்ட ஓராண்டு காலம் சீனாய் மலையண்டை செலவிட வைத்தது ஏன்?

ஆ. முதலில் முறுமுறுப்பது யாருடைய வழக்கம்? அவர்கள் விசேஷமாக எதை விரும்பினார்கள்?

இ. இம்மக்கள் இறைச்சி உணவுகளுக்கு வெறிகொண்டிருப்பதை சரிப்படுத்தும் முயற்சியில், இரண்டாம் தரம் எவ்வளவு காலம் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது?

ஈ. இந்தக் கீழ்ப்படியாமையின் பெரும் பின்விளைவுகளை அதிகம் அனுபவித்த வர்கள் யார்?

உ. நிகழ்கால சத்தியத்தை அறிந்தவர்களால் இறைச்சி உபயோகம் கைவிடப் படவேண்டும் என்பது ஏன்?

''இஸ்ரவேலர் எகிப்தில் உண்டு பழகிவிட்டிருந்த உணவு அவர்களுக்குக் கொடுக் கப்பட்டிருந்தால், இன்று இவ்வுலகம் கடைவிரித்துக் காட்டுகின்ற கட்டுப்படுத்த இய லாத ஆவியை வெளிப்படுத்தியிருப்பார்கள். இன்றைய காலத்தில், ஆண் - பெண் களின் உணவில், அன்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தின்ன அனுமதித்திராத பல பொருள்கள் இடம்பெற்றுள்ளன. தேவன் எகிப்தியர்களின் பழக்கவழக்கங்களின்படி உணவுண்ணுமாறு இஸ்ரவேல் புத்திரரை அனுமதித்திருப்பாரானால், அவர்கள் எப் படி ஆகியிருப்பார்கள் என்பதற்கு இன்றைய மானுடக் குடும்பம் ஓர் எடுத்துக்காட்டுச் சித்திரமாக உள்ளது.'' -The SDA Bible Commentary [E.G.White Comments], vol.1, p.1102.

"நமது உடல்நலத்துக்கு கேடான தவறான பழக்கங்கள் நம்மிடம் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம்; ஆனால் நமது பழக்கங்கள் உருவாகி வடிவம்பெற்று, இதைப் பற்றி நன்றாக அறிந்திருந்தும் மாற்ற முடியாத நிலையை அடைந்துவிட்டன என்று அநேகர் கூறுகின்றனர். இந்தக் கேடுபயக்கும் ஈடுபாடுகள் யாவும் இந்த உலக வாழ்வில் அவர்களது உயரிய ஆர்வத்திற்கு எதிராக வேலை செய்கின்றன; மேலும் இவ்வாறு செய்வதனால், எதிர்கால வாழ்வைப் பெற்றுக்கொள்ள அவர்களைத் தகுதியற்றவர்களாக்குகின்றன. அறிவொளியைப் பெற்ற அநேகர், மற்றவர்களின் பழக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்பது அசௌகரியமாக இருக்கிறது என்று தமக்குத்தாமே சமாதானம் சொல்லிக்கொண்டு, மீறுதலின் பாதையை இன்னமும் பின்பற்றுகிறார்கள். உலகில் பெரும்பாலும் தங்களுக்கும் தங்களது உயரிய பூலோக, நித்திய காரியங்களுக்கும் எதிராகப் போரிடுவதையே தெரிந்துகொள்வதால், அதிகம் அறிந்தவர்கள், இயற்கைப் பிரமாணங்களை அவர்கள் மீறியதன் பலனுக்கான பொறுப்பை அவர்கள் மீதே சுமத்துகின்ற அறிவையும் வெளிச்சத்தையும் அலட்சியம் பண்ணி, அதையே செய்ய முற்படுகிறார்கள். இயற்கைச் சட்டத்திற்கும் அவருடைய நல்லொழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளுக்கும் இணங்கிபோகாததைத் தொடர்ந்து வரும் துன்பத்திற்குத் தேவன் பொறுப்பல்ல. அறிவொளியைப் பெற்ற மீறுதலாளர்கள் மோசமான பாவிகளாவார்கள்; ஏனெனில், அவர்கள் ஒளிக்கு மாறாக இருளைத் தெரிந்துகொள்கிறார்கள். உடல்ரீதியான வாழ்வைக் கட்டியாளும் பிரமாணங்களை அவர்கள் விரும்பினால் புரிந்துகொள்ளலாம்; ஆனால், அவர்களது ஆசை, உடல்-மன ஒழுக்கரீதியான ஆரோக்கியத்துக்கு எதிரான அன்றைய காலகட்டத்தின் பெயர் பெற்றுவிட்ட உணர்வைக் கிளறும் இன்ப அனுபவங்களைப் பின்பற்றவேண்டும் என்பதே மிகப் பலமாக அவர்களிடம் காணப்படுகிறது; அதாவது, அவர்கள் அதன் [உடல்-மன ஆரோக்கியத்தின்] முக்கியத்துவத்தை உணராதவர்களாக உள்ளனர்; மேலும் அதை விதிமுறைகளின்படியோ எடுத்துக்காட்டின்படியோ மற்றவர்களைக் கவர்ந்து இழுக்கவும் மாட்டார்கள்.

இந்த முக்கியமான விஷயம் குறித்த அவர்களது அலட்சியம், ஒரு பயங்கரமான கணக்கொப்புவிக்கும் பொறுப்பில் அவர்களைத் தள்ளிவிடுகின்றது. அவர்கள் இயற்கைச் சட்டத்தை மீறியதால், தண்டனையாகத் துன்பம் அடைவது மட்டுமின்றி, அவர்களது முன்மாதிரியும் மற்றவர்களை அதே மீறுதலின் பாதையில் செல்லுமாறு வழிநடத்துகின்றது." -The Health reformer, October 1, 1871.

தள்ளிவிடப்பட்ட மன்னாக் கலசம்

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரேமியா 6:16).

"கேடு உண்டாக்கும் அனைத்தையும் முற்றிலுமாகத் தள்ளிவிட்டு, ஆரோக்கியத்துக்கு உகந்தவற்றை அறிவுடன் உபயோகிக்க வேண்டுமென்று இச்சையடக்கம் நமக்குக் கற்பிக்கிறது. தங்களது உணவுப் பழக்கங்கள் தங்களது உடல்நலம், தங்களது பண்பு இவ்வுலகிற்குத் தங்களது பிரயோஜனம், தங்களது நித்திய போக்கிடம் ஆகியவற்றிற்கு செய்யவேண்டிய நன்மைகள் எவ்வளவாக உள்ளது என்பதை உணர்ந்தவர்கள் வெகு சிலரே உள்ளனர்." -Patriarchs and Prophets, p.562.

மேலும் படிக்க: Patriarchs and Kings pp.297, 452, 453, 19-22.

ஞாயிறு ஆகஸ்ட் 17

1. ஆதி உணவுமுறை

அ. மனித உயிரைப் படைத்தவர் தேவன் என்பதால், அவர் தமது சிருஷ்டிப்பின் சிகரத்திற்கு வடிவமைத்த உணவுமுறை எப்படிப்பட்டது? ஆதியாகமம் 1:29.

"தேவன் நமது முதற்பெற்றோருக்கு இந்த இனம் உண்ணவேண்டியதென்று வடிவமைத்த உணவைக் கொடுத்தார். வேறு எந்த உயிரினத்தின் உயிரையும் பறிப்பது அவருடைய திட்டத்திற்கு எதிரானதாக இருந்தது. ஏதேனில் மரணம் என்பதே இருக்கக்கூடாது. அத்தோட்டத்தின் மரங்களின் கனிகள் மனிதனது தேவைக்கு வேண்டிய உணவு ஆகும்." -Counsels on Diet and Foods, p.373.

"ஆதியில் மனிதனுக்கு நியமிக்கப்பட்ட உணவுமுறையில் விலங்கு உணவு இடம் பெறவில்லை." -The Ministry of Healing, p.311.

ஆ. பாவம் இவ்வுலகில் நுழைந்தபோது எந்த வகையான உணவு அவசியமாயிற்று? 'ஆதியாகமம் 3:18; சங்கீதம் 104:14.

"நமது உணவில் காய்கறிகள், பழங்கள்,தானியங்கள் அடங்கியிருக்கவேண்டும். ஒரு அவுன்சு மாமிச உணவும் நம் வயிற்றுக்குள் இறங்கக்கூடாது. இறைச்சி உண்பது இயற்கைக்கு மாறானது. மனிதனைப் படைத்தபோது இருந்த தேவனுடைய ஆதி நோக்கத்துக்கு நாம் திரும்பவேண்டும்." -Counsels on Diet and Foods, p.380.

2. ஒரு தற்காலிக சலுகை

அ. எப்போது - எந்தச் சூழ்நிலையில் - இறைச்சி உணவு அனுமதிக்கப்பட வேண்டியதாயிற்று? ஆதியாகமம் 8:13-19, 9:3,4. அந்தக் காலகட்டத்திற்குப் பிறகு மனிதனுடைய வாழ்நாள் (ஆயுள்) எவ்வாறு மாறிவிட்டது? ஒப்பிடுக ஆதியாகமம் 9:29; 11:32; 25:7; சங்கீதம் 90:10.

"ஜலப்பிரளயம் வந்து பூமியின் மீது பசுமையான தாவரங்களெல்லாம் அழிந்து போகும் வரையில் இறைச்சி தின்பதற்கு மனிதன் அனுமதி பெறவில்லை." -The Ministry of Healing, p.311.

"ஜலப்பிரளயத்திற்குப் பிறகு ஜனங்கள் விலங்கு உணவைப் பெருமளவில் உண்டனர். மனிதன் தனது சிருஷ்டிகருக்கு எதிராகத் தன்னைப் பெருமையாக உயர்த்திக் காட்டி, தனது சொந்த இருதயத்தின் நினைவுகளைப் பின்பற்றுமளவுக்கு அவனுடைய வழிகள் யாவும் கெட்டுப்போனதை தேவன் கண்டார். நீண்டநாள் வாழ்ந்த மனித இனத்தின் பாவம் நிறைந்த வாழ்வு குறைக்கப்படும்படிக்கு விலங்கு உணவை உண்ணுமாறு அவர் அனுமதித்தார்." -Counsels on Diet and foods, p.373.

ஆ. அப்படி அனுமதிக்கப்பட்ட காலத்திலும், எந்தவொரு சூழ்நிலையிலும் எந்த அம்சங்கள் கடுமையாகத் தடை செய்யப்பட்டன? ஆதியாகமம் 9:4,5; லேவியராகமம் 3:17; 7:26,27; அப்போஸ்தலர் 15:20,28,29; 21:25. ஏன்?

அனுமதிக்கப்பட்ட இறைச்சிகளில், கொழுப்பையும் இரத்தத்தையும் சாப்பிடுவது கட்டாயமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

"நல்ல நிலையில் உள்ளதாகக் காணப்படும் விலங்குகள் மட்டுமே உணவுக்காக உபயோகிக்கப்பட முடியும். பீறுண்ட, தானாகச் செத்த, கவனமாய் இரத்தத்தை வடியச் செய்யப்படாத பிராணி உணவாக உபயோகிக்கப்படக் கூடாது." -The Ministry of Healing, p.312.

"தவறான நாக்குச் சுவைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதால் இறைச்சி கொழுப்புடனேயே பரிமாறப்படுகிறது. மிருகங்களின் இரத்தம், கொழுப்பு இரண்டுமே ஆடம்பரமாக எண்ணி உண்ணப்படுகின்றன. ஆனால் கர்த்தர் இவற்றை சாப்பிடக்கூடாது என்று விசேஷ வழிகாட்டுதல்களைத் தந்திருந்தார். ஏன்? ஏனென்றால், அவற்றின் உபயோகம் மனித உடலில் ஒரு நோய் கொண்ட இரத்தவோட்டத்தை உண்டாக்கிவிடும்." -Counsels on Diet and Foods, pp.393, 394.

இ. வனாந்தரத்தில், தேவன் தம் மக்களிடையே நிலைநிறுத்த முயன்றது என்ன? அவற்றின் பலன்கள் என்னவாக இருந்தன? எரேமியா 6:16 (முதல் பகுதி). கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் முடிக்கப்படவேண்டிய பணி எது? ஏசாயா 58:12; அப்போஸ்தலர் 3:20,21.

"மனிதன் பூமியின் இயற்கைத் தயாரிப்புகளின்மீது சார்ந்து வாழ - தம்முடைய ஆதி திட்டத்திற்குப் படிப்படியாக நம்மைப் பின்திரும்பி நடத்திச்செல்ல தேவன் முயற்சி செய்வதாக மீண்டும் மீண்டும் எனக்குக் காட்டப்பட்டது." -Counsels on Diet and Foods, p.380

3. சுத்தம் / அசுத்தம் எதுவுமே உண்மையில் நல்லதில்.

அ. மிக ஆரோக்கியமற்றவை என்பதால் தடை செய்யப்பட்டவை. உணவுக்காக அனுமதிக்கப்பட்ட இறைச்சி வகைகளை எபிரேயர்கள் எ. பிரித்தறிந்தனர்? லேவியராகமம் 11:1-42; உபாகமம் 14:3-21.

"உணவுப் பொருள்களிலே சுத்தமானவை, அசுத்தமானவை என்ற பாகுபாடு வெறும் சடங்குக்காகவோ அடக்குமுறை விதியாகவோ இருக்கவில்லை; மாறாக, சுகாதார அடிப்படைகளின் மீது அடியொற்றியது ஆகும். இந்தப் பாகுபாட்டை அனுசரித்ததே யூத மக்களைப் பல்லாயிரம் ஆண்டுக்காலம் தனித்துக் காட்டிய வியப்பூட்டும் வல்லமை என்பதைப் பெருமளவில் கண்டுகொள்ள முடியும்." -Patriarchs and Prophets, p.562.

"கானானில் சென்று குடியேறிய பிறகு, இஸ்ரவேலர் விலங்கு உணவு உண்ண அனுமதிக்கப்பட்டனர், ஆனால் தீய விளைவுகளைக் குறைக்கக்கூடியவையாயிருந்த கவனமான கட்டுப்பாடுகளுடன். பன்றி இறைச்சியின் உபயோகம் தடை செய்யப்பட்டது; அதேபோல அசுத்தமானவை எனப்பட்ட பிற விலங்குகள், பறவைகள், மீன்களின் இறைச்சியும் தடை செய்யப்பட்டது." -The Ministry of Healing, pp.311, 312.

ஆ. இறைச்சி உபயோகம் - சுத்தமான இறைச்சிகளுங்கூட தேவனுக்கு அதிருப்தியை உண்டாக்குகின்றது என்பதையும், அவை ஒருபோதும் அவரது தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுடைய நன்மைக்குரியவை அல்ல - உடல் ரீதியாகவோ ஆவிக்குரிய பிரகாரமோ - என்பதை நாம் எப்படி அறிவோம்? ஒப்பிடுக உபாகமம் 12:20; சங்கீதம் 106:15.

"கர்த்தருடைய விசேஷித்த வழிகாட்டுதல்களை அலட்சியம் செய்தது, மனிதர் மீது பலவிதமாக கஷ்ட நஷ்டங்களையும் நோய்களையும் வருவித்தது... அவர்களது உடலில் நல்ல தசையையும் இரத்தத்தையும் உண்டாக்க இயலாதவற்றை நுழைத்தார்களானால், அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் காட்டிய அலட்சியத்தின் பலன்களைச் சகித்தே தீரவேண்டும்." -Counsels on Diet and Foods, p.394.

"இஸ்ரவேலர், தங்களது உணவுமுறைக்காக விதிக்கப்பட்ட தெய்வீக நியமனமான திட்டத்திலிருந்து விலகிச் சென்றதினால், பெரும் இழப்பை அனுபவித்தார்கள். அவர்கள் ஒரு இறைச்சி உணவை விரும்பினார்கள்; அதன் பலனையும் அறுவடை செய்தார்கள். அவர்கள் தேவன் எதிர்பார்த்த சிறப்புப் பண்பை அடையவோ, அவரது நோக்கத்தை நிறைவேற்றவோ இல்லை. கர்த்தர், 'அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்' (சங்கீதம் 106:5). அவர்கள் பூமிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளைவிட அதிகம் மதித்தார்கள்; அவர்களுக்காக அவர் கொண்டிருந்த நோக்கத்தின் பக்கிவிநயமான சிறப்பை அவர்கள் அடையவில்லை." -The Ministry of Healing, p.312.

இ. ஆரோக்கியத்திற்கு ஏதுவில்லாத இறைச்சியை உண்பதன் மூலம் தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவர்கள் எதை எதிர்பார்த்தே ஆகவேண்டும்? ஏசாயா 66:15-17 (பார்க்க 2 தெசலோனிக்கேயர் 1:7-9).

---

4. உடன்படிக்கைப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்படுதல்!

அ. மன்னா வைக்கப்பட்ட கலசத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட தேவனுடைய திட்டத்தைக் குறித்து இஸ்ரவேலர் தொடர்ந்து செய்துவந்தது என்ன? எரேமியா 6:16(கடைசி பகுதி); எசேக்கியேல் 20:23,24.

"ஏதேனிலே மனிதனது உணவைத் தேர்ந்தெடுக்கும்போது, கர்த்தர் மிகச் சிறந்த உணவுமுறை எதுவென்று காட்டினார்; இஸ்ரவேலருக்கு முன் வைக்கப்பட்ட தெரிந்து கொள்ளுதலிலும் அதே பாடத்தையே அவர் கற்பித்தார். அவர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்து, அவர்களைத் தம்முடைய சொந்த சம்பத்தான மக்களாக இருக்கும்பொருட்டு அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பை ஏற்றார். அவர்கள் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்கவும் போதிக்கவும் விரும்பினார். இந்த நோக்கத்திற்கு சிறப்பாக ஏற்புடைய உணவை - இறைச்சியை அல்ல, மன்னாவை - 'வானத்து அப்பத்தை' அவர் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுடைய திருப்தியின்மை, எகிப்தின் இறைச்சிச் சட்டிகளுக்கான முறுமுறுப்பின் காரணமாக, விலங்கு உணவு அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது; அதுவும் ஒரு குறுகிய காலத்துக்குத்தான். அதன் உபயோகம் நோயையும் ஆயிரக்கணக்கானவர்களின் மரணத்தையும் கொண்டு வந்தது. எனினும் இறைச்சியற்ற உணவுமுறையைப் பின்பற்றுவதற்கான இந்தக் கட்டுப்பாடு மனப்பூர்வமாக ஏற்கப்படவில்லை. இது வெளிப்படையாகவோ இரகசியமாகவோ அதிருப்திக்கும் முறுமுறுப்புக்கும் காரணமாகத் தொடர்ந்தது; இது நிரந்தரமாக்கப்படவில்லை." -The Ministry of Healing, p.311.

ஆ. தேவனுடைய திட்டத்தை இஸ்ரவேலர் தொடர்ந்து தள்ளிவிட்டதன் பலனாக, சாலொமோனின் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, உடன்படிக்கைப் பெட்டிக்குள் மீதியாக இருந்த ஒரே பொருள் எது? 1 இராஜாக்கள் 8:9; 2 நாளாகமம் 5:10.

இ. பழங்கால இஸ்ரவேலரின் அதே தவறை நவீன இஸ்ரவேலர் பலரும் எவ்வாறு திரும்பவும் செய்கிறார்கள்? 1 கொரிந்தியர் 10:6.

"தேவன் ஆரோக்கிய சீர்திருத்தத்திற்கான வெளிச்சத்தைக் கொடுத்தார், அதைத் தள்ளிவிட்டவர்கள் தேவனைத் தள்ளிவிட்டார்கள். நன்றாக அறிந்திருந்த ஒன்றிரண்டு பேரும், இவையெல்லாம் டாக்டர் கெல்லாக்கிடமிருந்து, வந்தன என்று சொல்லி அவருடன் சண்டை போட்டார்கள்." -The Review and Herald, April 14, 1903.

"மன அல்லது உடல் நலத்திற்கும் பலத்திற்கும் இறைச்சி உணவு அத்தியாவசியமில்லை. கர்த்தர் காய்கறி உலகிலே எல்லாவற்றையும் கொடுத்திருக்கவில்லையென்றால், இறைச்சி உண்பதற்கான ஒரு சாக்காக அது ஆகியிருக்கும்; ஆனால் இன்றோ, உண்மையிலேயே அபாயகரமான அளவிற்கு விலங்குகள் மிகவும் நோய் கொண்டவையாக ஆகிவிட்டன; இறைச்சி உண்பது அசுத்தமானதாக இருக்கிறது. ஆதியில் மனிதனுக்கு வழங்கப்பட்ட உணவில் இறைச்சி உணவு பங்குவகிக்கவில்லை. மீறுதலுக்கும் விழுகைக்கும் பின்பு, மரணம் மனிதனுடைய பங்காகியபோதே, தேவன் நெடுநாள் வாழ்ந்த மனித இனத்திற்கு சுத்தமான விலங்குகளின் மாம்சத்தைப் புசிப்பதற்கு அனுமதி அளித்தார்." -The Kress Collection, p.21.

5. உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேலரிடமிருந்து அகற்றப

அ. இஸ்ரவேலர் மன்னாக் கலசத்தைத் தள்ளிவிட்டு கற்பலகைகளை மட வைத்திருந்த நிலையில், தேவன் அவர்களோடு இணைந்து செயல்படுவ தற்குச் சலித்துவிட்டபோதிலும், அவர்கள் இறுதியில் பத்துக் கற்பனைகளுக் குச் செய்தது என்ன? எரேமியா 7:4-12; 2 நாளாகமம் 36:15,16.

ஆ. உடன்படிக்கைப் பெட்டியில் இருந்த பத்துக் கற்பனைகளைத் தள்ளிவிட்ட தன் பலனாக, தேவன் இறுதியில் ஆலயத்துக்கும் உடன்படிக்கைப் பெட்டிக் கும் செய்தது என்ன? எரேமியா 7:13-16; 25:7-11; 2 நாளாகமம் 36:17-20.

"தம் மக்கள் தம்மை விட்டு விலகிச் சென்றால் ஆலயத்திற்கு நேரிடும் என்று தேவன் சொல்லிய பேராபத்து, இஸ்ரவேலரின் பாவத்தின் காரணமாக, ஆலயம் கட்டப்பட்ட சில நூறு வருடங்களுக்குப் பின் நிறைவேறியது...

"தேவனுடைய கற்பனைகளை இஸ்ரவேலர் மீறியதும், அவர்களுடைய பொல்லாத செயல்களும், அவர்களைப் பணியவைக்கவும் தண்டிக்கவும் சிறையிருப்புக்குப் போக வைத்ததை, தேவன் சகித்துக்கொண்டார். ஆலயம் அழிக்கப்படும் முன், இஸ்ரவேல ரின் பெருமையாகவும், அவர்கள் தேவனுக்கு எதிராகப் பாவஞ் செய்கையில், அவர் கள் விக்கிரகாராதனையின் இடமாகக் கருதிய அந்த ஆலயத்தின் கதியை தேவன் தம் முடைய விசுவாசமுள்ள சில ஊழியக்காரர்கள் அறியும்படி செய்தார். இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் போவதைக் குறித்தும் அவர்களிடம் அவர் வெளிப்படுத்தினார். இந்த நீதியுள்ள மனிதர்கள் ஆலயம் அழிக்கப்படுவதற்குச் சற்று முன்பு கற்பலகைகள் அடங் கிய புனிதமான உடன்படிக்கைப் பெட்டியை அகற்றிவிட்டார்கள்; பிறகு துக்கத் தோடும் சோகத்தோடும், இஸ்ரவேலருக்குத் தெரியாதபடி ஒரு குகையிலே ஒளித்து வைத்துவிட்டார்கள்; ஏனெனில், அவர்களது பாவங்கள் அதற்குமேல் சரிப்படுத்தப் பட முடியாததாக இருந்ததே. அந்தப் புனிதப் பெட்டி இன்னமும் மறைந்தேயிருக் கிறது. அது புனிதமானதாக இருக்கின்றபடியால் இனியொருபோதும் பிரச்சினைக் குள்ளாக்கப்படக் கூடாது." -The Spirit of Prophecy, vol1, p.414.

இ. அந்த இருண்ட காலத்தில் எந்த நம்பிக்கையின் ஒளிக்கதிர் முன்னுரைக்கப் பட்டது? மல்கியா 4:5; இந்தத் தீர்க்கதரிசனத்தின் இருபடித்தான நிறைவேறு தலை விளக்குக. மத்தேயு 17:11-13.

"வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அடங்கிய (யோவானின்) உணவு சுத்தமான மரக்கறி உணவு; இது எங்கும் பரவியுள்ள உணவு ஆசை ஈடுபாடு, பெருந்திண்டி போன்றவற்றிற்கு எதிரான கடிந்துகொள்ளுதல் ஆகும்... கிறிஸ்துவின் இரண்டாம் வரு கைக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறவர்கள் விசுவாசமுள்ள எலியாவால் குறிப்பி டப்படுகிறார்கள்; கிறிஸ்துவின் முதல் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்த யோவான் எலியாவின் ஆவியில் வந்ததுபோல். சீர்திருத்தத்தின் மிகப்பெரிய பணி என்னவென் றால், விழிப்புணர்வு அடைவதும், மக்களின் மனங்களைக் கிளர்ந்தெழச் செய்வதும் ஆகும். எல்லாவற்றிலும் இச்சையடக்கமாக இருப்பது இந்தத் தூதுடன் இணைக்கப் படவேண்டியதாய் இருக்கிறது." -Testimonies, vol3, p.62.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. தேவன் இஸ்ரவேலரிடம் எந்த உணவுமுறையை நிலைநிறுத்த முயன்றார்?

ஆ. சுத்தமான உணவுகளுக்கும் அசுத்தமானவைகளுக்கும் இடையிலான வேற்றுமை என்ன? எல்லாத் தலைமுறையினரிடமும் தடை செய்யப்பட்டிருப்பது எது?

இ. இஸ்ரவேல் மக்கள் இறைச்சி கேட்டதால் பாவம் செய்தார்கள் என்பதை நாம் எவ்வாறு அறிகிறோம்?

ஈ. உணவுமுறை சீர்திருத்தங்களுக்கு எபிரேயரிடம் தொடர்ச்சியான மறுதலிப்பு காணப்பட்டபடியால், உடன்படிக்கைப் பெட்டியிலிருந்து இறுதியாக அகற்றப்பட்டது எது?

உ. உடன்படிக்கைப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த மூலக் கோட்பாடுகள் தொடர்ந்து தள்ளிவிடப்பட்டதன் பலனாக, இறுதியில் அப்பெட்டிக்கு என்ன நேரிட்டது?

''சிறந்த உணவுகள் எவையென்று நாம் அறியவேண்டுமென்றால், மனிதனுடைய உணவுமுறைக்காக தேவன் வைத்திருந்த ஆதி திட்டத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதனைச் சிருஷ்டித்தவர், அவனது தேவைகளைப் புரிந்துவைத்துள்ளவர், ஆதாமுக்கு அவனுடைய உணவை நியமித்தார். அவர், 'இதோ... விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது' (ஆதியாகமம் 1:29) என்றார். ஏதேனை விட்டுப் போன பின், பாவத்தால் சபிக்கப்பட்ட பூமியைப் பண்படுத்துவதன் மூலம் தன் ஜீவனத்துக்காக 'வெளியின் பயிர்வகைகளைப்' புசிப்பதற்கான அனுமதியை மனிதன் பெற்றுக்கொண்டான் (ஆதியாகமம் 3:18).

''நமக்காக நமது சிருஷ்டிகரால் தெரிந்துகொள்ளப்பட்ட உணவுமுறையில் தானியங்கள், பழங்கள், கொட்டைகள், காய்கறிகள் அடங்கியுள்ளன. மிக எளிமையாகவும் இயற்கையாகவும் ஆயத்தம் செய்யப்பட்ட இவ்வுணவுகள் மிகவும் ஆரோக்கியத்துக் கேதுவானவையாகவும் ஊட்டச்சத்து நிறைந்தவையாகவும் உள்ளன. அவை பலத்தையும் தாங்கும் சக்தியையும், மிகவும் சிக்கலான தூண்டிக்கிளறிவிடும் ஓர் உணவுமுறையால் வழங்க இயலாத அறிவை வளர்க்கும் ஆற்றலையும் அளிக்கின்றன.'' -The Ministry of Healing pp.295, 296.

''இறைச்சி உணவுகளை விட்டுவிடுவதை அனைவரும் நோக்கமாகக் கொள்ளவேண்டிய வேளை இதுவல்லவா? பரலோகத் தூதர்களின் தோழமையைப் பெற தூய்மையாகவும் புதுப்பிக்கப்பட்டவர்களாகவும் பரிசுத்தமாகவும் இருப்பதற்கு நாடுவோர், ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் கேடுண்டாக்கும் உணவையோ வேறு எதையுமோ தொடர்ந்து உபயோகித்துவருவது எப்படி? ஆடம்பர வாழ்விற்காக இறைச்சி தின்ன வேண்டி தேவனுடைய ஜீவராசிகளின் உயிரை அவர்களால் எவ்வாறு எடுக்கக்கூடும்? அவர்கள் அதைவிட, ஆதியிலே மனிதனுக்குத் தரப்பட்ட முழு நிறைவான, சுவைமிக்க உணவுக்குத் திரும்பட்டும்.'' -Ibid., p.317.

கிறிஸ்து பசியின் கொடும் வேதனையைச் சகித்தபோதிலும், சோதனையை எதிர்த்து நின்றார். கலகக்கார இஸ்ரவேலர் உணவுத் தட்டுப்பாடு அடைந்து, வனாந்தரத்திலே இறைச்சி உணவுகளுக்காகக் கூக்குரலிட்டபோது, அவர்களுக்குத் திருப்பிக் கூற வேண்டுமென்று மோசேக்கு அவர் கொடுத்த 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திர மல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' (மத்தேயு 4:4) என்ற அதே வேதவசனத்தையே சாத்தானுக்கு மறுப்பாகத் தெரிவித்தார். இப்படி அறிவித்ததிலும், தம்முடைய முன்மாதிரியாலும், இவ்வுலக சம்பந்தமான உணவுக்கான பசியானது, அவனை விழவைக்கும் மிகப் பெரிய ஆபத்து அல்ல என்பதைக் கிறிஸ்துவானவர் மனிதனுக்குக் காட்டுகிறார்." -Confrontation, p.43.

1000
1000
1000
500
550

நவீன கால மன்னாக் கலசம்

"அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடி முழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல் மழையும் உண்டாயின" (வெளிப்படுத்தின விசேஷம் 11:19).

"உணவைப்பற்றிய கேள்விக்கு தேவன் கொடுத்துள்ளதும் இனி தொடர்ந்து கொடுக்கப்போவதுமான வெளிச்சம், இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா எப்படி இருந்ததோ அப்படியே இன்றைய அவருடைய மக்களுக்கு இருக்கிறது." -Counsels on Diet and Foods, p.269.

மேலும் படிக்க: The Ministry of Healing, pp.311-317.

ஞாயிறு — ஆகஸ்ட் 24

1. கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கேட்பாடுகள்

அ. ஒருவரின் கிறிஸ்தவ அனுபவத்தின் தொடக்கத்திலேயே ஏற்கப்படவேண்டிய சத்தியத்தின் முதல் அம்சங்கள் என்ன? 3 யோவான் 4,5; கலாத்தியர் 5:22,23.

"இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தைக் கேள்விப்படாதவர்களுக்குத் தூது வந்து சேரும்போது, அவர்களது உணவுமுறையில் ஒரு மாபெரும் சீர்திருத்தம் இடம்பெற வேண்டுமென்பதைக் காண்கிறார்கள். அவர்கள் இறைச்சி உணவை விட்டுவிடவேண்டும் என்று காண்கிறார்கள்; ஏனெனில், அது மதுபானம் அருந்தும் ஆசையைக் கிளப்பி, சரீரத்தை நோயினால் நிரப்புகின்றது. இறைச்சி உண்பதனால் உடல்-மன-ஒழுக்க வல்லமைகள் பலவீனப்படுகின்றன." -Counsels on Diet and Foods, pp.268, 269.

"ஆரோக்கியத்துக்குக் கேடுண்டாக்குவது அனைத்தையும் விட்டொழியுங்கள். எளிய முழு நிறைவான உணவையே பயன்படுத்துங்கள். பழங்கள் மிகச் சிறந்தவை, சமையல் வேலையையும் பெரிதும் மிச்சப்படுத்துகின்றன. கொழுமையான பசை உணவுகள், கேக்குகள், சிற்றுண்டிகள், உணவு ஆசையைச் சோதிக்கும் வகையில் ஆயத்தம் செய்யப்பட்ட பிறகு உணவுவகைகளையெல்லாம் விட்டொழியுங்கள். ஒரு உணவு வேளையில் மிகக் குறைந்த அளவிலான உணவு வகைகளையே உண்ணுங்கள், மேலும் நன்றி செலுத்ததலுடன் உண்ணுங்கள்." -Medical Ministry, p.274.

ஆ. விசுவாசியாகிய ஒருவருடைய வாழ்வில் ஆரோக்கிய சீர்திருத்தம் ஓர் ஆக்கபூர்வமான, முக்கியமான பங்கு வகிப்பது ஏன்? 1 கொரிந்தியர் 3:16,17.

"தங்களுடைய உணவுப் பழக்கங்கள் தங்கள் ஆரோக்கியம், தங்கள் நற்பண்புகள், இவ்வுலகிற்குப் பிரயோஜனமாக இருத்தல், தங்கள் நித்திய போக்கிடம் ஆகியவற்றிற்கு எவ்வளவாய் செய்யவேண்டியுள்ளது என்பதை இன்றைக்கும்கூட வெகுசிலரே போதுமான அளவு புரிந்துகொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றனர்." -Testimonies, vol.1, pp.488, 489.

2. தேவனுடைய மக்களிடம் திரும்பக் கொண்டுவரப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி

அ. தேவனுடைய மெய்யான மக்களிடம் உடன்படிக்கைப் பெட்டி திரும்பக் கொண்டுவரப்பட்டு நிலைநிறுத்தப்படுவது குறித்து பேசும் தீர்க்கதரிசனம் எது? இந்தப் பெட்டி இப்பொழுது எங்கே உள்ளது, அதினுள் காணப்படுபவை எவை? வெளி. 11:18,19; எபிரெயர் 9:3,4, 23,24.

"ஆண்டவர் எனக்குப் பின்வரும் காட்சியை 1847-இல் கொடுத்தார்...

"மகா பரிசுத்த ஸ்தலத்தில் நான் ஒரு பெட்டியைக் கண்டேன், அதன் மேற்புறமும் பக்கங்களிலும் தூய பொன்னாயிருந்தது. பெட்டியின் இரு முனையிலும் அழகிய கேரூப் அதன்மீது தன் இறக்கைகளை விரித்தபடி காணப்பட்டது. அவற்றின் முகங்கள் ஒன்றையொன்று நோக்கியபடி, அவை கீழே பார்த்தபடி இருந்தன. தூதர்களுக்கு இடையே ஒரு பொன் தூப கலசம் இருந்தது. பெட்டிக்கு மேலே தூதர்கள் நின்ற இடத் திலே, தேவன் அமர்ந்திருக்கும் சிங்காசனத்தைப்போல் தோன்றிய மிகுந்த ஒளிபொ ருந்திய மகிமை காணப்பட்டது. இயேசு பெட்டியின் அருகே நின்றவாறு, பரிசுத்தவான் களின் ஜெபங்கள் அவரிடம் வரும்போது, தூப கலசத்திலுள்ள தூபவர்க்கம் புகை எழுப் பியது, அவர் அவர்களது ஜெபங்களை தூபப் புகையோடு தம்முடைய பிதாவிடம் ஏறெடுப்பார். உடன்படிக்கைப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்கலசம், ஆரோனின் தளிர்த்த கோல், ஒரு புஸ்தகத்தைப்போல் ஒன்றாக மடிக்கப்பட்ட கற் பலகைகள் யாவும் இருந்தன." -Early Writings, p.32.

ஆ. தேவன் ஒரு காலத்தில் ஒரு ஜனத்திடம் உடன்படிக்கைப் பெட்டியை நம்பி ஒப்படைத்தபோது, அவர்கள் என்ன செய்தாலும் எக்காலத்திலும் அவர்களே அதை வைத்திருப்பார்கள் என்று உத்தரவாதம் தரப்பட்டதா? ரோமர் 11:17-24.

"நம்மிடையே உள்ள தீர்க்கதரிசன முன்னுரைப்புகள் யாவும் சீக்கிரமே ஒரு முடி வுக்கு வந்துவிடும், ஜனத்தைத் தட்டியெழுப்பிய குரல் இனி அதிக காலத்துககு அவர் களது உணர்வுகளின் தூக்கத்தைக் கெடுக்கப்போவதில்லை.

"தேவன் தம்முடைய விசித்திரமான வேலையை இப்பூமியின் மீது செய்கையில், இனிமேல் உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்க பரிசுத்த கைகள் இல்லாத நிலையில், ஜனங்களின் மேல் கேடு வரும். ஓ, நீரும்கூட உம்முடைய இந்த நாளில், உமது சமாதா னத்திற்குரிய காரியங்களை அறிந்தேயிருக்கிறீர்! ஓ, நமது மக்களும் நினிவேயைப் போலவே தம் முழு வல்லமையோடும் மனந்திரும்பி, தேவன் தமது கடுங்கோபத்தை அவர்களிடமிருந்து திருபபிவிடுவார் என்று தங்கள் முழு இருதயத்தோடும் விசுவா சிக்ககூடும்." -Testimonies, vol.5, pp.77, 78.

இ. உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கக்கூடிய ஒரு ஜனத்தை தேவன் எப்போ தும் உடையவராயிருக்கிறார் என்ற நிலைத்த உறுதிப்பாட்டைக் கொடுக்கக் கூடிய வாக்குத்தத்தம் எது? ரோமர் 9:27; 11:1-5.

"சாத்தான், ஒரு ஜனமாகிய நம்மீது, சீர்படுத்துதலும், கடிந்துகொள்ளுதலும் ஒன் றும் வராதபடிக்குத் தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, நம்மு டைய தவறுகளை அலட்சியப்படுத்துமாறு நம்மை உற்சாகப்படுத்துகிறான் ஆனாலும் தேவனுடைய பெட்டியைச் சுமக்கக்கூடிய ஜனம் ஒன்று உண்டு. இனிமேற்கொண்டு

பெட்டியைச் சுமக்காத ஒருசிலர் நம்மிடமிருந்து போய்விடுவார்கள். ஆனால் சத்தியத் தைத் தடுக்கும் அவர்களை இவர்களால் எழுப்பமுடியாது; ஏனெனில், அது மேலே, மேலே முடிவுவரை செல்லும்.'' -Testimonies to Ministers p.411.

செவ்வாய் ஆகஸ்ட் 26

3 பாவ நிவாரண நாளில் உணவுமுறை

அ. காலத்தின் இறுதியை நோக்கிச் செல்கையில், நாம் எப்படிப்பட்ட நாளில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? ஏசாயா 22:12,20,22; வெளி. 3:7.

''[ஆசரிப்புக்கூடாரத்தைப்பற்றிப் படித்தறிந்த] எவரும், பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரம் பரலோலத்திலுள்ளதற்கு ஓர் அடையாளமாக அல்லது மாதிரியாக இருப்ப தையும், பூமியிலுள்ள உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்ட பிரமாணம், பரலோ கத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள பிரமாணத்தின் மெய்யான மறுபிரதி என் பதையும், பரலோக பரிசுத்தஸ்தலத்தைப்பற்றிய சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுதலா னது, தேவனுடைய பிரமாணம் கோருபவைகளையும் நான்காம் கற்பனையாகிய ஓய்வு நாள் நிபந்தனையையும் ஒப்புக்கொள்ளுவதுடன் தொடர்புடையது என்பதையும் காணத் தவறிவிட முடியாது. பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் கிறிஸ்துவின் ஊழியத்தை வெளிப்படுத்தும் வேத வசனங்களின் ஒற்றுமையான புலனாக்கத்துக்கு கசப்பும் தீர் மானமுமான எதிர்ப்பின் இரகசியம் இங்குதான் இருந்தது. மனிதர்கள், தேவன் திறந்த கதவை அடைக்கவும் அவர் அடைத்த கதவைத் திறக்கவும் விரும்பினார்கள். ஆனால் 'ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர்,' 'இதோ,திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக் கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்' (வெளி. 3:7,8) என்று அறிவித்துள்ளார். கிறிஸ்து கதவை அல்லது மகா பரிசுத்தஸ்தலத்தின் ஊழியத்தைத் திறந்துள்ளார்.'' -The Great Controversy, p.435.

ஆ. அந்த விசேஷித்த நாளில் எந்த செயல்முறை வழக்கம் மெய்யான பாவ நிவாரண நாளை எப்படி ஆசரிப்பது என்பதற்கான உள்ளொளியை வழங்கு கின்றது? லேவியராகமம் 23:28,29.

''எல்லாருக்கும் சிபாரிசு செய்யப்படவேண்டிய மெய்யான உபவாசம் யாதெனில், உடலைத் தூண்டிவிடும் ஒவ்வொரு உணவையும் விட்டொதுக்குவதும், தேவன் ஏரா ளமாக வழங்கியுள்ள முழுமையான ஊட்டமுள்ள எளிய உணவை சரியாக பயன் படுத்தலும் ஆகும்.'' -Counsels on Diet and Foods p.90.

இ. வெளிச்சத்தை அறிந்திருந்தும் மெய்யான பாவநிவாரண நாளில் இறைச்சி உண்பதைத் தொடருகிறவர்களுக்கு என்ன நடக்கும்? ஏசாயா 22:13,14; (பார்க்க லேவியராகமம் 23:27-30; சங்கீதம் 106:14,15).

''தேவனுடைய மக்கள் இறைச்சி உண்பதற்கு எதிராக ஓர் உறுதியான காலடியை எடுத்து வைக்கவேண்டுமென்று எனக்குத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது. தம் மக்கள் சுத்தமான இரத்தமும் தெளிவான மனங்களும் உடையவர்களாக இருக்க விரும் பினால், அவர்கள் இறைச்சி உணவின் உபயோகத்தை விட்டுவிடவேண்டும் என்ற செய்தியை தேவன் தம் மக்களுக்குத் தர விரும்பவில்லையென்றால், இத்தூதை அவர் முப்பது ஆண்டுகளாகத் தருவாரா, என்ன? இறைச்சி உணவுகளை பயன்படுத்துவத னால் விலங்கு குணம் பலப்படுகிறது, ஆவிக்குரிய பண்பு பலவீனமடைகிறது.'' - Counsels on Diet and Foods, p.383.

4. ஊழியத்தில் சீர்திருத்தம்

அ. இவ்வுலக வரலாற்றின் இறுதி நெருக்கடியை எதிர்கொள்ள ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துவதற்கு எப்படிப்பட்ட ஊழியம் நமக்குத் தேவை? எசேக்கியேல் 44:23.

"இந்த அடிப்படைக் கோட்பாடுகளைப் போற்றி, தங்கள் சரீரங்களை புத்திக்கூர்மையுடன் கவனித்துப் பயிற்றுவித்து, தேவனுக்குப் பயந்து நடப்பவர்கள் மட்டுமே இந்தப் பணியில் பொறுப்புகளை ஏற்கத் தெரிந்துகொள்ளப்படவேண்டும். நீண்ட காலமாக சத்தியத்தில் இருந்தாலும் நீதியின் தூய கோட்பாடுகளுக்கும் தீய கோட்பாடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறிய முடியாதவர்கள் - நீதி, கிருபை, தேவன் மீதான அன்பு ஆகியவை குறித்து சரியான புரிந்துகொள்ளுதலின்றி மேக மந்தாரமாகக் காணப்படுபவர்கள் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். ஒவ்வொரு சபைக்கும் குறிப்பிட்ட தொனியை ஊதுகிற எக்காளத்தைக் கொடுக்கிற ஒரு தெளிவான கூர்மையான சாட்சியம் தேவை." -Testimonies, vol.6, p.375.

"தேவன் தம்முடைய ஊழியத்தையும் தமது தேவையையும் முழுவதுமாக இனங்கண்டுகொண்ட ஆர்வங்களையுடைய ஊழியக்காரர்களை இந்த நேரத்திலே அழைக்கிறார். இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ள ஊழியர்கள் ஆவியினாலும் தாம் பிரசங்கிக்கும் சத்தியங்களின் வல்லமையாலும் புத்தாற்றல் ஊட்டப்படவேண்டும்; அப்போதுதான் அவர்கள் ஒரு செல்வாக்கைப் பெறுவார்கள். மக்கள் தங்களுடைய ஊழியரைவிட மேலாக உயரப் போவதில்லை." -Ibid., vol.2, p.645.

"ஆரோக்கியப் பிரமாணத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட ஒவ்வொரு தவறுக்கும் மீறுபவர் தன் சொந்த சரீரத்திலேயே அபராதம் செலுத்தவேண்டும்." -Ibid., vol.4, p.409.

"முன்னேறிச் செல்லும் ஆரோக்கிய சீர்திருத்த ஊழியம் நமக்குக் கையளிக்கப்பட்டுள்ளது...

"ஆரோக்கிய சீர்திருத்த ஊழியத்திற்கு எதிராக உங்களை எவ்வாறு வைத்திருக்கிறீர்கள் என்பது குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அது முன்னே போகும்; ஏனெனில் நமது உலகத்தின் துன்பத்தைக் குறைப்பதற்கு ஆண்டவருடைய வழி அது; அவருடைய மக்களைத் தூய்மை செய்யும் வழி அது." -Counsels on Diet and Foods, p.38.

ஆ. தேவனுடைய மக்களை எடுத்துக் காட்டுகளின்படியின்றி, உண்மையாக வழி நடத்தக்கூடுமா? லேவியராகமம் 10:8-11; 1 கொரிந்தியர் 11:1.

"ஒருவனுடைய போதனையோ முன்மாதிரியோ தேவன் தம் ஊழியக்காரருக்கு உணவு விஷயத்தில் கொடுத்த சாட்சிக்கு எதிரானதாக இருந்தால், எவனும் மக்களுக்குப் போதகனாக நியமிக்கப்படக்கூடாது; ஏனெனில், இது குழப்பத்தையே கொண்டுவரும். அவன் ஆரோக்கிய சீர்திருத்தத்தை அலட்சியம் செய்வது, ஆண்டவருடைய தூதுவனாக நிற்பதற்கு அவனைத் தகுதியற்றவனாக்குகிறது." -Testimonies, vol.6, p.378.

"ஜனங்களிடையே ஒரு சீர்திருத்தம் தேவையே, ஆனால் அது தனது சுத்திகரிக்கும் வேலையை முதலில் ஊழியர்களிடம் தொடங்கவேண்டும்...

"ஊழியப் பணியின் ஒரு முக்கியமான பகுதி, இதே பணியின் ஒரு பாகமான மூன்றாம் தூதனுடைய தூதுடன் தொடர்புடையதாய் நிற்கும் ஆரோக்கிய சீர்திருத்தத்தை மக்கள் முன் உண்மையாக வைப்பது ஆகும். அவர்கள் அதை தாமே முன்வந்து ஏற்கத் தவறக்கூடாது; சத்தியத்தை விசுவாசிக்கும் அனைவருக்கும் அதை வலியுறுத்தவும் வேண்டும்." -Ibid., vol.1 pp.469, 470.

வியாழன் ஆகஸ்ட் 23

5. இரண்டாம் வருகைக்கான ஆயத்தம்

அ. இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன், விசுவாசிகளிடம் பொதுவாக எப்படிப்பட்ட உணவுப் பழக்கவழக்கங்கள் தேவை? 1 கொரிந்தியர் 9:25-27.

"[இஸ்ரவேலர்] தங்களது உணவு ஆசையை மறந்து [தேவனுடைய] கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படிய மனமுள்ளவர்களாக இருந்தார்களானால், அவர்களிடம் பலவீனமும் நோயும் காணப்படாதிருந்திருக்கும். அவர்களுடைய சந்ததியார் சீர், மன ஆற்றல் உடையவர்களாக இருந்திருப்பர். சத்தியம், கடமையைப்பற்றி தெளிவான பார்வையுடையவர்களாக, நுட்பமான பிரித்தறியும் வல்லமையும், வலிமையான நிதானிப்பும் உடையவர்களாக இருந்திருப்பர். ஆனால் அவர்கள் தேவன் கேட்பவைகளுக்குக் கீழ்ப்படிய மனமற்றிருந்தனர்; அவர்களுக்கு அவர் வைத்த தரத்தை எட்டவும், அவர்களுக்குரியதாக இருந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் தவறிவிட்டார்கள்." -Counsels on Diet and Foods, p.378.

"ஒவ்வொரு அலட்சியமான செயலும், மனித வாழ்விற்கான [தேவனுடைய] விசேஷித்த பிரமாணங்களை அலட்சியம் செய்வதால் அற்புதமான உடல் இயந்திரத்தின் மீது சுமத்தப்படும் எந்தவொரு தவறான உபயோகமும் தேவனுடைய பிரமாணத்தின் மீறுதல் ஆகும். இந்தப் பிரமாணம் முழுமையான மானுடத்தின் சிகிச்சையையும் ஒட்டியே செல்கிறது." -Healthful Living, p.20.

"உணவு ஆசையில் ஈடுபாடு கொண்டே ஆதாம் வீழ்ந்தான்; உணவு ஆசையை மறுத்ததினால் கிறிஸ்து வெற்றிசிறந்தார். ஏதேனைக் குறித்த நம்முடைய ஒரே நம்பிக்கை - உறுதியான சுயக் கட்டுப்பாட்டின் மூலமே உள்ளது." -Counsels on Diet and Foods, p.167.

"மனிதன் பூமியின் இயற்கை உற்பத்திப் பொருட்களின் மீதே சார்ந்து வாழ்தல்வேண்டும் - என்ற தமது ஆதி திட்டத்தை நோக்கி நம்மைப் படிப்படியாக வழிநடத்திச் செல்ல தேவன் முயலுகிறார் என்று எனக்கு மீண்டும் மீண்டும் காட்டப்பட்டது. ஆண்டவருடைய வருகைக்காகக் காத்திருப்பவர்களிடையே, இறைச்சி உண்பது இறுதியில் விடப்பட்டுவிடும்; இறைச்சியானது அவர்களது உணவில் ஒரு பாகத்தை நிரப்புவதை விட்டுவிடும். நாம் எப்போதும் முடிவிலிருப்பதை நம் பார்வையிலேயே வைத்திருக்க வேண்டும், அதை நோக்கி முன்னேற உறுதியாக உழைக்க முயலவும் வேண்டும். இறைச்சி உண்ணும் பழக்கத்தால், தேவன் நமக்குக் கொடுக்க விரும்புகிற வெளிச்சத்துடன் ஒன்றிணைந்து செல்ல முடியும் என்று என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. நமது ஆரோக்கிய ஸ்தாபனங்களுடன் விசேஷமாக தொடர்புடைய அனைவரும் பழங்கள், தானியங்கள், காய்கறிகளைச் சார்ந்தே வாழத் தங்களுக்குத் தாங்களே போதித்துக்கொள்ள வேண்டும்." -Christian Temperance and Bible Hygiene p.119.

ஆ. இந்த உணவுமுறை மாற்றம் எப்படிப்பட்ட பண்பை வளர்க்கின்றது? எபேசியர் 5:26, 27.

"உணவு ஆசையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்குக் கிறிஸ்தவ பூரணத்துவத்தை அடைவது இயலாத காரியம் ஆகும்." -Testimonies, vol.2, p.400.

"எதைத் தின்போம் எதைக் குடிப்போம் என்பது பற்றியும், இந்தச் சரீரத்துக்கான ஆகாரத்தைக் குறித்தும் மனிதர்கள் குறைவாகவே சிந்திக்கவேண்டும்; முழுமையான பக்தி அனுபவத்திற்கு உயிர்ப்பும் உரமும் தரும் பரலோகத்திலிருந்து வரும் ஆகாரத்தைக் குறித்தே அதிகம் அதிகமாகச் சிந்திக்கவேண்டும்." -Counsels on Diet and Foods, p.90.

வெள்ளி — ஆகஸ்ட் 29

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்வியும்

அ. ஒருவரது உணவுமுறைக்கும் ஆவிக்குரிய வாழ்விற்கும் இடையிலான தொடர்பு யாது?

ஆ. தேவ மக்கள் கிறிஸ்தவ யுகத்தின் இறுதிக்கட்டத்தில் நுழையும்போது, இந்தக் காலத்தில் அவர்களை வழிநடத்த பரலோகத்தில் பாதுகாக்கப் பட்டிருப்பது எது?

இ. பாவ நிவாரண நாளில் இஸ்ரவேலர் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு என்ன? இன்று நாம் அதன் நிஜத்தை நிறைவேற்றுவது எவ்வாறு?

ஈ. உண்மையான சீர்திருத்தம் வெற்றியடைய வேண்டுமென்றால், அது எங்கிருந்து தொடங்கவேண்டும்?

உ. நம்முடைய பரலோக வீட்டிற்கு மாற்றம் பெற நமது உணவுமுறை எவ்வாறு நம்மை ஆயத்தம் செய்கிறது?

"இஸ்ரவேல் புத்திரரின் அவிசுவாசமும் முறுமுறுப்பும் இன்று இப்பூமியிலுள்ள தேவ மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டுச் சித்திரமாக உள்ளது. அநேகர் அவர்களைத் திரும்பிப் பார்த்து, அவர்கள் மீதான அவரின் அன்பு, அக்கறை ஆகியவற்றிற்கு திரும்பத் திரும்ப ஆதாரங்களைக் கொடுத்ததன் மூலம் அவர்களுக்காகக் கர்த்தர் இத்தனை செய்த பின்னும் அவர்களது அவிசுவாசத்தைக் குறித்தும் முறுமுறுப்பைக் குறித்தும் அதிசயிக்கிறார்கள். அவர்கள் இவ்வளவு நன்றி கெட்டவர்களாக இருந்திருக்கக்கூடாது என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இப்படி நினைக்கிற சிலர், அற்ப விளைவுகளை உண்டாக்குகிற காரியங்களுக்கும் முறுமுறுத்து குறைபட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களையே அறியவில்லை. தேவன் அடிக்கடி அவர்களுக்கு உண்மையை உணர்த்தி அவர்களது விசுவாசத்தை சிறு காரியங்களில் பரீட்சிக்கிறார்; அவர்கள் பண்டைய இஸ்ரவேலரை விடவும் எந்தவிதத்திலும் சோதனையைத் தாங்கக்கூடியவர்களாயில்லை." -The Spirit of Prophecy, vol.1, p.223.

"நாக்குச் சுவைக்கு அடிமையானவர்கள்... விழித்தெழுந்து, காரணத்திலிருந்து விளைவு வரை உணர்ந்தறியவேண்டியவர்களாக இருக்கின்றனர். தாம் நோய் உற்பத்தியாளர்களாக இருப்பதை அவர்கள் உணரவேண்டும்; ஏனெனில், சரியான

விதத்தில் உண்ணல், குடித்தல், உடுத்துதல் ஆகிய விஷயத்தில் அவர்கள் அறியாமையில் இருப்பதேயாகும்." -Temperance, p.196.

"நவீன இஸ்ரவேலர், தேவனுடைய பழங்கால மக்களைக் காட்டிலும் மிகுதியாக அவரை மறந்து விக்கிர ஆராதனையில் வழிநடத்தப்படக்கூடிய பேராபத்தில் இருக்கின்றனர். நன்கு பழக்கப்பட்ட ஓய்வுநாள் ஆசரிப்பாளர்களால்கூட அநேக விக்கிரகங்கள் வணங்கப்படுகின்றன. தேவன் தம் பழங்கால மக்களை விக்கிரகாராதனைக்கு எதிராகக் காத்துக்கொள்ளும்படி விசேஷமான கட்டளை கொடுத்திருந்தார், ஏனெனில் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதிலிருந்து தூரமாக நடத்தப்பட நேரிட்டால் அவர்கள் மீது அவருடைய சாபம் தங்கும்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அவரை நேசித்தால், அவர் அவர்களைக் கூடையிலும் சேமிப்பு அறையிலும் பெருக்கமாக ஆசீர்வதித்து, நோய்நொடிகளை அவர்கள் நடுவிலிருந்து அகற்றிப் போடுவார்." -Testimonies, vol.1, 609.

"கடந்த காலத்திலே தேவன் மனிதரை எழுப்பினார், இன்றைக்கும் அவரது அறிவுறுத்தலுக்கு ஆயத்தப்பட்டு சந்தர்ப்பத்தை நோக்கிக் காத்திருக்கும் மனிதர் – உறுதியற்ற காரையால் கட்டப்பட்ட சுவர்களைப் போன்ற தடைகளினூடே கடந்து செல்லும் மனிதர் அவளுக்கு உண்டு. தேவன் தம்முடைய ஆவியை மனிதர் மீது வைக்கும் போது அவர்கள் ஊழியம் செய்வார்கள். அவர்கள் கர்த்தருடைய வசனத்தைக் கூறி அறிவிப்பார்கள்; அவர்கள் தங்கள் குரலை ஓர் எக்காளத் தொனியைப்போல் உயர்த்துவார்கள். சத்தியம் அவர்களது கரங்களில் தனது வல்லமையில் குறைந்து போகாது அல்லது தனது வல்லமையை இழந்துபோகாது, அவர்கள் மக்களுக்கு அவர்களது மீறுதல்களையும், யாக்கோபின் வீட்டாருக்கு அவர்களது பாவங்களையும் காட்டுவார்கள்." -Testimonies to Ministers, . 411.

"நம்முடைய தேவன் எரிச்சலுள்ள தேவன், அவர் தமக்கென்று ஒரு சுத்தமான, தூய, பரிசுத்த ஜனத்தைக் கொண்டிருப்பார்." -The Review and Herald, June 12, 1855.

முதல் ஓய்வுநாள் காணிக்கை

ஓய்வுநாள், செப்டம்பர் 6, 2008

லாஸ் ஏஞ்சல்ஸ் கலிபோர்னியா, யு எஸ் ஏ வுக்கு

அருமை உடன் விசுவாசிகளுக்கு:

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" என்னும் எசேக்கியேல் 36:26 வசனத்தின் வார்த்தைகளுடன் உங்களை வாழ்த்துவதன்மூலம் நான் இந்த வேண்டுகோளைத் தொடங்குறேன்.

லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா மாகாணத்தின் மிகச் சக்தி வாய்ந்த பொருளாதார எஞ்ஜின்களில் ஒன்று. அது 21 மில்லியன் மக்கள் தொகையை எட்டும் ஒரு மாநகரம். இங்கு உயர்ந்த கலாச்சாரங்களின் வகைகளில் ஒன்றையும் உலகிலுள்ள பல்வேறு இனத்தவர்களின் திரளையும் உங்களால் சந்திக்க முடியும். இயேசுவானவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த சரித்திரபுகழ் பெற்ற கப்பர்நகூம் பட்டணத்தைப் போலவே லாஸ் ஏஞ்சல்ஸும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படக்கூடிய மிக முக்கியமான புவியியில் - சமூக சூழலை உடையது.

சீர்திருத்த இயக்கம் இந்த மாநகரில் பல பத்து ஆண்டுகளுக்கு முன்னரே பணியைத் தொடங்கிவிட்டது. இன்று உங்களால் ஊகிக்கக்கூடிய மிகக் கடினமான பிரச்சினைகளில் ஒன்றை நாங்கள் எதிர்கொண்டிருக்கிறோம் - அது பணம். நமது சபை அங்கே வெகுவிரைவாக வளர்ச்சியடைந்துவருகிறது. மாண்ட்டரி பார்க்க சபையானது, தென் மேற்கு யு.எஸ் பணிக்கள்ததின் மிக ஆக்கபூர்வமான செயல்படும் பிரிவுகளில் ஒன்று. இச்சபையின் உறுப்பினர்கள் இத்திட்டத்திற்காக பணம் நன்கொடை தரப் பல ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றனர், ஆனால் ரியல் எஸ்டேட் மார்க்கெட்டில் (கட்டுமான சந்தையில்) விலைவாசி தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக இம்முயற்சி ஒருபோதும் போதிய அளவு பலன் தந்ததில்லை. லாஸ்ஏஞ்சல்ஸ், உலகின் செலவு மிக்க நகரங்களில் ஒன்று. நாம் வேறொரு சபையின் ஆலயத்தை வாடகைக்கு எடுத்துள்ளோம், ஆனால் அதன் வாடகை மிகவும் அதிகம். ஒவ்வொரு வாரமும் ஆலயத்தில் ஒன்றுகூடும் 100 பேருக்கு மேற்பட்டோர் நமக்கு உண்டு. அந்தப் பகுதியிலுள்ள சகோதர சகோதரிகள் இத்திட்டத்திற்காக தாம் வைத்துள்ள எல்லாவற்றையும் தத்தம் செய்துள்ளனர். அவர்களது கரங்களை உயர்த்தி உதவி கேட்பதற்கான வேளை இதுவே.

மாண்டரி பார்க்கில் உள்ள சகோதரர்கள் தமக்குச் சொந்தமாக ஓர் ஆலயத்தை வாங்க உதவுவதில் உங்களது முயற்சிகளைப் பாராட்டுகிறோம், உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

கர்த்தருடைய திராட்சை தோட்டத்தில் உங்கள் ஊழியக்காரன்.

-லிவியு துடோரோயு, தென்மேற்கு யு.எஸ். பணிக்களத் தலைவர்

ஆரோக்கிய சீர்திருத்தம் என்பது என்ன?

"ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலங்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது" (பிரசங்கி 10:17).

"மானுட இயந்திரத்தை ஆளும் ஒவ்வொரு சட்டமும் அதன் தோற்றம், பண்பு ஆகியவற்றில் மெய்யான தெய்வீகம் உடையதே என்றும், தேவனுடைய வார்த்தையைப் போன்று முக்கியத்துவம் உடையதே என்றும் கருதப்படுதல் வேண்டும்." -Counsels on Diet and Foods, p.17.

மேலும் படிக்க: Medical Ministry, pp.259-284.

ஞாயிறு — ஆகஸ்ட் 31

1. ஆரோக்கிய சீர்திருத்தத்தின் அடிப்படைகள்

அ. நமது உடல், மன, ஆவிக்குரிய நலம் எந்த அளவுக்கு ஆரோக்கிய சீர்திருத்த அடிப்படைக் கொள்கைகளுக்கு காட்டப்படும் நமது கீழ்ப்படிதலைச் சார்ந்துள்ளது? உபாகமம் 5:33, 6:5; 30:16, 19, 20.

"இடறலுண்டாக்குகிற அனைத்தையும் முற்றிலுமாக விட்டொழித்து, ஆரோக்கியத்துக்கேதுவானவைகளை புத்திசாலித்தனத்துடன் உபயோகிக்கவேண்டுமென்று, இச்சையடக்கம் நமக்குக் கற்பிக்கின்றது." -Patriarchs and Prophets, p.562.

ஆ. ஏதாவதொரு (தீய) விஷயத்தை நம் உடம்பைவிட்டு அகற்றும்போது, அந்த இடத்தில் தகுதியான வேறொன்றை வைக்க மறக்கும்போது, அநேக சமயங்களில் அத்துடன் தொடர்வது என்ன? 2 பேதுரு 2:22. நமக்கு நன்மையற்ற இந்தக் காரியங்களிலிருந்து எப்படி வெற்றிகரமாகப் பிரிய முடியும்? உபாகமம் 11:22-28.

"இறைச்சி உணவு கைவிடப்படும்போது அதன் இடத்தில் பலவித தானியங்கள், கொட்டைகள், காய்கறிகள், பழங்கள் என வயிற்றுக்கு நலம் செய்யும் ஊட்டமும் தருபவை வழங்கப்படவேண்டும். பலவீனமானவர்கள் அல்லது தொடர்ந்த உழைப்பில் ஈடுபட்டவர்கள் விஷயத்தில் இது குறிப்பாக அத்தியாவசியமானதாக உள்ளது. வறுமை மிகுந்த சில நாடுகளில், இறைச்சி விலை மலிவான உணவாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மாற்றம் என்பது பெரும் கடினமான ஒன்றாகும், ஆனால், அதைச் செய்ய முடியும். நாம் மக்களின் சந்தர்ப்ப சூழ்நிலையையும் வாழ்நாள் நெடுகிலும் உள்ள பழக்கத்தையும் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்; சரியான கருத்துக்களையும் கூட பொருந்தாத வேளையில் தந்து தூண்டிவிடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தவறான முறையில் மாற்றம் செய்யுமாறு எவரும் அவசரப்படுத்தப்படக் கூடாது. இறைச்சியின் இடத்தில் செலவற்ற ஊட்டம் மிக்க முழு நிறைவான உணவுகள் வழங்கப்படவேண்டும். இந்த விஷயத்தில் சமைப்பதையே பெருமளவு சார்ந்துள்ளது." -The Ministry of Healing pp.316, 317.

2. இயற்கையின் பரிமிதமான கொடை

அ. நமது ஆதிப் பெற்றோரின் வீடு எங்கே இருந்தது? ஆதியாகமம் 2:8.

"நமது ஆதிப் பெற்றோரின் வீடு - அவர்களுடைய பிள்ளைகள் இப்பூமியை நிரப்ப முன்செல்லவேண்டியுள்ளதால், மற்ற வீடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டியதிருந்தது. தேவனுடைய சொந்த கரத்தினால் அழகுபடுத்தப்பட்ட அந்த வீடு, ஆடம்பரமான அரண்மனையல்ல. மனிதர்கள் தங்கள் தற்பெருமையினால், பகட்டான விலை உயர்ந்த மாளிகைகளில் களிப்படைகின்றனர், தங்கள் சொந்த கரங்களின் கிரியைகளை மகிமைப்படுத்துகிறார்கள்; ஆனால் தேவன் ஆதாமை ஒரு தோட்டத்திலே வைத்தார். இதுதான் அவனது வசிப்பிடமாயிருந்தது." -Patriarchs and Prophets, p.49.

ஆ. ஆதாமும் ஏவாளும் அப்படிப்பட்டதோர் இனிய, இயற்கையான சூழலில் வைக்கப்பட்டது ஏன்? அவர்கள் அதைப்பற்றி அறிந்துணரவேண்டியிருந்தது என்ன? ஆதியாகமம் 2:9; 1:29. விழுகைக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றம் யாது? ஆதியாகமம் 3:18,19; சங்கீதம் 104:13-15.

"இயற்கையின் அபரிமிதமான கொடையான பழங்கள், கொட்டைகள், தானியங்கள் யாவும் ஏராளமாக உள்ளன; பெருகிவிட்ட போக்குவரத்து வசதிகளால் ஆண்டுக்கு ஆண்டு எல்லா நிலங்களின் விளைச்சல்களும் மிகவும் சாதாரணமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இதன் பலனாக, ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு விலை மிகுந்த ஆடம்பரங்கள் என்று எண்ணப்பட்ட உணவுப்பொருள்கள் இப்பொழுது, அன்றாட பயன்பாட்டிற்குரிய உணவுகளாக எல்லாரும் பெறக்கூடியவையாய் இருக்கின்றன. உலர் பழங்கள் டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள் விஷயத்தில் இது விசேஷமாக அறியப்படுகின்றது." -The Ministry of Healing, p.297.

"தேவன் தம்முடைய மக்களுக்காகக் கிரியை செய்துவருகிறார். அவர்கள் மூலப் பொருள்களின்றி விடப்படவேண்டும் என்று அவர் விரும்புவதில்லை. ஆதிமுதலில் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட உணவுமுறைக்கு அவர்களைத் திரும்பவும் கொண்டு வருகிறார். அவர்களது உணவுமுறையில், அவர் வழங்கிய பொருள்களிலிருந்து செய்யப்பட்ட உணவுகள் இடம்பெறுதல் வேண்டும்." -Testimonies, vol.7, p.125.

"உணவு ஆசையைக் கிளப்பும் அளவுக்கு உணவு தயாரிப்பில் அடுப்பின் மேல் குறைவான நேரமே செலவிடவும்; இதன்மூலம் வேறொரு சிறந்த நோக்கத்திற்கு பயன்படுத்த தேவன் உங்களுக்குத் தந்த பலத்தை விரயம் செய்யவேண்டாம். ஓர் எளிய, ஊட்டம் தரும் உணவு மிகப்பெரிய அளவிலான உழைப்பைக் கேட்காது. நமது குழந்தைகளை வளர்ப்பதில், போதிய ஞானமும் கர்த்தர் மீதான பயபக்தியும் பெற தேவனிடம் தாழ்மையுடனும் உண்மையுடனும் ஜெபிப்பதற்கு இன்னும் அதிக நேரத்தை நாம் செலவிடவேண்டும். மனநலம் என்பது உடல்நலத்தைச் சார்ந்துள்ளது. கிறிஸ்தவப் பெற்றோர்களாக இருக்கின்ற நாம், உயிர்வாழ்வின் சட்டங்களையொட்டி நமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கவேண்டும். நாம் உண்பதற்காக வாழவில்லை, மாறாக வாழ்வதற்காக உண்கிறோம் என்ற கட்டளையாலும் எடுத்துக்காட்டாலும் அவர்களுக்கு

நாம் போதிக்கவேண்டும். உயர்வான மனநிலை, தூய - மாசற்ற பண்பு ஆகியவற்றின் மீதான நேசத்தை நம் பிள்ளைகளிடம் ஊக்குவிக்கவேண்டும். அவர்களிடம் நல்லொழுக்க உணர்வுகளையும் ஆவிக்குரிய விஷயங்கள் மீதான நேசத்தையும் வலுப் படுத்த, நமது வாழ்க்கைமுறையை ஒழுங்குபடுத்தவும், விலங்கு உணவுகளை விட் டொழிக்கவும், தானியங்கள், காய்கறிகள், பழங்களை உணவுப்பொருள்களாக பயன் படுத்தவும்வேண்டும்." -A Solemn Appeal p.66.

செவ்வாய் — செப்டம்பர் 2

3. சீர்திருத்தத்தில் படுகுழிகள்

அ. பாவம் நிறைந்த படைப்புகளாக இருக்கிற நாம் எதைக் குறித்து தொடர் விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்? லேவியராகமம் 5:32; நீதிமொழி கள் 4:27; ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளிலும் இதே விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகிறது?

"கொட்டை உணவுகளின் சரியான உபயோகத்தில் அக்கறையுடன் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும். சிலவகைக் கொட்டைகள் பிறவற்றைப் போல் அவ்வளவு நிறைவான ஊட்டம் உடையவை அல்ல.. பெருமளவு கொட்டை உணவுகள் அடங் கிய உணவுப்பொருள்களுக்காக (பிற உணவுப்) பொருள்களின் பட்டியலைக் குறைக்கவேண்டாம். இந்த உணவுகள் தாராளமாக உபயோகிக்கப்படக் கூடாது. சிலரால் அவை மிகக் குறைவாக உபயோகிக்கப்படும்போது அதன் பலன்கள் அதிக திருப்தி கரமானதாக இருக்கும். ஒரு சில உணவு தயாரிப்பு முறைகளில் மற்ற உணவுப் பொருள்களுடன் இவற்றைப் பெரும் அளவுகளில் சேர்த்தால், உடலானது அதை சரி யான விதத்தில் தன் மயமாக்கிக்கொள்ள இயலாத அளவு மிகக் கொழுமையான உணவாக இவை மாற்றிவிடும்." -Counsels on Diet and Foods, p.364.

"நமது உணவை எளிமைப்படுத்துவதில் அறிவுக்கூர்மையுடன்கூடிய முன் னேற்றத்தை நாம் காட்டவேண்டும். தேவனுடைய அருளால், ஒவ்வொரு நாடும் மனித உடல் கட்டுமானத்திற்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்களைக் கொண்ட உணவுப்பொருள்களை உற்பத்தி செய்கின்றது. இவற்றால் உடல்நலத்துக்கு ஏதுவான பசியாற்றும் உணவு வகைகளை செய்யலாம்." -Ibid., p.94.

"இன்று ஆண்டவருக்காக ஓர் ஊழியத்தைச் செய்ய ஆயத்தமடைந்துள்ள அநேகர் மரண நிழலின் கீழே இருந்துவருகின்றனர்; ஆனால் இவர்கள் ஆரோக்கிய பிரமாணங் களைப் பின்பற்றவேண்டிய ஒருபுனிதக் கடப்பாடு தங்கள் மேல் சுமந்திருப்பதை உண ராதவர்களாக இருக்கிறார்கள். உடலுக்குரிய பிரமாணங்கள் உண்மையில் தேவனுடைய பிரமாணங்களே; ஆனால் இந்த உண்மை மறக்கப்பட்டுவிட்டதுபோல் தோன்றுகிறது. சிலர் தங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க இயலாத உணவுமுறையுடன் தங் களைக் கட்டுப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் உடலுக்குக் கேடு செய்யும் பொருள் களின் இடத்தை ஊட்டவுணவுகள் எடுத்துக்கொள்ள விடவில்லை; உணவுகளை அதிக ஆரோக்கியத்துக்கேதுவான வழிமுறைகளில் ஆயத்தம் செய்ய மதிநுட்பமும் திறமை யும் பயன்படுத்தப்படவேண்டும் என்பதை அவர்கள் யோசிப்பதில்லை. உடலானது தனது பணியை செய்யவேண்டுமென்றால், சரியானபடி ஊட்டம் பெறவேண்டும். நிறை வான ஊட்டமற்ற உணவுகள் பலவற்றை வெட்டிவிட்டு, பிறகு ஒரு தரம் குறைந்த உணவை தரத்திலும் அளவிலும் குறைத்துக் கொண்டு எதிர்முனைக்குப் போக முனை

வது ஆரோக்கிய சீர்திருத்தத்திற்கு எதிரானது. இது ஆரோக்கிய சீர்திருத்தத்திற்கு பதில் ஆரோக்கிய சீர்மறுத்தல் ஆகும்." -Testimonies, vol.6, pp. 373, 374.

ஆ. லவோதிக்கேயா காலகட்டத்தில் வாழ்கிறவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை என்ன? வெளி. 3:14,15. இது குறித்து நாம் என்ன செய்யவேண்டும்?

"எல்லோரும் தங்களுக்கு பாதிப்பை உண்டாக்கக்கூடியவற்றுடன் ஈடுபாடு கொள்ளாதபடி பார்த்துக்கொள்ள தங்கள் பழக்கவழக்கங்களை ஆராய்ந்து பார்ப்பார்களாக. உடல்நலத்துக்கு ஏலாத உண்ணல், குடித்தல் ஆசைகளை அவர்கள் கைவிடுவார்களாக." -Testimonies, vol.6, p.371.

புதன் செப்டம்பர் 3

4. சீர்திருத்த நடவடிக்கை

அ. உணவுப்பழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவதில் பெருந்திவருகிற கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படைக் கோட்பாடுகள் எவை? மத்தேயு 7:13, 14; லூக்கா 13:23,24; பிலிப்பியர் 2:12.

"ஆரோக்கிய சீர்திருத்தக் கொள்கைகளில் நாம் அறிவுள்ளவர்களாக இருந்தால்தான் ஏற்றதோர் உணவுமுறை இல்லாததால் விளையும் தீமைகளைக் காணுமாறு நாம் முழுவதும் தட்டியெழுப்பப்படுவோம். தங்கள் தவறுகளைக் கண்டுகொண்ட பிறகு, தங்கள் பழக்கங்களை மாற்றிக்கொள்ளத் துணிவுடையவர்கள், சீர்திருத்த செயல்பாட்டிற்குப் போராட்டமும் பெருமுயற்சியும் தேவை என்பதைக் காண்பார்கள். ஆனால் சரியான சுவையுணர்வுகள் அமைந்துவிடும்பொழுது, தாம் முன்னர் கெடுதலற்றவை எனப் பின்பற்றிய உணவுகளின் உபயோகம், மெதுவாக ஆனால் உறுதியாக, அஜீரணத்திற்கும் பிற நோய்களுக்கும் அடிக்கல் நாட்டிவிடும் என்பதை உணர்வார்கள்." Medical Ministry, p.273.

ஆ. சில நேரங்களில் இந்த உணவு ஆசையை வெற்றி கொள்வதற்கான போராட்டத்தில் இன்றியமையாத தேவையாக இருப்பது என்ன? மத்தேயு 16:24; 17:21.

"இறைச்சி, அதிகம் தாளித்த குழம்புகள், பலவகைப்பட்ட கொழுமையான கேக்குகள், பதப்படுத்தப்பட்டவைகளை வெகு தாராளமாக உண்ண தங்கள் நாக்குச் சுவையில் ஈடுபாடு கொண்டுள்ளவர்கள் உடனடியாக ஓர் எளிய, முழுநிறைவான, ஊட்டம் நிறைந்த உணவுமுறையில் மகிழ்ச்சியடையமாட்டார்கள். பழங்கள் சாதாரண பிரெட், காய்கறிகள் அடங்கிய ஒரு முழுநிறைவான உணவுமுறை மீது ஆர்வம் கொள்ளாதபடி அவர்களது நாக்குச் சுவை மிகவும் தாறுமாறு ஆகியுள்ளது. அவர்கள் அதுவரை ஆசையுடன் உண்டுவந்த உணவுகளிலிருந்து மிக மாறுபட்ட உணவை முதலில் உண்ணத் தொடங்கும்போது சந்தோஷப்படுவார்கள் என்று எதிர்பார்க்கவேண்டியதில்லை. அவர்களால் சாதாரண உணவை முதன்முதலாக அனுபவித்து உண்டுமகிழ முடியவில்லையெனில், அவர்களால் எதுவரை முடியுமோ அதுவரை உபவாசம் இருக்க

வேண்டும். இந்த உபவாசம் அவர்களுக்கு மருந்தைவிடப் பெரு நன்மைகளை செய்யும் என்று நிரூபிக்கும், ஏனெனில், தவறாக உபயோகிக்கப்பட்ட வயிறு தனக்கு நீண்டநாளாகத் தேவைப்பட்ட ஓய்வைக் கண்டடையும், அப்புறம் பசியானது ஒரு எளிய ஆகாரத்தினால் திருப்தியாக்கப்படும். நாக்குச் சுவையானது தான் கண்ட தவறான உபயோகங்களிலிருந்து மீண்டு, தன் இயற்கை சக்தியைப் பெற சற்று காலம் பிடிக்கும். ஆனால் உண்பதிலும் குடிப்பதிலும் ஒரு சுயமறுப்புப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது, விரைவிலேயே எளிய முழுநிறைவான உணவை சுவையானதாக ஆக்கும்...

''தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவும் சுயத்தைக் கீழ்ப்படுத்தவும் சரியான விதத்தில் பயிற்றுவிக்கவும் ஆண்டவருடைய ஆவி தங்களுக்குத் தேவை என உணர்கிறவர்கள் எல்லாரும் தங்கள் சுயத்தை மறுதலித்து, சிலுவையைத் தூக்கிக்கொண்டு, இயேசுவைப் பின்பற்றுவார்கள்.

சில விஷயங்களுக்காக உபவாசமும் ஜெபமும் சிபாரிசு செய்யப்படுகிறது, ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இருக்கிறது. இவை தேவனுடைய கரத்தில், இருதயத்தைத் தூய்மை செய்யும், சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்கும் ஒரு வழி முறையாக உள்ளன. நமது ஜெபங்களுக்கான பதில்களை நாம் பெற்றுக்கொள்கிறோம்; ஏனெனில், தேவனுக்கு முன்பாக நம்முடைய ஆத்துமாக்களைத் தாழ்த்துகிறோம். நமது உணவு ஆசைகள் செத்துப்போன விலங்குகளின் இறைச்சிக்காகக் கூக்குரலிடுமானால், ஆத்துமாவுக்கு எதிராகப் போரிடும் மாம்ச இச்சைகளை மறுதலிக்க ஆண்டவருடைய கிருபைக்காக அவரிடம் ஜெபிப்பதும் உபவாசிப்பதும் ஓர் இன்றியமையாததாக உள்ளது.'' -Medical Ministry, pp.282, 283.

வியாழன் **செப்டம்பர் 4**

5. மாற்றத்திற்கான ஞானம்

அ. நமது உணவுமுறையை சீர்திருத்துவதற்கு தேவைப்படும் விடாமுயற்சியையும் ஆபத்துகளையும் நோக்கும்போது, நித்திய ஜீவனுக்கு நடத்தும் சரியான சமநிலையை எட்டுவது எப்படிக் கூடும்? நீதிமொழிகள் 2:6,7; 4:7; யாக்கோபு 1:5.

''நோய் கொண்டுவராத, வாழ்வளிக்கும் உணவுகளில் பழங்கள், தானியங்கள், காய்கறிகளை இணைக்க உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அநேகருக்கு கர்த்தர் கற்பிப்பார். இப்போது சந்தையில் உள்ள ஆரோக்கிய உணவுகளைத் தயாரிக்கும் முறைகளை ஒருபோதும் கண்டிராதவர்கள் அறிவுக்கூர்மையுடன் செயல்பட்டு, பூமியிலே உணவு உற்பத்திப்பொருள்களை பரிசோதனை செய்து கண்டுபிடிப்பார்கள், இந்த உற்பத்திப்பொருட்களின் உபயோகம் குறித்த வெளிச்சம் கொடுக்கப்படும். என்ன செய்ய வேண்டும் என்பதைக் கர்த்தர் அவர்களுக்குக் காட்டுவார். உலகின் ஒருபகுதியிலுள்ள தம் மக்களுக்கு திறமையையும் புரிந்துகொள்ளுதலையும் கொடுக்கிறவர், உலகின் மற்ற பகுதிகளிலுள்ள தம் மக்களுக்கும் அந்தத் திறமையையும் புரிந்துகொள்ளுதலையும் தருகிறார். ஒவ்வொரு நாட்டின் உணவுக் கருவூலகர்களும் அவர்களுக்குரிய நாடுகளில் உபயோகமாக இருக்கும் வகையில் ஆயத்தமுடையோராய் இருக்கவேண்டுமென்பது ஆண்டவருடைய ஏற்பாடு ஆகும். இஸ்ரவேல் புத்திரருக்கு வாழ்வளிக்க தேவன்

வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்ததுபோல இப்போதும் வெவ்வேறு இடங்களிலுள்ள தம் மக்களுக்கு, இறைச்சியின் இடத்தைப் பிடிக்கும் உணவுகளை ஆயத்தம் செய்வதில் இந்த நாடுகளின் உற்பத்திப்பொருட்களை உபயோகிக்கும் திறமையையும் ஞானத்தையும் கொடுப்பார்." -Testimonies, vol.7, p.124.

"மெய் சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றும் கடமைக்கு மனச்சாட்சி விழித்தெழுப்பப்படவேண்டும். தம் மக்கள் எல்லா விஷயங்களிலும் மிதமானவர்களாக இருக்கவேண்டுமென்றே கேட்கிறார். அவர்கள் உண்மையான இச்சையடக்கத்தைக்கைக்கொண்டாலன்றி, சத்தியத்தின் சுத்திகரிக்கும் செல்வாக்கிற்கு ஆட்பட முடியாது." -Counsels on Diet and Foods, p.451.

ஆ. உடல்நலத்தைக் கட்டிக்காக்க, என்ன வகையான ஒப்புக்கொடுத்தல் தேவை? பிலிப்பியர் 4:13.

"நம்முடைய ஊழியத்திலே, இச்சையடக்க சீர்திருத்தின் மீது அதிக அக்கறை செலுத்தப்படவேண்டும். சீர்திருத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஒவ்வொரு நாளும், மனந்திரும்புதல், விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. அதாவது ஆத்துமாவை ஒரு புதிய, மேன்மையான வாழ்விற்கு உயர்த்துவது என்பதாகும். இவ்வாறு ஒவ்வொரு உண்மைச் சீர்திருத்தத்திற்கும் மூன்றாம் தூதனுடைய தூதுப் பணியில் அதற்குரிய இடம் உண்டு. குறிப்பாக இச்சையடக்க சீர்திருத்தத்திற்கு நமது கவனமும் ஆதரவும் தேவையாக இருக்கிறது. நமது முகாம் கூட்டங்களில் இந்தப் பணிக்கு கவன ஈர்ப்பு அழைப்பை நாம் விடுக்கவேண்டும், அதை ஒரு உயிரித் துடிப்புள்ள விஷயமாக ஆக்கவேண்டும். மெய்யான இச்சையடக்கத்தின் கோட்பாடுகளை மக்கள் முன் நாம் வைக்கவேண்டும், இச்சையடக்க உத்தரவாதப் படிவத்தில் கையெழுத்திடுபவர்களுக்கு அழைப்பு விடுக்கவேண்டும். தீய பழக்கங்களால் அடிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையான கவனிப்பு தரப்படவேண்டும். நாம் அவர்களைக் கிறிஸ்துவின் சிலுவையண்டையில் வழிநடத்தவேண்டும்." -Testimonies, vol.6, p.110.

இ. வாழ்க்கைமுறை மாற்றங்களில் போராடிக்கொண்டிருக்கும்போது, நாம் எதை உற்று நோக்கவேண்டும்? யோபு 14:4; ரோமர் 7:24,25; 1 கொரிந்தியர் 15:57.

வெள்ளி — செப்டம்பர் 5

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. இச்சையடக்கத்தின் உண்மையான அடிப்படைக் கோட்பாடுகளை நம்மால் எவ்வாறு சிறப்பாக விவரிக்க முடியும்?

ஆ. நம்முடைய உலகப் பிரகாரமான தேவைகள் அனைத்தையும் வழங்குவதற்கு தேவன் இயற்கையில் அபரிமிதமாக வழங்கியுள்ளது என்ன?

இ. எந்த அபாயங்களுக்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டியதிருக்கிறது - குறிப்பாக ஆரோக்கியத்தில் விழிப்போடு இருக்கவேண்டுமானால்?

ஈ. ஆதியில் தேவன் வடிவமைத்த திட்டத்திற்கேற்ப நமது உணவுமுறையையும் வாழ்க்கைமுறையையும் மாற்றுவதில் நம்மால் வெற்றிகரமாக எடுக்கப் படக்கூடிய சில நடவடிக்கைகள் எவை?

உ. உணவிலும், நமது வாழ்வின் பிற விஷயங்களிலும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற நமக்கு இன்றியமையாத தேவையாயிருப்பது எது?

"உடலின் இயற்கைத் தன்மையைக் கட்டியாளும் பிரமாணங்கள், தோற்றத்திலும் தன்மையிலும் பத்துக்கட்டளைகளாகிய பிரமாணத்தைப் போன்றே உண்மையான தெய்விகத் தன்மையுடையவை...

"இந்தப் பிரமாணங்களை மீறுவது, மாற்றமுடியாத தேவனுடைய பிரமாணத்தை மீறுவது ஆகும்; இதற்குரிய தண்டனை உறுதியாகப் பின் தொடரும்." -Healthful Living, p.21.

"உடல், மன அல்லது ஒழுக்கம் சார்ந்த [தேவனுடைய] பிரமாணத்தை மீறுவது, அலட்சியம், அராஜகம், அழிவு ஆகியவற்றை அறிமுகப்படுத்த பிரபஞ்சத்தின் ஒருமைப்பாட்டிலிருந்து ஒருவனது சுயத்தை விலக்கி வைப்பது ஆகும்." -Education, p.100.

"குணமாக்கும் கலையை செயல்படுத்த பல வழிகள் உள்ளன; ஆனால் பரலோகம் ஏற்றுக்கொள்ளும் வழி ஒன்றே ஒன்றுதான். தேவனுடைய நிவாரணிகள் யாவும் இயற்கையின் எளிய வழிவகைகள்தான். அவை தம்முடைய சக்திவாய்ந்த மருந்துக் கூறுகளால் உடலை பலவீனப்படுத்தவோ சுமை சுமத்தவோமாட்டா. தூய காற்றும், நீரும், சுத்தமாக இருப்பதும், ஏற்ற நல்லுணவும், தூய வாழ்வும், தேவனில் வைக்கும் உறுதியான நம்பிக்கையும் செத்துமடியும் ஆயிரக்கணக்கானவர்களின் தேகைக்குரிய நிவாரணிகள் ஆகும்; இருந்தாலும் இந்த நிவாரணிகள் காலம் கடந்தவையாகிவிடுகின்றன; இதற்கு காரணம், அவற்றின் திறமையான உபயோகத்திற்கு மக்கள் ஏற்றுப் போற்றாத வேலை தேவைப்படுகிறது. புத்தம் புதிய காற்று, உடற்பயிற்சி, தூய நீர், தூய இனிய வாழிடம் யாவும் எல்லாருக்கும் கிடைக்கக்கூடிய தூரத்தில், குறைந்த செலவில் கிடைக்கக்கூடியவையாகத்தான் உள்ளன; ஆனால் மருந்துகளோ கருவிகள் மூலம் தயாரிப்பு, உடலின்மீது உண்டாக்கும் விளைவு இரண்டிலும் செலவுள்ளவை." -Counsels on Diet and Foods p.301.

"கர்த்தர் தம் மக்களிடம், அவர்கள் அவரது கற்பனைகளைக் கைக்கொள்வார்களானால், ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவர்களுக்குக் கிடைக்கும், அவர்கள் ஒரு தனிப்பட்ட மக்களாக இருப்பார்கள் என்று தெளிவாகக் கூறினார். ஆரோக்கியம் என்பது கீழ்ப்படிதலின் வெகுமதி என்று எடுத்துக்காட்டி, மோசேயின் மூலம் வனாந்தரத்திலே அவர்களை எச்சரித்தார்." -Ibid., 375.

"ஆகாரத்தைப்பற்றிய கேள்விக்கு தேவன் தமது இன்றைய மக்களுக்குக் கொடுத்துள்ளதும் கொடுக்கவிருப்பதுமான வெளிச்சம், அன்றைய இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா எப்படி இருந்ததோ அப்படி இருக்கிறது. மன்னா வானத்திலிருந்து பெய்தது, அதைச் சேகரித்து சாப்பிடுவதற்காக தயார் செய்யும்படி ஜனங்களுக்குச் சொல்லப் பட்டது. அதுபோலவே, உலகின் வெவ்வேறு நாடுகளில், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வெளிச்சம் தரப்படும், இந்த நாடுகளுக்குப் பொருந்துகிற ஆரோக்கிய உணவுகள் தயாரிக்கப்படும்." -Medical Ministry, p.267.

தேவனுடைய மக்களை இனங்காணுதல்

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).

"இழந்துபோன பாவிகளாகிய நம்மை அவருடன் இணைத்துக்கொள்வதிலும், அவருக்குச் சொந்தமான பொக்கிஷமாய் இருக்கச் செய்வதிலும் தேவன் நமக்குக் காட்டியுள்ளது எப்படிப்பட்டதோர் பச்சாதாபம், எப்படிப்பட்டதோர் ஈடிணையற்ற அன்பு!" -Patriarchs and Prophets, p.289.

மேலும் படிக்க: Testimonies, vol.1, pp.283-287; Ibid., vol.4, p.180.

ஞாயிறு — செப்டம்பர் 7

1. ஒரு விசேஷித்த ஜனம்

அ. உலகில் வாழும் அனைவரிலும் தேவனுடைய உண்மையான மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளவர்கள் யார்? 1 பேதுரு 2:9; மல்கியா 3:17,18.

ஆ. தேவனுடைய மக்களை விசேஷித்தவர்களாக்குவது எது? இந்தச் சிலாக்கியம் எவ்வாறு அருளப்படுகிறது? யாத்திராகமம் 19:5,6; உபாகமம் 14:2; 26:16-19. இந்தத் தனித்துவம் நமது உணவுத் தேர்வுகளில் காணப்படுவதை நாம் எவ்வாறு அறிவோம்? யாத்திராகமம் 15:26.

"நமது உண்ணும், குடிக்கும் பழக்கங்கள், நாம் இவ்வுலகத்துக்குரியவர்களா அல்லது கர்த்தர் தம்முடைய வல்லமையான பிரிக்கும் சத்தியத்தினால் உலகினின்று பிரிக்கப்பட்டவர்களில் சேர்கிறவர்களா என்பதைக் காட்டும். இவர்களெல்லாம் அவரது சொந்த ஜனங்கள், நற்கிரியைகள் செய்வதில் விழிப்புள்ளவர்கள்... தானியேல் மற்றும் அவனுடைய மூன்று தோழர்களின் விஷயத்தில், ஆரோக்கிய சீர்திருத்தம் பற்றிய பிரசங்கங்கள் உள்ளன. தேவன் எந்த மக்களுடைய நன்மைக்காக அவர்களிடமிருந்து இறைச்சி உணவை எடுத்துப்போட நினைத்தாரோ, அந்த இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திரத்தில் பேசியிருந்தார். அவர் பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தினால் அவர்களை போஷித்தார்." -Testimonies, vol.6, p.372.

"எளிய ஆகாரத்தின் அர்த்தம் என்னவென்று புரிந்துகொள்ளவேண்டிய காலம் ஒன்றை நாம் சீக்கிரம் அடைவோம். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை, அப்பொழுது, நமது இன்றைய உணவுமுறையிலிருந்து வெகுவாக மாறுபட்ட ஒரு உணவுமுறையை ஏற்கவேண்டிய கட்டாயம் நமக்கு வரும்." -Medical Ministry, p.281.

2. இடுக்கமான பாதையில் நடத்துதல்

அ. தலைவர்களுக்கும் மந்தைக்கும் அவரவருக்குரிய பொறுப்புகளுடன் எப்படிப் பட்ட நல்லுறவு நிலவவேண்டும்? 1 தீமோத்தேயு 4:12; 1 பேதுரு 5:2-4, 5.

"நமது ஊழியர்களில் எவரும் இறைச்சி உணவு உண்பதில் தீய முன்மாதிரியை காட்டாதிருப்பார்களாக. அவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் ஆரோக்கிய சீர் திருத்தத்தின் வெளிச்சத்திலே வாழ்ந்து வருவார்களாக." -Medical Ministry p.281.

ஆ. ஆரோக்கிய சீர்திருத்தம் உட்பட, சத்தியத்தைப்பற்றிய அறிவு நமது இரட்சிப் பையும் நம்மைக் கவனித்துக்கொண்டிருப்பவர்களின் இரட்சிப்பையும் எவ்வாறு பாதிக்கிறது? 1 தீமோத்தேயு 4:16.

"நாம் காலத்தின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கையில், ஆரோக்கிய சீர்திருத் தம், கிறிஸ்தவ இச்சையடக்கம் போன்றவற்றை இன்னும் சரியான முறையில் உறுதி யான வழியில் முன்வைத்து, இன்னும் உயர உயரமாக எழும்பி நிற்கவேண்டும். நம் முடைய வார்த்தைகளால் மட்டுமல்ல, நமது செயல்முறைகளாலும் மக்களுக்குக் கல்வி புகட்ட தொடர்ந்து பாடுபடவேண்டும். -Testimonies, vol.6, p.112.

இ. தேவனுடைய பிரமாணங்களுக்கு - இயற்கைப் பிரமாணங்கள் உட்பட - கீழ்ப் படிதல் எங்கே நடத்திச் செல்கிறது? ஏசாயா 1:19; 1 பேதுரு 1:14-16.

"[1 கொரிந்தியர் 6:19,20 மேற்கோள்] ஆம், நாம் தேவனுடைய சொத்து. இயற் கைப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிகிற பாதை, பரலோகத்திற்குச் செல்லும் நேர் பாதை யாகும். உண்ணல், குடித்தல், உடுத்துதலின் பிழைகளிலிருந்து மாற்றம் பெற்றவன் ஒரு நல்ல, மனபூர்வமான விருப்பமுடைய இருதயத்தில் சத்தியத்தைப் பெறவும் கேட் கவும் ஆயத்தப்படுகிறான்." -Counsels on Health, p.222.

ஈ. தேவன் தம் மக்களை எப்படி பரிசுத்தம் பண்ணுகிறார்? ஏசாயா 48:10; 1 பேதுரு 1:22; யோவான் 16:13.

உ. இஸ்ரவேலரின் விசுவாசத்தை உறுதி செய்ய யோசுவாவும் எலியாவும் விடுத்த அழைப்புகள் எப்படிப்பட்டவை? யோசுவா 24:15; 1 இராஜாக்கள் 18:21 இச்சையடக்க அர்ப்பணிப்பிற்கும் இதேவிதமான அழைப்பை விடுப் பது எவ்வாறு கூடும்?

"ஆரோக்கியத்திற்கான கவனிப்பின் முக்கியத்துவம் ஒரு நிபந்தனையுடன்கூடிய வேதாகம வேண்டுகோளாக கற்பிக்கப்படவேண்டும். தேவனுடைய கற்பனைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல், வாழ்க்கைப் பிரமாணங்களுக்குப் பணிந்து செல்லுமாறு அழைப்பு விடுக்கின்றது... எவனும் தன்னைத் தேவனுடைய சொத்தாகக் கருதி அதற் குரிய நிபன்தனைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டாலன்றி, தேவனுக்குத் தான் கடமைப்பட்டுள்ளதற்கான நிபந்தனைகளைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. வாழ்க்கைப் பிரமாணங்களையும் ஆரோக்கியப் பிரமாணங்களையும் அறியாமல் பாவ அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறவன், அல்லது இந்தப் பிரமாணங்களை மனப்பூர்வமாக மீறுகிறவன் தேவனுக்கு எதிராகப் பாவஞ் செய்கிறான்." -Counsels to parents, Teachers, and students, p.295.

3. சுத்திகரிக்கப்படுதலும் இறுதிப் பிரிவினையும்

அ. தீய பழக்கவழக்கங்களில் நீடித்திருப்பவர்களுக்கு நடக்கப்போவது என்ன? ஓசியா 4:17(19).

"இன்று இறைச்சி உண்பது பற்றிய கேள்வியில் வெறும் அரை மனமாற்றம் உடைய அநேகர் தேவனுடைய மக்களிடமிருந்து விலகிப்போய், இனிமேற்கொண்டு ஒருபோதும் அவர்களுடன் சேர்ந்து நடக்கமாட்டார்கள்." -Counsels on Diet and Foods, p.382, (1902).

ஆ. தவறு செய்வதில் நீடித்திருக்கும் ஒரு சபையின் "விளக்குத் தண்டு"க்கு இறுதியில் நேரிடுவது என்ன? வெளி. 2:5; 3:16.

"நிச்சயிக்கப்பட்டதோர் சீர்திருத்த ஊழியத்தை முன்னெடுத்துச் செல்லும்படி தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை அழைக்கிறார். தம் மக்களை ஓர் உயர்ந்த செயல்பாட்டில் நடத்தவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒவ்வொரு குடும்பமும் சுயமறுப்பைக் கைக்கொண்டு, தங்களுடைய நிலைமையை மேம்படுத்திக்கொள்ள தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வார்களாக. மெய்யாகவே கர்த்தருடைய பக்கமாக நிற்பவர்கள் சுயத்தை மறுப்பவர்களாகவும், தற்தியாகம் செய்பவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் ஆத்துமாவைக் கறைப்படுத்திக்கொள்ளவும் தங்கள் சரீரத்தை இச்சையடக்கமின்றி விட்டுவிடவும் மறுத்து, தேவனுடைய மகிமைக்கெனவே உண்பார்கள், குடிப்பார்கள். பின்னர் சபையின் நிலையானது அதன் வெளிச்சம் நீக்கப்படாதபடிக்கு பரீட்சிக்கப்படும். ஆனால் சபை அங்கத்தினர்கள் தேவன் தங்களுக்கு ஒதுக்கியுள்ள பங்கைச் செய்யாவிட்டால், ஆரோக்கிய சீர்திருத்த இயக்கம் அவர்கள் இல்லாமலேயே மேற்செல்லும்; தேவன் அவர்களுடைய விளக்குத் தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிவிட்டது தெரியவரும். ஒளியைப் பெறவும், அதைப் பின்பற்றவும் மறுப்பவர்கள் பின்னால் இருக்கும்படி விடப்படுவார்கள்." -Manuscript Releases, vol.13, p.339.

இ. கிறிஸ்துவைக் காண ஆயத்தமாய் உள்ள மக்கள் எப்படிப்பட்டவர்கள்? எபேசியர் 5:25-27.

"இறைச்சி விலக்கப்பட்டால், நாக்கு ருசியானது அந்தத் திசையில் பயிற்றுவிக்கப்படாவிட்டால், பழங்கள் தானியங்கள் மீதான விருப்பம் ஊக்குவிக்கப்பட்டால், அது சீக்கிரத்திலேயே, தேவன் ஆதியிலே எப்படி இருக்கவேண்டுமென்று திட்டம் செய்தாரோ அப்படியாகும். அவருடைய மக்களால் இறைச்சி பயன்படுத்தப்படாது." -Counsels on Diet and Foods, p.82.

"தேவன் தம் மக்களை, அவர்கள் இனிமேல் செத்த விலங்குகளின் இறைச்சியைத் தொடவோ ருசிக்கவோ விரும்பாத நிலைக்குக் கெண்டுவருவார்... செத்துப்போன விலங்குகளின் இறைச்சியை உண்பதில் பாதுகாப்பு இல்லை, இன்னும் ஒரு குறுகிய காலத்திலேயே, தேவநுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் மக்களின் உணவிலிருந்து பசுக்களின் பாலும்கூட ஒதுக்கப்பட்டுவிடும். இன்னும் ஒரு குறுகிய காலத்திற்

குள், விலங்குகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எதுவும் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பற்றதாகிவிடும். தேவனை அவரது வசனத்தின்படியே ஏற்றுக்கொண்டு, முழு இருதயத்தோடு அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் ஆசீர்வதிக்கப் படுபவார்கள். அவர் அவர்களது பாதுகாப்புக் கவசமாக இருப்பார். ஆனால் கர்த்தர் அற்பமாக எண்ணப்படமாட்டார்.'' -Ibid., p.411.

புதன் செப்டம்பர் 10

4. நித்தியத்திற்காகத் தீவிரமாக ஆயத்தப்படுதல்

அ. வேதாகம வாக்குத்தத்தங்கள் பலவற்றில், எல்லா யுகங்களிலும் தேவனுடைய சபையின் கஷ்டமான காலங்களில் விசேஷ நம்பிக்கையையும் தைரியத்தையும் கொண்டுவருபவை எவை? 2 பேதுரு 1:4; மத்தேயு 5:5; 2 பேதுரு 3:13.

ஆ. இயேசு தம்முடன் தம் மக்கள் நித்தியத்தைக் கழிப்பதற்காக பரலோக ஆசரிப் புக்கூடாரத்தில் என்ன ஊழியம் செய்கிறார்? யோவான் 14:1-3; ரோமர் 8:34; எபிரெயர் 7:25.

இ. கிறிஸ்துவைச் சந்திக்க செய்யும் நமது நமது ஆயத்ததில் சேர்க்கப்படுவது எது? 1 யோவான் 3:3; 2 கொரிந்தியர் 7:1.

'நம்முடைய ஊழியத்தில், இச்சையடக்க சீர்திருத்தத்திற்கு அதிக கவனம் செலுத் தப்படவேண்டும். சீர்திருத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஒவ்வொரு கடமையும் மனந் திரும்புதல், விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஆத்துமாவை ஒரு புதிய, மேன்மையான வாழ்விற்கு உயர்த்துவது என்பதே இதன் பொருள் ஆகும். இவ்வாறாக, ஒவ்வொரு மெய் சீர்திருத்தமும் மூன்றாம் தூதனுடைய தூதின் ஊழியத் தில் தனக்கெனத் தனியிடம் உடையது. விசேஷமாக இச்சையடக்கச் சீர்திருத்தம் நமது கவனத்தையும் ஆதரவையும் வேண்டுகின்றது. நமது முகாம் கூட்டங்களில் இந்த ஊழியத்திற்கு நமது கவனத்தை ஈர்த்து, அதனை ஒரு உயிருள்ள விஷயமாக ஆக்க வேண்டும். நாம் மக்களுக்கு உண்மையான இச்சையடக்கத்தின் அடிப்படைகளை எடுத்துரைத்து, இச்சையடக்க உறுதிமொழியில் கையொப்பமிடுபவர்களுக்கு அழைப்பு விடுக்கவேண்டும். தீய பழக்கங்களின் பிடியில் அடிமைப்பட்டிருப்பவர்க ளுக்கு எச்சரிக்கையான கவனம் தரப்படவேண்டும். நாம் அவர்களை கிறிஸ்துவின் சிலுவையினிடம் வழிநடத்திச் செல்லவேண்டும்.'' -Testimonies vol.6, p.110.

''ஒரு மக்கள் கூட்டமாக நம்மை சீர்திருத்தி, கடிந்துகொண்டு, நமது பிழைகளை அகற் றிப்போட வழிநடத்தும் எந்தவொரு செயலும் நம்மீது வரவொட்டாதபடிக்குத் தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் சாத்தான் எடுத்துவைத்துள்ளான். ஆனாலும் தேவனுடைய பெட்டியைச் சுமக்கும் மக்கள் உண்டு. உடன்படிக்கைப் பெட்டியை இனி சுமக்காதவர்கள் சிலர் நம்மிடமிருந்து வெளியேறிப் போவார்கள். ஆனால் அவர்களால் சத்தியத்தைத் தடுக்கும் சுவர்களை உண்டாக்க முடியாது; ஏனெனில், அது முடிவுவரை மேற்கொண்டும் மேலேயும் செல்லும். கடந்த காலத்தில் தேவன் மனிதரைத் தட்டி

யெழுப்பியுள்ளார் அவர் இன்னுங்கூடத் தம் கட்டடத்தைக் கட்ட ஆயத்தமாய், சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மனிதரை உடையவராயிருககிறார்... தேவன் தம்முடைய ஆவியை மனிதர் மீது வைக்கும்போது, அவர்கள் ஊழியம் செய்வார்கள். அவர்கள் ஆண்டவருடைய வசனத்தைக் கூறி அறிவிப்பார்கள்; அவர்கள் தங்கள் குரலை ஓர் எக்காளத்தொனியைப் போல் உயர்த்துவார்கள். சத்தியம் அவர்களது கரங்களில் தனது வல்லமையைக் குறைக்கவோ இழக்கவோ செய்யாது. அவர்கள் மக்களுக்கு அவர்களது மீறுதல்களையும், யாக்கோபின் வீட்டாருக்கு அவர்களது பாவங்களையும் சுட்டிக்காட்டுவார்கள்." -Testimonies to Ministers, p.411.

வியாழன் **செப்டம்பர் 11**

5. நாம் காலத்தை மீட்போம்

அ. கிறிஸ்துவின் வருகை இத்தனை ஆண்டுகளாகத் தாமதித்துவிட்டது ஏன்? 2 பேதுரு 3:9; 1 தீமோத்தேயு 2:3.

___

___

"இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகளாக வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல; அவர்களை நேரடியாகக் கானான் தேசத்திற்குள் நட்ததிச் சென்று, அங்கே அவர்களை ஒரு தூய, சந்தோஷமான ஜனமாகக் குடியமர்த்த அவர் விரும்பினார். ஆனால், 'அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற் போனார்கள்' (எபிரெயர் 3:19). அவர்களது மருளவிழுகையினாலும், விசுவாச துரோகத்தினாலும் அவர்கள் பாலைவனத்திலே மடிந்துபோனார்கள்; மற்றவர்களோ, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க எழுப்புதல் பெற்றார்கள். அதைப் போலவே, கிறிஸ்துவின வருகை இவ்வளவு நீண்ட காலமாகத் தாமதிக்கவேண்டும் என்பதும், அவரது மக்கள் இந்தப் பாவமும் துயரமும் மிக்க உலகிலே பல்லாண்டுகளாக தரித்திருக்கவேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமல்ல. ஆனால் அவிசுவாசம் அவர்களை தேவனிடமிருந்து பிரித்துவிட்டது. அவர் அவர்களுக்கு நியமித்த வேலையை செய்ய மறுத்துவிட்ட நிலையில், தூதைப் பிரசங்கிக்க மற்றவர்கள் எழுப்புதல் அடையப் பெற்றார்கள். உலகத்திற்கு கருணை காட்டும் வகையில், எச்சரிப்புகளைக் கேட்க பாவிகளுக்கு ஒரு வாய்ப்பு கிட்டவேண்டும், தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படும் முன், அவரிலே அவர்கள் ஒரு புகலிடத்தைக் கண்டடைய வேண்டும் என்று இயேசு தம் வருகையைத் தாமதிக்கிறார்." -The Great Controversy, p.458.

"கர்த்தர் தம்முடைய வருகையை ஏன் இவ்வளவு காலமாகத் தாமதிக்கிறார்? பரலோக சேனை மொத்தமும் இந்த இழந்துபோன உலகிற்காக இறுதிக்கட்ட வேலையை நிறைவேற்றக் காத்திருக்கிறது. தங்கள் விளக்குகளுடன் கலங்களிலே இரக்கத்தின் எண்ணெயை உடையவர்களாகிய வெகுசிலர் தங்கள் விளக்குகளை ஏற்றி, உலகத்தில் ஒளி வீசி பிரகாசிக்கச் செய்யாததால்தான் இது இப்படி உள்ளது. இதற்கு மிஷனரிகள் வெகு சிலராக இருப்பதே காரணமாகும்." -Maranath, p.55.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. தேவனின் மீதியானவர்கள் எந்தக் குறிப்பிட்ட பகுதிகளில் ஒரு தனிப்பட்ட ஜனமாயிருக்கிறார்கள்?

ஆ. சபை அலுவலர்கள் ஆரோக்கிய சீர்திருத்தத்தில் எவ்வாறு ஒரு தலைமைப் பங்கு ஆற்றவேண்டும்?

இ. சரியான ஆரோக்கிய சீர்திருத்தக் கோட்பாடுகளை முன்வைத்தல் மக்களி டையே எதை உருவாக்கும்?

ஈ. ஆரோக்கியத் தூதின் அடிப்படைகளை நாம் புரிந்துகொள்ளும்போது, நாம் எதற்கு கையொப்பமிடத் தயாராக இருக்கவேண்டும்?

உ. இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றிய செய்தியை நாம் முன்வைப் பதுடன் நமது உணவுமுறை எவ்வாறு தொடர்புடையதாய் இருக்கிறது?

நிகழ்கால சத்தியத்தில் முன்னேறுவதும் வளர்வதும்

"இதினிமித்தம் இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும் உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்." (2 பேதுரு 1:12).

"கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய நீதியைப்பற்றியுமே சிந்தித்துக்கொண்டிருந்தால், சுயநீதிக்கும் சுயத்தை மகிமைப்படுத்துவதற்கும் இடமிருக்காது... கிறிஸ்துவைப் பற்றிய அறிவின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடர்ச்சியான முன்னேற்றம் உண்டு." -Our High Calling, p.60.

மேலும் படிக்க: Patriarchs and Prophets, pp.169, 170.

ஞாயிறு செப்டம்பர் 14

1. ஆபிரகாமின் பிள்ளைகள்; ஆவிக்குரிய இஸ்ரவேல்

அ. கிறிஸ்துவைப் பின்தொடரவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவும் தீவிர நாட்டம் கொண்ட விசுவாசிகளால் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? ரோமர் 4: 9, 13,கலாத்தியர் 3 : 29; யோவான் 8 : 39.

"பரிசேயர்கள் தங்களைத் தாங்களே ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அறிவித்துக் கொண்டார்கள். ஆபிரகாமின் கிரியைகளை செய்வதனால் மட்டுமே இந்த உரிமை கோருதல் உறுதிப்படுத்தப்படமுடியும் என்றார் இயேசு. ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகள், அவன் வாழ்ந்ததுபோல தேவனுக்குக் கீழ்ப்படிந்த ஒரு வாழ்வு வாழ்வார்கள்... வெறுமனே ஆபிரகாமின் மரபு வழி சந்ததியாய் மட்டும் இருப்பது பயனற்றது. அவனோடு ஆவிக்குரிய தொடர்பின்றி, அதே ஆவியை உடையவர்களாகவும், அதே கிரியைகளையும் வெளிப்படுத்தாவிட்டால், அவர்கள் அவனுடைய பிள்ளைகள் அல்ல.

"நீண்ட நெடுங்காலமாக கிறிஸ்தவ உலகைக் கலக்கிவரும் ஒரு கேள்வி அப்போஸ்தல மரபு சந்ததி பற்றிய கேள்வி. இந்த அடிப்படை முக்கியத்துவம் தாங்கியதாய் இருக்கிறது. ஆபிரகாமின் சந்ததி என்பது பெயராலோ மரபு வழியாலோ அல்ல, மாறாக பண்பின் ஒருமைப்பாட்டினாலேயே நிரூபணம் ஆயிற்று. எனவே அப்போஸ்தல மரபு சபை அதிகாரத்தின் மாற்றத்தால் கிடைப்பது அல்ல, மாறாக ஆவிக்குரிய அந்நியோந்நியத்தினால் வருவது ஆகும். அப்போஸ்தல ஆவியினால், நம்பிக்கையினால், அவர்கள் போதித்த சத்தியப் போதனையினால் தூண்டப்பட்ட வாழ்க்கைதான் அப்போஸ்தல மரபின் உண்மையான ஆதாரம். சுவிசேஷத்தின் முதல் போதனையாளர்களின் வழிவந்த மனிதரிடம் அடங்கியுள்ள அம்சம் இதுவே." -The Desire of Ages, pp.466, 467.

2. ஒளி மேலும் மேலும் பிரகாசிக்கிறது

அ. பண்டைய இஸ்ரவேலரின் தவறுகளிலிருந்து எந்தவிதத்தில் நாம் எச்சரிப் படையவேண்டும்? எபிரெயர் 3:19.

"நாற்பது ஆண்டுகளாக அவிசுவாசம், முறுமுறுப்பு, கலகம் ஆகியவை பழங்கால இஸ்ரவேலரை கானான் தேசத்திற்கு வெளியிலேயே தடுத்துவிட்டன. இதே பாவங்கள் நவீனகால இஸ்ரவேலரையும் பரலோகக் கானானுக்குள் போகாதபடி தாமதப் படுத்திவிட்டன. இந்த இரண்டில் எதிலுமே தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தவறாக வில்லை கர்த்தருடைய மக்களின் அவிசுவாசமும், உலகநேசமும், தத்தம் செய்யாமையும், சலித்துக்கொள்ளுதலுமே நம்மை இந்தப் பாவமும் துயரமும் நிறைந்த உலகிலே இத்தனை ஆண்டுகளாக தரித்திருக்கும்படி செய்துவிட்டது." -Selected Messages, bk.1, p.69.

ஆ. புதிய பூமியின் சுதந்தரவாளிகளின் பண்புநலன்கள் எப்படிப்பட்டவை? சங்கீதம் 37:11; ஏசாயா 57:15; 66:2.

இ. அந்த உன்னதமான நாட்டை நாம் உண்மையாகவே நாடுவோமானால், இன்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய சத்தியங்கள் எவை? ஒவ்வொரு தலைமுறைக்கும் அதிகம் அதிகமான ஒளியானது ஒப்படைக்கப்பட எவ்வாறு சிலாக்கியம் அளிக்கப்பட்டுள்ளது? 2 பேதுரு 1:12; யூதா 3, 20,21.

"தங்கள் காலத்திற்கு விசேஷமாகப் பொருந்தி வருகிற நிகழ்கால சத்தியங்களுக்கு தேவன் பணியமர்த்துபவர்களுக்குக் கிடைக்கும் பங்கு எதிர்ப்புதான். லுத்தரின் காலத்தில் ஒரு நிகழ்கால சத்தியம் இருந்தது - அந்தக் காலத்திற்கேற்ற விசேஷ முக்கியத்துவம் கொண்ட சத்தியம் அது; இன்றைய சபைக்கும் ஒரு நிகழ்கால சத்தியம் உள்ளது." -The Great Controversy. p.143.

"ஒவ்வொருவரும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தின்படியே நியாயந் தீர்க்கப்படுவார்கள்." -In Heavenly Places, p.153.

ஈ. தம் மக்களுக்குக் கொஞ்சங்கொஞ்சமாக சத்தியத்தை நிலைநிறுத்தும் தேவனுடைய திட்டத்தில், இந்தக் கடைசி நாட்களில் உள்ள அவர்களுக்கு அவர் வெளிப்படுத்திய "நிகழ்கால சத்தியத்தின்" விசேஷமான அம்சம் யாது? நீதிமொழிகள் 4 : 18; ஏசாயா 58 : 12-14 (பார்க்க ஏசாயா 61 : 1-4).

"தேவனுடைய மக்களுக்கு ஒளியைத் தந்த உடன்படிக்கைப் பெட்டி, கற்பனைகள் அடங்கிய மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் கதவை இயேசுவானவர் திறந்துள்ளபடியால், அவர்கள் ஓய்வுநாள் கேள்வியைக் கொண்டு பரீட்சிக்கப்படுவார்கள்...

"பரிசுத்த ஸ்தலத்தில் இயேசுவின் பரிந்து பேசும் ஊழியம் முடிவடைந்து, வர் இரண்டாம் திரை வழியாய் கடந்துசெல்லும் வரையில், ஓய்வுநாள் மீதான தற்போதைய பரீட்சை வர இயலாது." -Early writings, p.42.

3. ஆரோக்கிய சீர்திருத்தத்தில் முன்னேற்றம்

அ. 1858-இல் அட்வெந்து விசுவாசிகளால் பன்றிக்கறி எவ்வாறு கருதப்பட்டது? அந்த நேரத்தில் சகோதரி ஒயிட் அவர்களின் செய்தி என்ன?

"பன்றி இறைச்சியைப்பற்றிய உங்களது எண்ணங்கள், அதை நீங்களாகவே வரு வித்துக்கொண்டதுபோல், எந்தக் கெடுதலும் இல்லாதது என்று நிரூபிப்பதுபோல் இருப் பதாக நான் கண்டேன்; ஆனால், ஆனால் உங்கள் தீர்மானத்திலும் அபிப்பிராயத்தி லும் இந்தக் கேள்வியை ஒரு பரீட்சையாக ஆக்கியிருந்தீர்கள், இந்த விஷயத்தில் உங் கள் செயல்கள் உங்கள் விசுவாசத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. தேவன் தம் மக்களிடம் பன்றி இறைச்சியிலிருந்து விலகி நிற்குமாறு கேட்டால், அவ்விஷயம் குறித்து அவர்களுக்கு அவர் உணர்த்துவார். தமது ஊழியச் சுமையைச் சுமத்தாத தனி மனிதர்களுக்கு அவர்களது கடமையைக் காட்டுவதுபோல, தமது நேர்மையுள்ள பிள்ளைகளுக்கும் அவர்களது கடமை இன்னதென்று காட்டச் சித்தமுடையவராக அவர் இருக்கிறார். பன்றியிறைச்சியினின்று விலகி நிற்கவேண்டியது சபையின் கடமையென்றால், அதனை இரண்டு அல்லது மூன்று பேர்களுக்கு மேற்பட்டவர்களுக் குக் கண்டுணர்த்துவார். தேவன் தம்முடைய சபைக்கு அவர்களின் கடமையைப் போதிப்பார்." -Testimonies, vol.1, pp.206, 207.

ஆ. ஜேம்ஸ் ஒயிட் அவர்களால் எழுதப்பட்ட அடிக்குறிப்பு ஒன்று, மேற்கண்ட அறிக்கையின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள நமக்கு எவ்வாறு உதவு கின்றது? ரோமர் 13:11,12,14.

"ஆரோக்கிய சீர்திருத்தத்தின் மீது வெளிச்சம் தரப்பட்ட, 1863-இன் மாபெரும் தரிசனத்துக்கு கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே 1858, அக்டோபர் 21-இல் இந்தக் குறிப்பிடத்தக்க சாட்சி எழுதப்பட்டது. சரியான நேரம் வந்தபோது, நம் மக்கள் அனைவரையும் அசைக்கத்தக்க வகையில் இந்த விஷயம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய ஞானமும் நற்குணமும் எவ்வளவு அற்புதமானவை! 1858-இல் எழுந்த பன்றிக் கறிக் கேள்வியைப் போன்று, இப்பொழுது பால், உப்பு, சர்க்கரை குறித்த கேள்வியை அடுக்குவது தவறாகிவிடக்கூடும்." -Testimonies, vol.1, p.206. [J.W.., note to second edition.]

இ. தேவன் தம் மக்களை சத்தியத்தைப்பற்றிய அறிவில் எவ்வாறு முன்னேற்ற மான முறையில் வழிநடத்துகிறார்? யோவான் 16:13; எபேசியர் 4:11-15.

"தேவன் ஒரு ஜனத்தை வழிநடத்துகிறார், ஒருவர் இதையும் இன்னொருவர் அதை யும் நம்புகிற, இங்கும் அங்கும் உள்ள ஒருசில தனி மனிதர்களை அல்ல. தேவனு டைய தூதர்கள், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்துகொண்டிருக் கிறார்கள். மூன்றாம் தூதன் ஒரு ஜனத்தை சுத்திகரிக்க வழிநடத்துகின்றான்; அவர்கள் அவனோடு ஒன்றுபட்டுச் செல்லவேண்டும். சிலர் அவரது ஜனத்தை வழிநடத்தும் தூதர் களுக்கு முன்பாக ஓடுகிறார்கள்; ஆனால் அவர்கள் ஒவ்வொரு அடியிலும் பின்திரும் பிச் சென்று, தலைமை தாங்கும் தூதனைவிட வேகமாகப் போகாமல், பணிவாகப் பின் தொடரவேண்டும். தேவன் தம் மக்களை, அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான சத்தியங்களைப் பெற்று, அவற்றின் மீது செயல்படக்கூடிய வேகத்தைவிட அதிக வேகத் தில் வழிநடத்துவதில்லை என்று நான் கண்டேன்." -Testimonies, vol.1, p.207.

4. தேவனுடைய வசனத்தின் அடிப்படைகளைப் பிரித்தறிதல்

அ. நாம் 'பூரணராகும்படி கடந்து போவது' எவ்வாறு (எபிரெயர் 6:1,2)? நீதிமொழிகள் 4:18, 2 பேதுரு 1:3-8.

____

"அப்போஸ்தலர் [பேதுரு] கிறிஸ்துவ வளர்ச்சி எனும் ஏணியை விசுவாசிகளின் முன்னே வைக்கிறார், அதன் ஒவ்வொரு அடியும் தேவனை அறிகிற அறிவின் முன்னேற்றத்தையும், அதன்மீது ஏறுதல் என்பது, சும்மா நிற்கவேண்டியது இல்லை என்பதையும் குறிப்பிடுகின்றது." -The Acts of Apostles, p.530.

ஆ. அசுத்தமான உணவுகள்பற்றி கிறிஸ்தவ உலகில் நுழைந்துள்ள தவறான புரிந்துகொள்ளுதல் என்ன? அப்பேஸ்தலர் 10:10-16.

____

இ. இந்த தரிசனத்தின் உண்மைப் பொருளை தேவன் எவ்வாறு வெளிப்படுததினார்? அப்போஸ்தலர் 10:17-20, 28.

____

____

"வானத்திலிருந்து இறக்கப்பட்ட துப்பட்டி போன்ற கூடும் அதிலிருந்தவையும பற்றிய தரிசனம், புறஜாதியாருக்கு எதிராகப் பேதுரு கொம்டிருந்த தவறான அபிப்பிராயத்தை விலக்கிவிட்டு, கிறிஸ்துவின் மூலமாக புறஜாதியினரும் யூதருடைய ஆசீர்வாதங்களிலும் சிலாக்கியங்களிலும் பங்கேற்கக்கூடியவர்களாகவும், இவ்வாறு அவர்களோடு சமமாக நன்மையடையக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவும் தரப்பட்டது. முன்பு அசுத்தமானவை என்று அறிவிக்கப்பட்ட மிருகங்களின் மாம்சத்தை உபயோகிக்க இருந்த தடையை தேவன் நீக்கிவிட்டதை உணர்த்துவதுதான் இந்த தரிசனம் என்றும், எனவே பன்றிகளின் மாமிசம் உணவுக்கு ஏற்றதாகிவிட்டது என்றும் சிலர் வாதிடுகிறார்கள். இது ஒரு மிகக் குறுகிய, தவறான விளக்கமாகும்; மேலும் இது வேதவசனங்களின் படியேயான தரிசன விவரத்திற்கும் அதன் விளைவுகளுக்கும் தெளிவான விதத்தில் எதிர்மாறானதாக உள்ளது.

"அந்தத் துப்பட்டியில் இருந்த எல்லாவகையான ஜீவஜந்துக்களைப்பற்றிய தரிசனம், எழுந்து அடித்துப் புசி என்று பேதுருவுக்குக் கட்டளையிடப்பட்டதும், தேவன் சுத்தமாக்கியவைகளை அவன் அசுத்தமானவை அல்லது தீட்டானவை என்று அழைக்கக்கூடாது எனப்பட்டதும், புறஜாதியாரின் உண்மை நிலையை அவன் மனத்திற்கு தெளிவுபடுத்தும் ஒரு சாதாரண சித்திரிப்புதான்; அதாவது கிறிஸ்துவினுடைய மரணத்தினால் அவர்கள் தேவனுடைய இஸ்ரவேலருடன் உடன் சுதந்தரவாளிகளாகிறார்கள் என்பதாகும். சீர்திருத்துதலுக்கும் போதனைக்கும் என இரண்டிற்காகவுமே அது பேதுருவுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவனுடைய ஊழியம் அதுவரை முற்றிலும் யூதர்களுக்காகத்தான் என்றிருந்தது; அவன் புறஜாதியாரை அசுத்தமான இனத்தவர்கள் என்றும், தேவனுடைய வாக்குத்தத்தங்களிலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்றுமே பார்த்திருந்தான். அவனது மனம் இப்பொழுது தேவனுடைய திட்டத்தின் உலகளாவியவிரிவை நன்கு புரிந்துகொள்ளும்படி நடத்தப்பட்டது." -The Spirit of Prophecy, vol.3, pp.327, 328.

5. மேல்நோக்கி எடுத்து வைக்கப்பட்ட காலடி

அ. மூன்றாம் தூதனுடைய தூதை விசுவாசிப்பவர்களின் நிலையில், அதிகம் மேம்படுத்தப்பட்ட, மறுவெளிப்பாடான வேத வெளிச்சம் எவ்வாறு ஒரு மாற்றத்தை அருளியது? உபாகமம் 14:8; ஏசாயா 65:3,4; 66:17.

"தேவனிடமிருந்து நேரடியாக வந்த ஒளி என்று நீங்கள் நம்பி கைக்கொள்கிறதான வெளிச்சத்தையும் அறிவையும் தேவன் கொடுத்துள்ளார்; அது உணவு ஆசையை மறுதலிக்குமாறு உங்களை அறிவுறுத்துகின்றது. பன்றியிறைச்சியை உபயோகிப்பது அவரது வெளிப்படையான கட்டளைக்கு எதிரானது; அவர் தம்முடைய அதிகாரத்தை விசேஷமாகக் காட்ட விரும்பியதால் அல்ல, மாறாக அதை உண்பவர்களுக்கு அது கேடு உண்டாக்கும் என்பதாலேயே அக்கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. அதை பயன்படுத்துவது இரத்தத்தை அசுத்தமாக்கும்; அதனால் கண்டமாலை முதலான கட்டிகள் உடலைக் கெடுக்கும்; முழு உடலுமே துன்பம் அனுபவிக்கும். விசேஷமாக, மூளையின் நுண்ணிய கூருணர்வுடைய நரம்புகள் பலவீனமுற்று, பரிசுத்தமான காரியங்கள் இவை என்று பிரித்தறிய முடியாதபடி மந்தமடையும்; அதற்கு மாறாக அவை சாதாரண காரியங்களைப்போல் கீழ்மட்டத்தில் வைக்கப்படும். தேவனுடைய மக்கள் இப்படிப்பட்ட உணவுப்பொருள்களை தாங்க இயலாத நிலையில் உடனேயே இதை உபயோகிப்பதால் நோய் உண்டாகிறது என வெளிச்சமானது காட்டுகின்றது. இந்த வெளிச்சத்துக்கு நீங்கள் இடமளித்திருக்கிறீர்களா?" -Testimonies [1868], vol.2, p.96.

"பன்றியின் திசுக்களில் ஒட்டுயிரிகள் மிகுந்துள்ளன. பன்றியைக் குறித்து தேவன், 'அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; இவைகளின் மாம்சத்தைப் புசியாமலும் இவைகளின் உடலைத் தொடாமலும் இருப்பீர்களாக' (உபாகமம் 14:8) என்றார். பன்றியின் இறைச்சி உணவுக்குத் தகுதியற்றது என்பதாலேயே இக்கட்டளை கொடுக்கப்பட்டது. பன்றிகள் அழுகிய பொருள்களைத் தின்று சுத்தப்படுத்தும் தோட்டிகள், இது ஒன்றுதான் அவை செய்யக்கூடிய பணி. அவற்றின் இறைச்சியை ஒருபோதும், எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் மனிதர்கள் தின்னக்கூடாது. எந்த ஜீவராசியும் அதன் இயற்கைக் கூறில் அசுத்தமாக இருக்கின்ற நிலையில், அருசியான ஒவ்வொரு பொருளையும் அது தின்கின்ற நிலையில், அதன் மாம்சம் முழுநிறைவானது என்று சொல்வதற்கு இடமில்லை." -The Ministry of Healing, pp.313, 314.

ஆ. இயேசுவின் இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தப்படுகையில், ஆரோக்கிய சீர்திருத்தம் நமக்குத் தேவையாக இருப்பது ஏன்? 1 கொரிந்தியர் 6:19,20; 1 தெசலோனிக்கேயர் 5:23; 2 பேதுரு 3:14.

"நமது சரீரங்கள், நாம் எதை உண்கிறோமோ அதனால் ஆனவை. ஊட்டம் நிறைந்த உணவுகளை உட்கொள்வதால் நாம் நல்ல இரத்தம் உறுதியான தசைகள், உயிர்ப்புடன் கூடிய ஆரோக்கியம் உடையவர்களாவோம்... பொழுது விடியும்போது வெளிச்சம் மங்கலாகவும் குறைவாகவும் உள்ளது; ஆனால் சூரியன் மேலேறும்போது, அதன் கதிர்கள் நண்பகலை எட்டும்வரை அதன் ஒளி பெருகி வல்லமைகொள்கிறது. கிறிஸ்தவனின் ஒளியும் இந்த வழியில்தான் பெருகுதல்வேண்டும். நாம் கிறிஸ்துவைப்பற்றி நேற்று அறிந்ததைவிட இன்று அதிகம் அறியவேண்டியவர்களாக இருக்கிறோம்; நமது கர்த்தரும் இரட்சகருமானவரை அறிகிற அறிவிலும் கிருபையிலும் நாம் வளரவேண்டியவர்களாக இருக்கிறோம். சோதனைக் காலத்தில் அவரில் அதிக உறுதியாக நம்பவேண்டியவர்களாக இருக்கிறோம். -The Review and Herald, April 14, 1891.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இவ்வளவு காலமாகத் தாமதிப்பது ஏன்?

ஆ. தேவனுடைய சத்தியம் படிப்படியாகப் பரவிவரும் வெளிச்சம் என்றும், என் மீது பிரகாசமான ஒளிக்கதிர்கள் வீசும்போது, விசுவாசத்தினால் முன்செல்லும் ஆபிரகாமின் மனப்பான்மையை நாம் பிரதிபலிக்கவேண்டியவர்களாய் இருக் கிறோம் என்றும் நான் உண்மையிலேயே புரிந்துகொண்டுள்ளேனா?

இ. பன்றியிறைச்சியையும் மற்ற எல்லா அசுத்தமான உணவுகளையும் உண்பது குறித்து இன்னும் அதிக வெளிச்சத்தில் முன்னேற்றத்தை நாம் எவ்வாறு காண்போம்?

ஈ. வெளிச்சம் ஒரேயடியாக தரப்படாமல், படிப்படியாக வெளிப்படுத்தப்படுவது ஏன்?

உ. பன்றியின் ஒரே பயனுள்ள பணி என்ன?

''தேவ வசனத்தில் அநேக விலையேறப்பெற்ற சத்தியங்கள் அடங்கியுள்ளன; ஆனால் மந்தைக்கு இப்பொழுது தேவையானது **'நிகழ்கால சத்தியம்'** ஆகும். மந்தையை ஒன்றுபடுத்தாததும், ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்தாததுமாகிய விஷயங்களில் கவனத்தை வைத்து நிகழ்கால சத்தியத்தின் முக்கியமான அம்சங்களிலிருந்து தூதுவர்கள் ஓடிப்போகிற அபாயத்தை நான் கண்டேன்.'' -Early Writings, p.63.

''நாம் உலகத்தை வைத்தோ, மனிதரின் அபிப்பிராயங்களை வைத்தோ, நாம் சத்தியத்தைத் தழுவும் முன்பு எப்படியிருந்தோமோ அதை வைத்தோ நம்மை எடைபோடக்கூடாது. ஆனால் உலகத்தில் இப்பொழுது நமக்கிருக்கிற விசுவாசம், நிலைமை ஆகியவை கிறிஸ்துவின் பின்னடியார்களாக ஆனது முதல் நமது ஓட்டம் தொடர்ந்து முன்னேயும் மேல்நோக்கியும் எவ்வாறு இருந்திருககமோ அத்துடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.'' -Testimonies vol.1, p.406.

''கிறிஸ்தவப் பண்பின் சிறப்பு கிறிஸ்துவைப் போன்ற சாயலில் உள்ளது. தொடர்ந்த முன்னேற்றத்திற்கான பாதை ஒன்று நம்முன்னே திறந்துள்ளது. நல்லதும் தூயதும், மேன்மையானதும் உயர்ந்ததுமான அனைத்தையும் உள்ளடக்கிய உயர்ந்த தரத்தைப் பெற, நாம் எட்டிப்பிடிக்கவேண்டிய இலட்சியம் ஒன்று நமக்கு உண்டு. பண்பின் முழுமையை நோக்கி முன்னேயும் மேல்நோக்கியும் தொடர்ந்து முயற்சி செய்யவும் தொடர்ந்து முன்னேறவும் வேண்டியுள்ளது...

''உங்களுடைய பரிசுத்தமாக்கப்படுதல் உட்பட ஒவ்வொரு மனிதனைப்பற்றியும் அக்கறை கொள்வது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. நம்முடைய மேல்நோக்கியதும், பரலோகத்தை நோக்கியதுமான வழியைக் குறித்துப் பேசுகையில், நம்முடைய ஒவ்வொரு சத்துவமும் மிகுந்த விசுவாசமுள்ள பணியைச் செய்வதற்கு மிகுந்த ஆரோக்கியமான நிலைமையில் வைத்துக் காக்கப்படவேண்டும். மனிதனுக்குத் தேவன் அருளிய வல்லமைகள் யாவும் முழுமையான பயனை எட்டிப்பிடிக்கும் வகையில் வைக்கப்படவேண்டும்.'' -Special Testimonies on Education, p.207.

''நாம் நல்ல தைரியம் கொள்ளவும், படிப்படியாக முன்னேயும் மேல்நோக்கியும், பரலோகத்தை நோக்கியும் முன் செல்ல வீட்டிலும் ஆலயத்திலும் கர்த்தரிடம் வேண்டுவோமாக.'' -Reflecting Christ, p.249.

''கிறிஸ்து தம்மை தம்முடைய ஆலயத்தில் வெளிப்படுத்த தீராத வாஞ்சையுடன் காத்திருக்கிறார். கிறிஸ்துவினுடைய பண்பு அவருடைய மக்களிடம் பூரணமாக மறுஉருவாக்கம் பெற்றால், அதன் பின்னர் அவர் வந்து அவர்களைத் தம்முடையவர்களாகச சொந்தங்கொண்டாடுவார்.'' -Christ's Object Lessons, p.69.

நித்தியத்திற்காக ஆயத்தப்படுதல்

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்." (மத்தேயு 5:48).

"நமக்கு ஆரோக்கியம் கிடைக்கவேண்டுமென்றால், நாம் அதற்குரிய வழிகளில் வாழ வேண்டும். நாம் பூரணமான கிறிஸ்தவப் பண்பை உடையவர்களென்றால், அதற்காகவே நாம் வாழவேண்டும்." -Counsels on Diet and Foods, p.241.

மேலும் படிக்க: Selected Messages, bk.3, p.427.

ஞாயிறு — செப்டம்பர் 21

1. உணவு சீர்திருத்தம், ஒரு வளர்ந்து செல்லும் திட்டம்

அ. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஏழாம்-நாள் வருகையினருக்கு மிக ஆரம்பத்திலேயே வந்த பரீட்சை எது? ஏன்? பிரசங்கி 3:1.

____

____

"என் சகோதரனே, உணவைப்பற்றிய கேள்வியின் மீது தேவனுடைய மக்களுக்காக ஒரு பரீட்சையை வைக்க நீ இருக்கவில்லை." -Medical Ministry, p.288.

"உணவைக் குறித்த விஷயத்தில் எந்தவொரு சரியான கோட்டையும் பின்பற்றும்படி நாம் எதையும் குறிப்பிட்டுக் காட்டுவதில்லை... நாம் சபை சகோதரத்துவத்தில் உள்ளவர்களை பரீட்சை பார்க்கும்படி மாம்சம் உபயோகிப்பதை முடிவு செய்யவேண்டியவர்களல்ல... மிகக் கட்டுப்பாடான உணவுமுறையை சிபாரிசு செய்ய இன்னும் வேளை வரவில்லை." -Testimonies, vol.9, pp.159, 163.

ஆ. உணவு சீர்திருத்தத்தைக் குறித்த விஷயத்தில் தேவனுடைய மக்கள் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்ட திட்டம் யாது? 1 கொரிந்தியர் 10:31.

____

____

"நாம் காலத்தின் முடிவை நெருங்குகையில், ஆரோக்கிய சீர்திருத்தம், கிறிஸ்தவ இச்சையடக்கம் குறித்த கேள்வியின்மீது நாம் மேலும் மேலும் உயர்ந்து எழும்பவேண்டும்." -Testimonies, vol.6, p.112.

"உணவுமுறை சீர்திருத்தம் முன்னேறிச் செல்வதாக. பால், வெண்ணெயின் உபயோகமின்றி உணவை எப்படித் தயாரிப்பது என்று மக்கள் கற்பிக்கப்படுவார்களாக... ஏனென்றால் விலங்குகளிடம் உண்டாகும் நோய்கள் அதிகரிக்கின்றன... நமது பூமியைச் சபிக்கும் நோய்களினால் ஜீவராசிகள் அனைத்தும் வருந்திப் புலம்பும் காலம் நெருங்குகிறது." -Testimonies, vol.7, p.135.

2. 1900களின் ஆரம்ப காலத்தில்

அ. 1900களின் ஆரம்பத்தில் என்ன எச்சரிப்பு வழங்கப்பட்டது?

"நான் ஏழைகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில், அதிக ஊட்டச்சத்து உடைய உணவை உண்ணவேண்டுமென்று அவர்களிடம் கூறுமாறு அறிவுறுத்தப்பட்டேன். 'நீங்கள் முட்டை அல்லது பால் அல்லது கிரீம் சாப்பிடக்கூடாது, உங்களது உணவு தயாரிப்பில் வெண்ணெய் உபயோகிக்கக் கூடாது' என்று என்னால் அவர்களிடம் கூற முடியாது. சுவிசேஷம் ஏழைகளுக்குப் பிரசங்கிக்கப்படவேண்டும், ஆனால் மிகக் கட்டுப்பாடான உணவுமுறையை சிபாரிசு செய்ய இன்னும் வேளை வரவில்லை." -Testimonies, vol.9, p.163.

ஆ. 1901 ஜெனரல் கான்பரன்ஸ் கூட்டத்தில் என்ன வேண்டுகோள் விடுக்கப்பட்டது?

"இந்தக் கான்பரன்ஸ் முடிவடைவதற்கு முன்னர் நமது மக்களில் ஒவ்வொருவரும் தேவனுடைய வசனத்தின் எங்கும் பரவிவரும் சத்தியத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோன். பிராணிகளின் மாமிசம் அவர்கள் உண்ணத்தக்க சரியான உணவு அல்ல என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இப்படிப்பட்ட உணவு அவர்களிடமும் அவர்களது பிள்ளைகளிடமும் மிருகத்தனமான ஆசைகளை விளைவிக்கும். சரியான உணவுப் பழக்கங்கள், உடுத்தும் பழக்கம், வேலை செய்யும் பழக்கம் போன்றவற்றில் நமது பிள்ளைகள் கற்பிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உடைந்து நொறுங்கிய இயந்திரத்தைப் பழுதுபார்க்க நம்மால் முடியுமே, நாம் அதைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்." -The General Conference Bulletin, April 12, 1901.

இ. தலைமைத்துவத்தில் அநேகரால் ஆரோக்கியத் தூது தள்ளிவிடப்பட்டபடியால், 1903-இல் சபைக்கு தேவன் கொடுத்த எச்சரிக்கை யாது? மேற்கொண்டு என்ன எச்சரிப்பை ஆண்டவர் அவர்களுக்கு அனுப்பினார்?

"தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டி டாக்டர் கெல்லாகின் பணியை முடிந்த அளவு கடினமாக்குவதற்கு வெவ்வேறுபட்ட மனிதர்கள் முன்னெடுத்த முயற்சிகளுக்கு தேவன் சம்மதிப்பதில்லை. தேவன் ஆரோக்கிய சீர்திருத்தத்தின்மீது வெளிச்சம் தந்தார்; அதைத் தள்ளிவிட்டவர்கள் தேவனைத் தள்ளிவிட்டார்கள். நன்கு அறிந்த ஒரு சிலர் இதெல்லாம் டாக்டர் கெல்லாகினால் வந்தது என்றனர், அவர்கள் அவர்மீது போர் தொடுத்தனர்." -The General Conference Bulletin, April 6, 1903.

சபையார், தேவன் தங்களுக்குக் கையளித்த பங்கைச் செய்து முடிக்கவில்லையென்றால், ஆரோக்கிய சீர்திருத்த இயக்கம் அவர்கள் இல்லாமலேயே போகும்; தேவன் அவர்களுடைய விளக்குத்தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிப்போட்டார் என்பது தெரியவரும்." -Manuscript Releases vol.13, p.339.

3. முன்னுரைக்கப்பட்ட மாற்றங்கள்

அ. மீதியானவர்களுக்கான உணவுமுறை மாற்றங்களைப்பற்றிய சில தீர்க்க தரிசனங்களைக் குறிப்பிடுக.

1884: "இறைச்சியை முழுவதுமாக உபயோகிக்காத வரை, குறைவாக, மிகக் குறைவாகவே உபயோகியுங்கள். இறைச்சியானது விட்டுவிடப்பட்டால், நாக்குச் சுவையானது அந்த திசையில் பயிலப்படாவிட்டால், பழங்கள், தானியங்களின் மீதான விருப்பம் ஊக்குவிக்கப்பட்டால், ஆதியிலே தேவன் எப்படி இருக்கவேண்டுமென்று திட்டமிட்டாரோ அப்படி அது சீக்கிரமே ஆகும். அவரது மக்களால் இறைச்சி பயன்படுத்தப்படாது." -Counsels on Diet and Foods, p.407.

1890: "மனிதன் பூமியின் இயற்கை உற்பத்திப் பொருட்களைச் சார்ந்து வாழவேண்டும் என்ற ஆதிமுதல் திட்டத்திற்கு படிப்படியாக பின்னே நடத்துவதற்கு தேவன் முயலுகிறார் என்று மீண்டும் மீண்டும் எனக்குக் காட்டப்பட்டது. கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருப்பவர்களினிடையே, இறைச்சி உண்பது இறுதியில் விட்டுவிடப்படும்; அவர்களது உணவில் ஓர் அங்கமாக இருப்பதை இறைச்சி நிறுத்திவிடும். இந்த முடிவை நாம் எப்போதும் மனக்கண்ணில் வைத்திருந்து, அதை நோக்கி நாம் ஸ்திரமாக திட்டமிட்டுச் செயல்பட முயலவேண்டும்." -Counsels on Health, p.450.

1898: "கர்த்தர் தமது மக்களை, செத்த பிராணிகளின் மாம்சத்தைத் தொடவோ ருசிக்கவோ கூடாத நிலையிலே கொண்டுசெல்வார். ஆகையால் இந்தக் காலத்திற்குரிய சத்தியத்தைப்பற்றிய அறிவை உடைய எந்த மருத்துவராலும் இந்தப் பண்டங்கள் சிபாரிசு செய்யப்படாதிருக்குமாக. செத்த விலங்குகளின் மாம்சத்தை உண்பதில் பாதுகாப்பு இல்லை; மேலும் இன்னும் சிறிது காலத்திற்குள் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளும் மக்களிடமிருந்து பசுக்களின் பாலும்கூட விலக்கப்பட்டுவிடும்." -Counsels on Diet and Foods, p.411.

1899: "எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சம் என்னவென்றால், நாம் எந்தவொரு விலங்கு உணவையும் பயன்படுத்துவதை விட்டுவிட இன்னும் அதிக காலம் செல்லாது என்பதாகும். பாலும்கூட விட்டு விலக்கப்படும் நோய் வெகு விரைவாக திரண்டு வருகிறது. தேவனுடைய சாபம் பூமியின் மேலுள்ளது, மனிதன் அதைச் சபித்துள்ளான். மனிதனுடைய பழக்கங்களும் வழக்கங்களும், மனுக்குலத்துக்கு விலங்குணவு இல்லாத வேறு உணவை மாற்றாகத் தரப்படவேண்டிய நிலைக்கு இப்பூமியை மனிதன் கொண்டு வந்துவிட்டான். நமக்கு இறைச்சி உணவு தேவையேயில்லை. தேவன் வேறு ஏதாவது ஒன்றை நமக்குக் கொடுக்க முடியும்." -Ibid., pp.384, 385.

ஆ. கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தம் செய்துவருகிறவர்கள் எந்தத் தர அளவீட்டை எட்டவேண்டும்? மத்தேயு 5:48; பிலிப்பியர் 3:14-16.

"ஒரு நேரத்தில் ஒரு சிறிதளவு பாவத்தை விட்டுவிட உங்களால் இயலும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க முடிகிறதா? ஓ, சபிக்கப்பட்ட அந்த விஷயத்தை உடனே விட்டுவிடுங்கள்! கிறிஸ்து வெறுப்பவைகளை வெறுத்துவிடுங்கள், கிறிஸ்து நேசிப்பவைகளை நேசியுங்கள்." -Selected Messages, bk.1, p.327.

"பரிசுத்தம் தான் தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திபாரம்; பாவம் பரிசுத்தத்திற்கு எதிரானது; பாவம் தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறைந்துவிட்டது. பாவம் எவ்வளவு வெறுக்கத்தக்கது என்பதை மனிதரால் காணக்கூடுமானால், அதை அவர்கள் சகிக்கமாட்டார்கள், அதில் தம்மைப் பயிற்றுவிக்கவும் மாட்டார்கள். அவர்கள் வாழ்விலும் பண்பிலும் சீர்திருத்தம் செய்வார்கள்." -Testimonies to Ministers, p.145.

4. முழுமையை நோக்கி முன்னேறுதல்

அ. தேவனுடைய ராஜ்யத்தில் இருப்பதற்கு ஆயத்தம் செய்பவர்களுக்கான அவரது திட்டத்தின்படி, என்ன காரணங்களுக்காக அவர்கள் இறைச்சி உண்பதைவிட்டு விலகி நிற்கவேண்டும்? ரோமர் 8:22.

1884: "தொடர்ந்து இறைச்சி உண்பதால் உடம்புக்குக் கேடு உண்டாகும் வாய்ப்பு உள்ளது. தவறான, தாறுமாறான உணவு ஆசை என்பதைத் தவிர இதற்கு வேறு சாக்கு போக்கு எதுவும் இல்லை. உங்களால் முழுவதுமாக இறைச்சி உண்பதை விட்டுவிட முடியுமா? என்று நீங்கள் கேட்கலாம். நான் பதிலளிக்கிறேன், இறுதியில் இப்படி ஒரு நிலை வரும், ஆனால் இப்பொழுதே இந்த அடியை எடுத்துவைக்க நாம் ஆயத்தமாக இல்லை. மாமிசம் உண்பது இறுதியில் விட்டுவிடப்படும். விலங்குகளின் மாமிசம் நமது உணவுமுறையில் இனி அதிக காலத்துக்கு ஓர் அங்கம் வகிக்க முடியாது; அப்பொழுது ஒரு கசாப்புக் கடையை அருவெறுப்புடன் பார்ப்போம்." -Counsels on Diet and Foods, p.407.

1898: "இறைச்சி உண்ணும் விஷயத்தில் கடந்த காலத்தில் நாம் சாதிக்கவிருந்ததை இப்போது செய்யமுடியாது. இது எப்போதுமே மனுக்குலத்துக்கு ஒரு சாபமாக இருந்திருக்கிறது, ஆனால் மனிதனின் மீறுதலின், பாவத்தின் காரணமாக, பணிக்களாத் தலைவர்களிடம் தேவன் எடுத்துரைத்த சாபத்தில் இப்பொழுது அது குறிப்பாக அவ்வாறு சபிக்கப்பட்டுள்ளது. விலங்குகளிடம் காணப்படும் நோய் மேலும் மேலும் சாதாரணமாகிவருகிறது. இறைச்சியை முற்றிலுமாக விட்டுவிடுவதில்தான் நம்முடைய பாதுகாப்பு உள்ளது." -Ibid., p.412.

1902: "சத்தியத்தை விசுவாசிப்பதாக உரிமை கொண்டாடும் எல்லோரும், தங்களுடைய வாக்கினாலோ செய்கையினாலோ தேவனுக்கும் அவரது ஊழியத்துக்கும் எந்தவிதத்திலும் இடையூறு செய்யக்கூடாதபடி, உடல்-மன சக்திகளை பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பழக்கங்களும் வழக்கங்களும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்படும் வகையில் கொண்டுவரப்படவேண்டும். நமது உணவுமுறை மீது மிகக் கவனமான அக்கறையை நாம் காட்டவேண்டும். தேவனுடைய மக்கள் இறைச்சி உண்பதற்கு எதிராக ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று எனக்குத் தெளிவாக எடுத்துவைக்கப்பட்டது." -Ibid., p.383.

1902: "இறைச்சி உண்பவர்கள், அது குறித்து தேவன் தந்துள்ள எல்லா எச்சரிப்புகளையும் அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் பத்திரமான பாதைகளில் நடக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் எதுவும் அவர்களிடம் இல்லை. செத்த பிராணிகளின் மாமிசத்தை தின்பதற்கு அற்ப சாக்குபோக்கும் அவர்களுக்கு இல்லை." -Ibid.

1905: இறைச்சி உணவு உண்டாக்கும் ஒழுக்கத் தீமைகள் உடல் நோக்காடுகளை விடவும் குறைத்து மதிப்பிடத் தக்கவையல்ல. இறைச்சி உணவு உடல்நலத்திற்குத் தீங்கானது, மேலும் உடலைப் பாதிக்கும் எதுவும் அந்தப்படியே மனத்தையும் ஆத்துமாவையும் பாதிக்கும்." -Ibid.

1905: "நாம் வெகு விரைவிலேயே, ஓர் எளிய உணவுமுறையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டிய ஒரு காலத்தை அடைவோம். அந்தக்காலம் வெகு தொலைவில் இல்லை ஆகையால், நமது இப்போதைய உணவுமுறையிலிருந்து மிக மாறுபட்ட ஓர் உணவுமுறையை நாம் ஏற்கவேண்டிய கட்டாயம் வரும்." -Medical Ministry, p.281.

5. ஒரு பூரணமடைந்த மக்கள்

அ. சபையிலே யாரிடத்தில் உண்மையான சீர்திருத்தம் தொடங்கப்பட வேண்டும்? 2 தெசலோனிக்கேயர் 3:9; 1 கொரிந்தியர் 9:27; 11:1.

''ஊழியர்கள், தங்கள் சகோதரர்களை பலப்படுத்தும் முன் மன மாற்றமடைய வேண்டும். அவர்கள் தங்களைக் குறித்தே பிரசங்கிக்காமல், கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய நீதியைக்குறித்தும் பிரசங்கிக்கவேண்டும். மக்களிடம் சீர்திருத்தம் தேவை, ஆனால் அது முதலில் ஊழியர்களிடம் தனது சுத்திகரிக்கும் கிரியையைத் தொடங்கவேண்டும்...

''ஊழியத்தின் ஒரு முக்கியமான பகுதி என்னவென்றால், மூன்றாம் தூதனுடைய தூதை உள்ளது உள்ளபடியே அதே கிரியையுடன் தொடர்புடையதாக நிற்கும் ஆரோக்கிய சீர்திருத்தத்தை மக்களிடம் உண்மையாக முன்வைப்பதேயாகும். அவர்களே அதை ஏற்கத் தவறவும் கூடாது, சத்தியத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நடப்பவர்களிடம் அதனை வலியுறுத்தவும் வேண்டும்.'' -Testimonies, vol.1, pp.469, 470.

''இறைச்சி பரிமாறப்படும் மேஜையண்டையில் மற்றவர்களுடன் சேர்ந்து அதைத் தின்னும் ஊழியர்களின் மேல் சரியான நம்பிக்கை வைக்க நம்மால் இயலுமா?'' -Counsels on Diet and Foods, p.402.

''மூன்றாம் தூதனுடைய தூது அதன் முழு வீச்சில் பெற்றுக்கொள்ளப்படும்போது, மாநாட்டுக் கூட்டங்களிலும், சபையின் வேலையிலும், வீட்டிலும், மேஜையண்டையிலும், வீட்டு விஷயங்கள் எல்லாவற்றிலும் ஆரோக்கிய சீர்திருத்தத்திற்குரிய தனியிடம் தரப்படும். பின்னர் வலதுகரம் எடுத்துப் பரிமாறி, சரீரத்தைப் பாதுகாக்கும்.'' -Testimonies, vol.6, p.327.

ஆ. கேட்கப்படும் சீர்திருத்தம் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? அப்போஸ்தலர் 3:19-21; பிலிப்பியர் 1:6; 2 பேதுரு 3:14.

''இறைச்சி உணவுகள் தேநீர் காபி கொழுமையான, ஆரோக்கியமற்ற உணவுத் தயாரிப்புகளின் தீமைகளைக் குறித்த போதனையைப் பெற்றுக்கொண்டவர்களும், தியாகத்தின் மூலம் தேவனுடன் ஓர் உடன்படிக்கையை செய்துகொள்ளத் தீர்மானித்தவர்களும், தாம் ஆரோக்கியத்துக்கு ஏலாதவை என்று அறியும் உணவு மீதான ஆசையில் தொடர்ந்து மூழ்கிக் கிடக்கமாட்டார்கள். உணவு ஆசைகள் தூய்மை செய்யப்படவேண்டும், நல்லவையல்லாதவற்றில் சுய மறுப்பு நடைமுறையில் பின்பற்றப்படவேண்டும் என்று தேவன் கேட்கின்றார். அவரது மக்கள் அவர் முன்பாக பூரணப்பட்டவர்களாய் நிற்கக்கூடியவர்களாக ஆகும் முன்னர் இந்தப் பணி செய்து முடிக்கப்பட வேண்டும்.'' -Testimonies, vol.9, pp.153,154.

''தாம் பெற்ற வெளிச்சத்தில் வாழ்கிறவர்கள் மட்டுமே இன்னும் பெரிய வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.'' -Testimonies to Ministers, p.507.

''கர்த்தருடைய மக்கள் பரிசுத்தப்படுத்தப்பட்டு தூய்மையாக்கப்பட்ட மக்களாக இருக்கவேண்டும் என்பது அவருடைய நோக்கமாக இருக்கிறது.'' -Manuscript Release vol.13, p.47.

மீள்பார்வையும் சிந்தனைக்கான கேள்விகளும்

அ. மக்கள் உயரிய நிலையை ஏற்க ஆயத்தமற்றவர்களாய் இருக்கும்போது, தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலம் தயவு காட்டுகிறார் என்பதை நாம் எவ்வாறு அறிவோம்?

ஆ. 1900-களின் போது, இறைச்சி உண்பதை ஒரு சீஷத்துவ பரீட்சையாக ஆக்க இயலாமற் போனது ஏன்?

இ. கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர், மீதியான சபையின் உணவுமுறையில் இறைச்சியானது இடம்பெறாது என்று காட்டிய தீர்க்கதரிசனங்கள் எவை?

ஈ. உண்மை சீர்திருத்தம் எப்போதுமே எங்கிருந்து தொடங்குகிறது?

உ. முன்னுரைக்கப்பட்ட சீர்திருத்தம், நுட்பநியாய விசாரணை முடிவதற்குள் நிறைவடைந்துவிடுமா அல்லது கிறிஸ்துவின் வருகையின்போதுதான் நிறைவடையுமா?

''அப்போஸ்தலர் பின்வருமாறு கடிந்துணர்த்துகிறார்: 'பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்' (யாக்கோபு 4:8). இந்தப் பணியில் ஈடுபடுவதினாலும் தேவன் பேரில் ஜீவனுள்ள விசுவாசத்தை அப்பியாசிப்பதினாலும் பூரணமான கிறிஸ்தவப் பண்பைப் பெறுகிறோம். ஆத்தும ஆலயத்தைச் சுத்திகரிக்கிற, கிறிஸ்துவின் தோற்றத்திற்காக ஆயத்தம் செய்கிற பணி, நாம் இந்தச் சோதனையான உலகத்திலே இருக்கும்பொழுதே செய்து முடிக்கப்படவேண்டும். கிறிஸ்து வரும்பொழுது நம்மை எப்படிப்பட்ட பண்பில் காண்பாரோ அப்படியே நாம் தரித்திருக்கவேண்டும்.

''பண்பை வளர்க்கும் பணியில் நாம் அன்றாடம் முன்னேறிச் செல்லவேண்டும். நமது பாவம் நிறைந்த பழக்கங்களை நம்மிடமிருந்து பிரித்துவிட முயலும்போது, சில நேரங்களில் நம்மை நாமே துண்டுதுண்டாகக் கிழித்துக்கொள்வதாகத் தோன்றும்; ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவர் வசிக்கத் தக்க ஆலயங்களாக ஆகத் தகுதியுடையவர்களாக இருப்போமானால், கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண்களாகவும் பெண்களாகவும் முழு உயரத்தை எட்டுமளவுக்கு வளர்ச்சியடைய வேண்டுமென்றால், நாம் செய்ய வேண்டிய சரியான பணி இதுவே... நாம் நம்முடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனம் வருந்தி, அப்பாவங்களை மேற்கொள்ள நம்மால் முடிந்த அனைத்தையும் செய்து முடித்த பின்னர், சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரின் புண்ணியங்களில் ஓர் அமைதியான, அசைக்கமுடியாத பற்றுறுதியை அவர் நமக்கு வைத்திருக்கிறார்.

''நமது பாவம், ஆசாபாசம், பெருமையான வாழ்வை விட்டுவிட்டு, கிறிஸ்துவையும் அவருடைய புண்ணியங்களையும் சார்ந்துகொண்டு, அவரிடம் முழுவதுமாகச் சரணடைந்தால், அவர் வாக்களித்துள்ள எல்லாவற்றையும் நமக்காக நிறைவேற்றுவார்.'' -The Signs of the Times, September 29, 1887.

''[புதிதாக்கப்படும் பூமியில்] மனிதன் தன் இழந்த ராஜரீகத்தைத் திரும்பப் பெறுவான், கீழ்வரிசை உயிரினங்கள் அவனது ஆளுகையை மறுபடியும் ஏற்றுக்கொள்ளும்; கோபம் மிகுந்தவன் மென்மையானவனாகிவிடுவான், கோழை நம்பிக்கைக்குரியவனாகிவிடுவான். 'அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். ... என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை...' (ஏசாயா 11:6-9) என்று கர்த்தர் சொல்கிறார்.'' -The Review and Herald, July 1, 1915.

First Sabbath Offerings

JULY 5
for Russia
(See p. 4.)

AUGUST 2
for the Missionary schools
around the world
(See p. 35)

SEPTEMBER 6
for Los Angeles,
California, USA
(See p. 60.)